Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஏப்ரல் 21-27, 2002

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 456

# நிலவரங்களை மாற்றும் புலிகளின் அரசியல் பிரவேசம்!



## வன்னிப் பயணம்



## நெட்டிலிருந்து

துவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## இல்லறவாசியின் கடமைகள்

# ஆன்மீகம்



இந்து சமயத்தில் பிறந்து வளர்ந்து இல்லறத்தில் காலடி எடுத்து வைக்கும் ஒரு இந்து எப்படி இருக்க வேண்டும் என்று அர்த்தமுள்ள நமது இந்து மதம் கூறும் அரிய போதனையை பார்ப்போம். தனது எதிரிகளை சாமதான, பேத, தண்டத்தால் வெல்ல வேண்டும். தன் குழந்தைகளுக்கு நல்லொழுக்கமும், சமயபோத னையும் அளிக்க வேண்டும். மனைவி எல்லாவகையிலும் மகிழ்வுடன் இருக்குமாறு கவனித்துக்கொள்ள வேண்டும் ஊரில் உள்ள ஆலயங்களில் வழிபாடுகள்' நன்முறையில் நடைபெறச் செய்வதும், இறைவனை எண்ணிவாழும் துறவிகளைப் போற்றுவதும் இல்லறவாசியின் கடமையாகும்.

பொதுவாக நடுநின்று நாட்டிற்கும், வீட்டிற்கும் நல்லவனாக வாழ்வது ஒவ்வொரு ஆணினுடைய கட்டாய கடமைகளாகும்.தான் நல்ல வழியில் தேடிய பொருளால் நிலையான நல்லறங்களைச் செய்து குடும்பத்தையும் பேணவேண்டும். ஒவ்வொரு நாளும் பஞ்சம காயக்ஞும் செய்ய வேண்டும். பஞ்சம காயக்ஞும் செய்யத்தவறும் இல்லறத்தான் பாபியென்றும், கள்வனென்றும் ஸ்ரீமத் பகவத் கீதை கூறுகிறது. பஞ்சம காயக்ஞும் என்பது 1.பூத யக்ஞும், 2.நரயக்ஞும், 3.சிராாத்தம் பிதுர்யக்ஞும், 4.தேவ யக்ஞும், 5.பிரம்ம யக்ஞும் ஆகிய ஐந்துமாம்.

*சிவஸ்ரீ அ. அரசரெத்தினம், சேனையூர்.*

## ஞானத்தையே தேடுங்கள்!

ஆண்டவர் சாலமோன் அரசரின் கனவில் தோன்றி' நீ விரும்புவதைக் கேள் என்றார். அதற்கு சாலமோன் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை, தீமையைப் பகுத்தறியவும் வேண்டிய ஞானத்தை அடியேறுங்கு அளித்தருளும் என்று வேண்டினார். அதனால் ஆண்டவர் மகிழ்ந்து இதோ ஞானமும், அறிவும் நிறைந்த இதயத்தையும்' நீ என்னிடம் கேளாத செல்வத்தையும், புகழையும் உனக்குத் தந்தோம், இதில் உனக்கு ஈடிணையானவன் யாரும் இல்லை எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

(1 அரசர் 3 9-13) இது விவிலியத்தின் பழைய ஏற்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் ஓர் உண்மைச் சம்பவமாகும். இன்று கூட ஞானத்திற் சிறந்தவர் சாலமோன் அரசர் என்று புகழ்ந்து கூறப்படுகின்றது.

ஆனால் எமது வேண்டுதல்களும், எதிர்பார்ப்புக்களும் என்ன? பணம், பதவி, பட்டம், அந்தஸ்து, ஆரோக்கியம், பலம் எனும் குறுகிய சுயநலத் தேவைகளாக மட்டுமே அமைந்துள்ளமையை நாம் மறுக்க முடியாதல்லவா? இவையும் மனிதருக்குத் தேவைதான் ஆனால் இதைவிட இறைவனால் அருளப்படும் ஞானமோ தீயவழிகளினின்றும், எதிரிகளின் கண்ணிகளிலிருந்தும் எம்மைத் தப்புவிக்கும் நமது சிந்தனை, சொல், செயல் என்பவற்றைத் தூய்மைப்படுத்தி இறையன்பையும், பிறரன்பையும் சம்பாதித்துத் தரும். நீங்கள் கேளாத செல்வமும், புகழும் கூட உங்களைத் தேடி வரும், எனவே ஞானத்தை இறைவனிடம் கேளுங்கள், தேடுங்கள், நன்மைகளால் உங்கள் வாழ்வு நிறையும் இறைவனின் ஆசி உங்களுடன் தங்கும்.

*வி. மரியா சுசிலா, சிலாபம்.*

## புகழை விரும்பாதீர்கள்

புகழ் என்ற சொல்லுக்குரியவன் இறைவன் மாத்திரமே. மனிதனுக்கு எந்தவிதப் புகழும் இவ்வுலகில் கிடையாது; புகழை விரும்பவோ, எதிர்பார்க்கவோ கூடாது. பகட்டு, ஆடம்பரமற்ற எளிய சந்தோஷமான வாழ்வு வாழுமாறு மனிதனை இஸ்லாம் பணிக்கிறது. ஆடம்பர வாழ்வை, போலி வரட்டுக் கௌரவத்திற்காக மக்களிடம் பெயரையும புகழையும் பெறுவதற்காகவும் வாழும் வாழ்வை இறைவன் வெறுப்பதையும் அவர்களுக்கு நரக நெருப்புத் தான் உண்டு என்று எச்சரிப்பதையும் கீழ் கண்ட திருவசனங்கள் நமக்கு எடுத்தியம்புகிறது.

எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், புகழையும்' அலங்காரங்களையும் (மாத்திரம்) விரும்பினால், அவர்கள் செயலுக்குரிய பயனை இவ்வுலகத்திலேயே நாம் பூரணமாகக் கொடுத்துவிடுவோம். அதில் அவர்கள் குறைவு செய்யப்பட மாட்டார்கள். எனினும் நரக நெருப்பைத் தவிர வேறொன்றும் இல்லை; அவர்கள் செய்தவையும் இங்கு அழிந்துவிட்டன. அவர்கள் செய்து கொண்டிருப்பவையும் வீணானவையே!

**(அல்குர்ஆன் 11:15, 16)**

*வை.எம்.தாஹிர்கரீம்-கல்முனை-06.*

## கவிதைப் போட்டி இல.453

**பரிசுக்குரிய கவிதை**

### ஒப்பந்த நிபந்தனை

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை
மீறுகிறார்களாமே!
அதை அறியத்தான்
ஒப்பந்த நிபந்தனைகளை
உன்னிப்பாகப் படிக்கிறேன்

கு.திருமால், மட்டக்களப்பு

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



### சமாதானம் தேடுகிறாயோ?

பிஞ்சு நெஞ்சமே
சமாதானம் பெற்றதை -நீ
நெஞ்சார வாசித்து
நிம்மதி கொள்ளத் துடிக்கிறாயோ?

கி.உதயகுமார், வவுனியா.

### வேதனை

நாடு விட்டு நாடு தாவி
ஆடு தமிழில்
உதித்த கன்று சிறப்புக்காய்
பதித்தது கண் மாற்றான்
தாய்ப் பாலில் - இது
தேன் விட்டுச் சக்கரைப்
பாணிதனை நாடும் வேதனை...

த.கிருஷ்ணவாணி, மட்டக்களப்பு.

### மின்சாரத் தடை

நல்லதொரு பாப்பா
கதை வாசிச்சிக்கிட்டு
இருந்தேன் அதற்குள்
பாளாய் போன
கரண்ட் கட்டாயிரிச்சே

எஸ்.பி.கணேஷ், தாண்டியடி.

### உன்னது உன்னதே!

முற்றத்து மல்லிகை கீழ்
கொற்றவைத் தமிழ் படிடித்தவுடன்
ஏற்றமிகு' பிஞ்சுக் கரங்களில்
சுற்றத்தவர் திணித்திட்டனரா
வேற்றுமொழிப்பத்திரிகை,
கற்றிடு, ஆனால் விற்றிடாதேயுன்
நற்றமிழ்தன் கலாச்சாரந்தனை!

என்.சுந்தா, கிழக்கு வாளாகம்.

### சமாதானம்

நாட்டில் சமாதானம் என்றதும்
நான்கு வயதுக் குழந்தை கூட
நாட்டு நிலமையறிய
வேற்றுமொழி பத்திரிகை கூட
வேண்ட தவற விடுவதில்லையோ.


தா்மலிங்கம் சந்திரமதி, தம்பலகம்.

### ஆங்கில மோகம்!

பொங்கு தமிழ் கண்ட நாட்டில்
போக்கிடமின்றி வாழும்
அகதிச்சிறுமிக்கும்
ஆங்கில மோகமோ?

க.கமால்தீன், ஏறாவூர்-03.

## கவிதைப் போட்டி இல.456



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 27.04.2002

கவிதைப் போட்டி இல.456
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### சொல்லிவிடு!

முடிக்கிடந்த பாதைகளின்
திறந்துவிட்ட புகைப்படத்தை
பத்திரிகைதனில் கண்டு
களிப்புறும் கண்மணியே
உன் வீட்டுக்குச் செல்லும் பாதை
உருப்படியாய் தெரிகிறதா?

ஹப்புத்தளையூர்
மனோ கோபாலன்.

### விளையும் பயிர்

நாளைய
அத்தியாயத்தை
அர்த்தமுள்ளதாக்கவும்
அமைதியானதாக்கவும்
எழுதப்போகும்
இன்றைய
இளந்தளிர் இவன்!

துரைராஜா பரிமளாதேவி, கலஹா.

### முப்பரிசு பெற்ற 'முரசுக் குடும்பம்!

கடந்த முரசு 443ல், சல்வார் பரிசு கிடைத்தது. இதயம் இனித்தது கூடவே சுடச்சுட அதே வாரம் பரிசுபெறும் விபரமடலும் வந்து சேர்ந்தது. மனதும் மேலதிகமாய் மகிழ்ந்தது. கூடவே; கவிதைப்போட்டி, பட்டுச் சேலை, பரிசுபெற்ற பிரிய முரசுக் குடும்பம், நாம் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்!? நேசம் நிறைந்த நன்றிகள் சகிதம்....

மட்டுநகர்- ஆயிஷா
வாஹிட் குத்தூஸ்.



### தேடல்

உன்னைப் பெற்று
பெயர் வைத்தது
யார் என்றா
பத்திரிகையில் பார்க்கின்றாய்
பாலகனே!

சு.அருள்பிரகாசம், கும்பறுப்பிட்டி.

### அன்பின் முரசே!

என் இதயக் கதவுகளை திறந்து என்னை உன் பக்கம் ஈற்று எடுத்து உன் பக்கம் ஈற்று எடுத்து, உன் பக்கங்கள் ஒவ்வொன்றையும் நிமிடத்திற்கு நிமிடம், மணித்தியாலயத்திற்கு மணித்தியாலம் பார்க்க வைத்து எங்கெங்கோ முடங்கிக் கிடக்கும் செய்திகளை தெவிட்டாத மொழியில் விருந்தாக்கிப் படைத்து எம்மை அறிய வைத்த இதழே தினமுரசே உன் சேவை இதுபோல் இன்றும் என்றும் அன்றும் ஓயாது ஜெயம் பெற வாழ்த்தி என் இதயங் கனிந்த நவிங் கரையை மொழிந்தவனாக ஏங்கும் இவன்.

எம்.ரீ.எம்.யூனூஸ்-காத்தான்குடி-01.

### பாசமுரசு

வாரம் தோறும் நீ சுமந்து கொண்டு வரும் சுவையான செய்திகளை தேவ அமுதத்தை மிஞ்சிய தேன் துளிகள் பார்ப்பவரை பாசம் செய்து வாசிக்க தூண்டி பறக்க வைக்கிறது. முரசே நீ சிந்தும் ஒவ்வொரு துளியும் புதுமையான புரட்சியில் எழுதப் பட்டவைகள் நீ எனக்கு பாச முரசு. உன் பணி கடலைவிட விரிந்தது. வாழ்க நீ நீடுழி....

அ.றா.அ.(மருத நாபா)
-மருதமுனை-01.

# வாசக[ர்] சாலை

### வாராவாரம் வசந்தமாய் என் வாசல் வரும் முரசே...

உன் பெருமைகளை எழுத என் வார்த்தைகளுக்கு அத்தனை ஆழமில்லை. எழுதாமல் இருக்க என் பேனைக்கு அவ்வளவு பொறுமையில்லை. உன்னை கண்ட உடனேயே எதை தொட்டுக்கொள்வது என கண்களும், எதை ஒற்றிக்கொள்வது என இதயமும் தடுமாறுகிறது. அத்தனை சூடு, சுவை, சுவாரஸ்யம், தொடரட்டும் உனது சாம்ராட்சியம்.

சுகுமாரன் ரஜனி-தலவாக்கலை.

பட்டுக்கோட்டை பிரபாகரனின் தொடர் அற்புதமாக நகருகிறது எனிலும் முன்பை விட அண்மைய காலங்களில் தினமுரசில் பாரிய மாற்றம். ஆன்மீகம் பகுதியில் தொடர்ந்து ஒரு சிலருடைய ஆக்கங்களே பிரசுரிக்கப்படுகின்றன. இதை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

ஏ.எல்.முஹம்மட் றஸ்மி-அட்டாளைச்சேனை.

### அன்பின் முரசுக்கு!

உன்னில் வரும் சகல அம்சங்களையும் சுவைத்துப் படிக்கும் உனது நீண்டநாள் வாசகன் நான். அன்று முதல் இன்று வரை முரசின் பாணி தனியானதுதான். இலங்கை பத்திரிகை வரலாற்றில் ஒரு புதிய பக்கத்தையல்ல பல புதிய பக்கங்களை புரட்டிய நீ அடுத்து வரும் நாட்களில் உன் பத்தாவது பிறந்த நாளை கொண்டாடப் போகிறாய் என்பதை அறியும் போது மிகுந்த மகிழ்ச்சியடைறேன். கடந்த ஒரு தசாப்தகாலமான உன் சேவை தமிழ் மக்களால் எவ்வாறு உயர்வாக அங்கீகரிக்கப் பட்டதோ எதிர்காலத்திலும் இதே அங்கீகாரம் தொடரும்.

எஸ்.நவரட்ணம்-புண்டுலோயா.

### அன்புள்ள முரசே!

நான் சோகத்தில் இருக்கும் போது எல்லாம் நீ தாய்க்கு தாயாக நண்பனுக்கு நன்பனாக சகோதரனுக்கு சகோதரனாக ஆறுதல் தருகின்றாய். நீ தமிழ் பேசும் மக்களின் தாயாக இருக்கின்றாய் உன்னை ஒரு வாரமும் நான் தவற விட்டதில்லை நீ வாழ்க வளர்க என் வாழ்த்துக்கள்.

எம்.றே.அஸ்மில்-மருதமுனை.

என் அன்பிற்கினிய முத்தான முரசே! நீ சுமந்துவரும் ஆக்கங்கள் அனைத்தும் சுவையானவை, சிந்திக்கத் தூண்டுபவை.

ஒரே திசை நோக்கி அத்தனை ஊடகங்களும் அலைபோல் அடித்துச் செல்லப்படும் இன்றைய காலகட்டத்தில் தமிழர் நிலையை யதார்த்தமாக நோக்கும் உன் பணி வரவேற்கத் தக்கது. உனது சேவை தொடர வாழ்த்துக்கள்

ஆர்.ரவிக்குமார்-டுபாய்

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

### மீண்டும் உண்ணாவிரதம்

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். கடந்த மாதமும் இந்தக் கைதிகளினால் இதே மாதிரியான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அப்போது சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்த புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, அரசாங்கத்தின் நூறுநாள் செயல்திட்டத்தின் கீழ் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதியளித்திருந்தார். இதனையடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. ஆனால், இப்போது அரசாங்கத்தின் "நூறுநாள்" முடிவடைந்து விட்டது. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் எவ்வித முன்னேற்றகரமான நட வடிக்கையும் தெரியவில்லை. இந்நிலையிலேயே இரண்டாவது முறையாகவும் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகிச் சிறையில் இருப்பதென்பது உண்மையிலேயே மிகப்பெரும் துரதிஷ்டமும் அநியாயமுமாகும். ஏனெனில் சந்தேகத்துக்கிடமின்றி "புலி" என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்பவர்கள் சர்வ சுதந்திரமாக நகரங்களுக்குள் வந்து அரசியல் நடத்திக்கொண்டிருக்க "புலி" சந்தேக நபர்கள் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதென்பது அநியாயமின்றி வேறென்ன?

இந்தக் கைதிகள் அனைவரும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தான் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது அப்படி ஒரு சட்டம் இந்த நாட்டில் அமுலில் இல்லை. இதற்கு மாற்றீடாகக் கொண்டு வரப்பட்ட பயங்கர வாதத் தடுப்புச் சட்டமும் பெரும்பாலும் செயலிழந்து விட்ட நிலையில் புலிகள் இயக்கம் மீதான தடை இன்றோ நாளையோ நீக்கப்படலாம் என்ற சூழ்நிலையில் அப்பாவி இளைஞர்கள் சிலரை மட்டும் தடுத்து வைத்துக்கொண்டு சட்டம் பேசுவது அர்த்தமற்ற செயற்பாடாகும்.

அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருக்கும் போதெல்லாம் களுத்துறைக்குப் போய் அவர்களைப் பார்த்துவிட்டு வந்து பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதைத் தவிர வேறெதனையும் செய்யாத தமிழ் அரசியல்வாதிகள் இன்றைய சமாதான சூழ்நிலையிலாவது கைதிகளை விடுவிக்க உருப்படியான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

அருள் குமரன்-மஸ்கெலியா.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# 'பிரபாவை கைதுசெய்யும் ஜெயாவின் கோரிக்கையில் இந்திய மத்திய அரசு ஆர்வம் காட்டாது'

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைது செய்து இந்தியாவுக்கு கொண்டு வந்து ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக நீதிவிசாரணை நடாத்த வேண்டும் என்று தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியபோதும் இந்த விடயத்தில் மத்திய அரசு ஆர்வம் காட்டாது என்றே தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் தலைவர் ஒரு பயங்கரவாதி என குறிப்பிட்டிருக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதா படைகளை அனுப்பியேனும் அவரைக் கைது செய்ய வேண்டும் என கேட்டிருந்ததுடன் சட்டசபையிலும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

குஜராத் கலவரங்களால் ஆட்டம் காணும் நிலையிலிருக்கும் பாரதீய ஜனதா அரசாங்கம் ஜெயலலிதாவின் இந்தத் தீர்மானத்தின் பேரில் ஆர்வம் காட்டி குறிப்பிடத்தக்க அடியெடுப்புக்கள் எதனையும் மேற்கொள்ளும் சூழ்நிலையில் தற்போது இல்லை என இந்திய அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறெனினும் தனது தீர்மானத்தில் கடுமையாக நடந்துகொள்ளப் போவதாக ஜெயலலிதா ஏற்கனவே அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் அமைப்புக்களுக்கு இந்திய அரசின் புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவியும், ராஜீவ் காந்தியின் பாரியாருமான திருமதி சோனியா காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சியும் பிரபாகரன் நீதிவிசாரணைக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்று கொள்கையளவில் தீர்மானித்துள்ள போதிலும் அதனை செயற்படுத்துமாறு மத்திய அரசை வலியுறுத்தமாட்டாது என்றே அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். ■

## இடைக்கால நிர்வாகத்தின் முதல்வர் யார்...?

அடுத்து வரும் மாதங்களில் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கென அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிருவாக சபையின் முதலமைச்சராக வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் சுந்தரம் திவகலாலாவின் பெயரும் புலிகளால் பிரேரிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆளுநரை ஜனாதிபதியே நியமிக்க வேண்டும் என்பதால் இது தொடர்பில் இழுபறி தோன்றலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய ஆளுநர் ஒருவரை நியமிக்கும் பொருட்டு தற்போதைய ஆளுநர் அசோக ஜயவர்தன எந்த நேரத்திலும் தனது பதவியை இராஜினாமாச் செய்யத் தயாராகி வருகிறார்.

புதிய ஆளுநர் பதவிக்கு கிழக்கில் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த ஐ.தே.க முஸ்லிம் அபேட்சகர் ஒருவரின் பெயர் பலமாக முன்மொழியப்பட்டுள்ளது. ஆனால், புலிகள் இதனை விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது. ●

## தமிழ் கட்சிகளுக்கு புலிகளின் அறிவுறுத்தல்

தமிழ் கட்சிக் கூட்டமைப்புக்கும் புலிகள் தலைவருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தமிழ்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் கடுமையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. உத்தேச இடைக்கால நிருவாக சபையில் கூட்டமைப்பினர் பங்குபற்றக் கூடாதெனவும், எம்.பிக்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியைச் செலவிடும் போது புலிகளிடம் அனுமதி பெற வேண்டும் எனவும் வலியுறுத் தப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு நிருவாக ஏற்பாடுகளை புலிகள் கவனித்துக் கொள்வார்கள். தமிழ்க் கட்சி எம்.பிக்கள் புலிகளுக்கு ஆதரவாக குரல் கொடுப்பதோடு தமது அரசியலை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என புலிகளின் தலைமையால் கேட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. ●

## ஜனாதிபதி இந்தியா பயணம்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அடுத்தவாரம் இந்தியா செல்லவுள்ளார்.

விமான விபத்தில் உயிரிழந்த காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மாதவராவ் சிந்தியாவின் நினைவு அஞ்சலிக்கான நிகழ்வில் சொற்பொழிவாற்றவே திருமதி குமாரதுங்க இந்தியா செல்லவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் வாஜ்பாய், எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி, தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரையும் ஜனாதிபதி குமாரதுங்க சந்தித்து உரையாடவிருக்கிறார்.

ஜனாதிபதியுடன் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் புதுடில்லி செல்லவிருக்கிறார். ■

## யாழ். பொங்கு தமிழ் நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

விடுதலைப் புலிகளின் ஏக பிரதிநிதித்துவத்தை அங்கீகரித்தும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் பொங்கு தமிழ் நிகழ்வு புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில் ஆகிய இடங்களில் இருந்து உணர்ச்சிக் கோஷங்களுடன் பேரணியாக வந்த பெருந்திரளான மக்கள் பிரதான நிகழ்வு நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் ஒன்று கூடினர்.

அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப்படங்களடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்த மக்கள் தமிழர் தாயக கோட்பாட்டையும், சுயநிர்ணய உரிமையையும் வலியுறுத்தி கோஷமெழுப்பினர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய புலிகளின் ஆஸ்தான கவிஞர் புதுவை இரத்தினதுரை சிதைந்துபோன நாட்டைக் கட்டியெழுப்பப் புலிகள் இயக்கத்தில் இணையுமாறு வேண்டுகோள் விடுத்தார். இதன்போது புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் உரையாற்றினர். ■

## தபால் கட்டணம் 40 சதவீதம் அதிகரிக்கும்!
## உள்ளூர் கடிதங்களுக்கு 4.50!

ஐதேக அரசின் வரவு செலவு திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறி ஒரு வாரம் மாத்திரமே கடந்திருக்கும் நிலையில் தபால் சேவைக்கான கட்டணங்களை 40 சதவீதத்தினால் அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்தக் கட்டண அதிகரிப்பு இந்த மாதம் இறுதியிலிருந்து அமுலுக்கு வரும்.

புதிய விலை மாற்றத்திற்கு அமைய தற்போது 3ரூபா 50 சதமாக இருக்கும் உள்ளூர் சாதாரண தபால் ஒன்றிற்கான கட்டணம் 4ரூபா 50 சதமாக அதிகரிக்கப்படும். பதிவுத்தபாலுக்குரிய 13ரூபா 50 சத கட்டணம் 16ரூபா 50 சதமாக அதிகரிக்கும்.

பார்சல்கள், வெளிநாட்டுக் கடிதங்களுக்கான கட்டணம் 30 சதவீதத்தினால் உயரவுள்ளது.

இரண்டு வருடகாலத்தின் பின்னர் இந்த கட்டண மாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது. தபால் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்குவதால் இந்த முடிவை எடுத்திருப்பதாகத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ■

## மருத்துவர்களின் வேலை நிறுத்தம்!
## நோயாளிகளுக்கு பலத்த அசௌகரியம்!

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் ஆரம்பித்த வைத்தியர்களின் வேலை நிறுத்தம் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரை மருத்துவமனைக்கருகில் உள்ள நடைபாதை வியாபாரி ஒருவர் தாக்கிய சம்பவத்தை அடுத்து கடந்த திங்கட்கிழமை இந்த வேலை நிறுத்தம் ஆரம்பமானது. வைத்தியரைத் தாக்கிய குறிப்பிட்டநபரை நீதியின் முன் நிறுத்தினால் மட்டும் போதாது வைத்தியசாலை வளவில் உள்ள அனைத்து சட்டவிரோத வியாபார நிலையங்களும் உடனடியாக அகற்றப்பட வேண்டும் எனக்கோரி அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த வேலை நிறுத்தத்தை நடத்துகின்றது.

எதிர்வரும் 30ம் திகதிக்கு முன்னர் சகல கடைகளையும் அகற்றுமாறு கடை உரிமையாளர்களுக்கு மாநகரசபை புதன்கிழமை கடிதமனுப்பியுள்ளதுடன் மாத இறுதிக்குள் அனைத்து வர்த்தக நிலையங்களையும் அகற்று வதாக சுகாதார அதிகாரிகளினால் வைத்தியர்களுக்கு வாக்குறுதியுமளிக்கப்பட்டது.

ஆனால், உடனடியாக இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றாத பட்சத்தில் நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் போவதாக வைத்தியர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக கொழும்பு வைத்தியசாலைகளில் நோயாளர்கள் பரிதாபகரமான நிலைக்கு முகம் கொடுத்து வருகின்றனர். ●

## பெருமெடுப்பில் அமைச்சர்கள் வெளிநாட்டு சுற்றுலா
## அமைச்சரவை பணிகள் ஸ்தம்பிதம்!

அமைச்சரவை அந்தஸ்து பெற்ற 32 அமைச்சர்களுள் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் தனிப்பட்ட விஜயங்களை மேற்கொண்டு வெளிநாடு சென்றிருப்பதால் பல அமைச்சுக்களின் பணிகள் ஸ்தம்பித மடைந்துள்ளன.

கடந்த 11ம் திகதி ஐதேக அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியதும் அதற்கு மறுநாள் 14 அமைச்சர்கள் தமது குடும்பத்தவர்கள் சகிதம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இன்னும் சிலர் தமிழ் சிங்கள புதுவருடதினத்திலும் அதற்கடுத்த நாட்களிலும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர். இவர்களுள் சில அமைச்சர்கள் இம்மாதம் முடிவிலேயே நாடு திரும்புவார்கள் என அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், கே.என்.சொக்ஸி, திஸ்ஸ அத்தநாயக, எஸ்.பி.திஸாநாயக, ரவி கருணாநாயக, திலக் மாரப்பன, அப்துல் காதர், மிலிந்த மொறகொட, மஹிந்த சமரசிங்க, மஹிந்த விஜேசேகர, ஆறுமுகம் தொண்டமான், ஜோன் அமரதுங்க, பந்துல குணவர்தன, உட்பட மேலும் பல அமைச்சர்கள் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இவர்களில் ஒரிருவர் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டே வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அவை வாரக் கணக்கில் நீடிக்கும் பணிகள் அல்ல என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய வெளிநாட்டு பயணங்களுக்கான செலவுகள் அமைச்சுக்களுக்கான நிதியிலிருந்தே பெறப்படுவது வழக்கமாகும். ■

## படையினரிடம் சரண்

அம்பாறை-கஞ்சிகுடிச்ச ஆறு பகுதியிலிருந்து தப்பி வந்த பெண் புலிப்போராளிகள் நால்வர் படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

தம்மைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு கோரியே இவர்கள் படையினரிடம் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்ததன் பின்னர் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்து சுமார் 25க்கும் மேற்பட்ட புலி இயக்க உறுப்பினர்கள் படையினரிடம் சரணடைந்துள்ளனர். ●

## புலிகள் அனுமதி

மட்டக்களப்பு-பதுளை வீதிப்பகுதியில் முஸ்லிம்கள் வரக்கூடாதென தடைவிதிக்கப்பட்டிருந்த பகுதிகளுக்கு சென்று தமது கைவிடப்பட்ட வயல்நிலங்களைப் பார்வையிட்டு வருகின்றார்கள்.

மட்டக்களப்பு-செங்கலடிக்கூடான பதுளை வீதிப்பகுதியில் குடியிருந்து விவசாயம் செய்கையில் ஈடுபட்டு வந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அந்தப் பகுதியில் புலிகளின் ஆதிக்கம் வலுத்த பின்னர் அங்கிருந்து வெளியேறியிருந்தனர்.

சமீபத்தில் அமைச்சர் ரவூப் ஹகீமும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து முஸ்லிம்கள் தமது பழைய இடங்களில் குடியேறி விவசாயம் செய்கையில் ஈடுபடலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு-பதுளை வீதிப் பகுதியில் கடந்த 15 வருடங்களுக்கு முன்னராக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் பதுளை, மொனறாகலை, அம்பாறை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் அகதிகளாகச் சிதறி வாழ்கின்றார்கள். ■

## கரிகாலன் தொடர்ந்து வன்னியில்...

கிழக்கிலிருந்து கடந்தவாரம் வன்னிக்கு அழைக்கப்பட்ட மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் மீண்டும் கிழக்குக்கு அனுப்பப்படாதது குறித்து பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

வன்னிக்கு அழைக்கப்பட்ட கரிகாலன் புலிகளின் தலைவர் பிரபாகரன் சமீபத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலும் காணப்படவில்லை.

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் கிழக்கில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கெடுபிடிகள் மற்றும் முஸ்லிம்கள் பற்றி அவரால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் தன்னிச்சையான நடவடிக்கைகள் என்பன குறித்து பரவலான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் இது பற்றி விசாரிப்பதற்காக வன்னிக்கு அழைக்கப்பட்ட கரிகாலன் இன்னமும் கிழக்குக்குத் திருப்பியனுப்பப்படவில்லை.

யுத்த நிறுத்த மீறல்கள் சம்பந்தமான கூடுதலான முறைப்பாடுகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ■

## பிரபாவின் விருந்து

கடந்தவாரம் அமைச்சர் ரவூப் ஹகீமும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் வன்னியில் சந்தித்துக் கொண்டபோது அரசியலுக்கு அப்பாற்பட்ட பல விடயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் சினேகபூர்வ கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

முஸ்லிம்களுக்கென பிரத்தியேகமாக "ஹலால்" முறையில் சமைக்கப்பட்ட மாமிசங்களுடன் சிறப்பான மதிய போசனம் ஒன்றை முஸ்லிம் பிரமுகர் குழுவுக்கு பிரபாகரன் வழங்கினார். தொழுகைக்கான ஏற்பாடுகளும் அங்கு செய்யப்பட்டிருந்தன.

தனது மகன் சார்ல்ஸ் அன்ரனி படிப்பில் கெட்டிக்காரனாகத் திகழ்வதையிட்டும் அவரது கபொத சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் குறித்தும் பிரபாகரன் மகிழ்ச்சியுடன் விபரித்துள்ளார்.

தனது தாயார் தமிழகத்தில் சுகவீனமான நிலையில் இருப்பதாயும், அவரைக் காணத் தனக்கிருக்கும் ஆர்வத்தையும் முஸ்லிம் காங்கிரஸ் தூதுக் குழுவுடனான சினேகபூர்வ கலந்துரையாடலில் பிரபாகரன் வெளிப்படுத்தியிருக்கிறார். ●

# முரசம்

## தமிழ்க் கைதிகளின் விடுதலைக்கு வழிசமையுங்கள்!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதாகி விசாரணைக்கும் எடுக்கப்படாமல் கால வரையறையின்றிச் சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் தம்மை விசாரணை செய் அல்லது விடுதலை செய் என்ற கோரிக்கையில் களுத்துறைச் சிறைச் சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

அவர்களில் சிலரின் நிலை இரத்த வாந்தி எடுக்குமளவு ஆபத்தானதாக மாறிவருகிறது.

இப் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதானவர்கள் பலர் அற்ப காரணங்களுக்காகக் கைதானவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், புலிகளுக்கு உணவு, நிதி போன்றவற்றை வழங்கியதாகவும், புலிகளைத் தெரிந்திருந்தும் தகவல் கொடுக்கவில்லை என்பதற்காகவும் கைது செய்யப்பட்டவர்களே அதிகம். புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டவர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மிகச் சிலரே. தற்போது இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கும் இந் நிலையில் புலிகள் நேரடியாக அலுவலகங்களைத் திறந்து அரசியலில் ஈடுபட இறங்கியிருக்கும் நிலையில், அவர்களின் வருகையை வரவேற்று அவர்களின் அலுவலகத் திறப்பு விழாக்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் மட்டுமன்றி அரசாங்க அதிபர்கள் உட்பட அரச அதிகாரிகளே கலந்து கொள்கின்ற நிலையில் இத்தகைய அற்ப குற்றச்சாட்டுக்களின் பெயரில் இவர்களைச் சிறையிலிட்டு வாட்டுவது பெரும் அநியாயமாகவே வெளித்தெரிகிறது. அநியாயங்களைப் போக்க வேண்டிய சட்டங்கள் அநியாயத்தின் மூலகாரணமாக மாறியுள்ள நிலையை இங்கு காண்கிறோம். இன்று அரசாங்கத்தில் அமைச்சர்களான ஆறுமுகன் தொண்டமான், சந்திரசேகரன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் பகிரங்கமாகவே கிளிநொச்சி சென்று புலிகள் தலைவர் பிரபாகரனையே சந்தித்து, உரையாடி, விருந்துண்டு திரும்பி வந்து கடமைகளில் ஈடுபடக்கூடியதாக இருக்க, புலிகளைத் தெரிந்திருந்தும் தகவல் தரவில்லையென்பதற்காகவும் அவர்களுக்கு ஒருவேளை உணவளித்ததற்காகவும் கைது செய்யப்பட்டு இத்தனை நாள் சிறையிலிட்டு வாட்டுவதென்பது என்ன நியாயம்?

குறைந்தது இவர்களின் வழக்குகளாவது எடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதற்கு என்ன காரணம்?

இன்று அரசாங்கத்தின் தேவைகளுக்காக எத்தனையோ பல விடயங்களுக்கு வளைந்து கொடுத்த சட்டம் இந்த மனிதாபிமானக் காரணத்துக்கு மட்டும் முரட்டுக் கரம்கொண்டு மறுப்பதேன்? இப்போது இச் சட்டத்தில் இப் பரிதாபகரமான தமிழ்க் கைதிகள் விடுதலையாக்கப் படுவதற்கு என்ன வழியுண்டு என்பதைத் தேடுவதல்ல தேவை. இத்தகைய அநீதியை இழைக்கின்ற சட்ட அம்சங்கள் முற்று முழுதாக நீக்கப்படுவதே தேவை. ஆனால் இச் சாகும் வரை உண்ணாவிரதிகளைச் சந்திக்கச் சென்ற எமது தமிழ் அமைச்சர், அவர்களுக்கு ஆடைகள் வழங்கியிருப்பதானது, அவர்களைத் தொடர்ந்தும் அங்கேயே இருங்கள் என்று கூறாமல் கூறுவதாகவே தெரிகிறது. அவர்களுக்கு உபகாரம் அளிப்பதைவிட அவர்களை விடுவிக்கத் தனது அரசாங்கத்தை நிர்ப்பந்தப் படுத்துவது மேல். இக் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவாக அனைத்து மனிதாபிமானிகளும் குரல் கொடுக்க முன்வர வேண்டும்!

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புலிகளின் அரசியல் பிரவேசம்!

நாரன்

புலிகளின் அரசியல் பிரவேசம்பற்றி இன்று அனைவரும் மிகுந்த அக்கறையுடன் அவதானித்து வருகிறார்கள்.

மிகவும் கடும் கோட்பாடுடைய இராணுவ அமைப்பாக இருந்த புலிகள் தற்போது அரசியலில் பிரவேசிப்பதென்பது புலிகளுக்கு மட்டுமன்றி, அப் பிரவேசத்தை எதிர்கொள்ளும் மக்களுக்கும் ஒரு புதிய அனுபவமே.

எனினும் இங்கு அரசியல் என்று கருதப்படும் விடயம் என்ன என்பது தெளிவாகவில்லை.

புலிகள் முன்னரும் பெருமளவான மக்கள் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள்.

அப்போது அப் பிரதேசங்களில் தமது நிர்வாகத்தையும் அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்திருந்தார்கள்.

இப்போதும்கூட அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்தில் அவர்களின் நிர்வாகமும் அரசியல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன.

மேலும் கடந்த காலத்தில் புலிகள் பிரேமதாஸா அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்திய வேளையிலும் இவ்வாறான அரசியல் வேலைகளை மேற்கொள்ளுமுகமாக தமது அலுவலகங்களைத் திறந்திருந்தார்கள்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலேயே இவ் அலுவலகங்கள் முனைப்புடன் செயற்பட்டன.

அத்துடன் நில்லாது புலிகள் தமக்கென ஒரு அரசியல் கட்சியையும் இலங்கை அரசாங்கத்தில் சட்டரீதியாகப் பதிவு செய்துமிருந்தார்கள்.

அது அப்போதைய விடுதலைப் புலிகளின் துணைத் தலைவர் மாத்தையாவின் தலைமையில் அமைந்திருந்தது.

பின்னர் பிரேமதாஸா அரசாங்கத்துடன் யுத்தம் மூண்டதையடுத்து இக் கட்சி அலுவலகங்கள் மூடப்பட்டு, பிற்பாடு மாத்தையா உட்கட்சி முரண்பாட்டில் கொல்லப்பட்டதுடன் அக் கட்சி செயலிழந்து போனது.

ஆனால் இப்போது புலிகளின் அரசியல் பிரவேசமென்ற கருத்தில் மேற்கொள்ளப்படும் புதிய விடயம் என்னவென்றால் புலிகள் தமது கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் மட்டுமன்றி இராணுவத்தின் கட்டுப்பாடு நிலவுகின்ற வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் அரசாங்கத்தின் அனுமதியுடன் உத்தியோக பூர்வமாகவே தமது இராணுவமற்ற செயற்பாடுகளில் ஈடுபடச் செல்வதென்பதுதான்.

இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாயிலாக இந்த வாய்ப்பை அவர்கள் பெற்றுள்ளார்கள்.

இவை நடைமுறையில் தற்போது நிகழ்ந்துவரும் நிகழ்வுகளாக இருந்தாலும் புலிகளின் அரசியல் பிரவேசம் என்பதற்கான உண்மையான தொடக்கம் புலிகள் தலைவர் பிரபாகரன் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் மிக்க பத்திரிகையாளர் மாநாட்டில்தான் குவிமையம் பெற்றுள்ளது.

தமிழீழம் என்ற தமது இலட்சியத்தை நோக்கி ஆயுதப் போராட்ட மார்க்கத்தில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த புலிகள் இயக்கம் தமது பாதையையும் இலக்கையும் மாற்றிக் கொள்ளத் தயாரா என்ற கேள்வியின் விடையிலேயே புலிகளின் அரசியல் பிரவேசம் பற்றிய உண்மையான பரிமாணத்தை நாம் தேடக்கூடியதாக இருக்கும்.

இது குறித்து ஓரளவுக்கேனும் சில தெளிவுகளைத் தருவதாக இப் பத்திரிகையாளர் மாநாடு விளங்குகிறது.

புலிகள் தலைவர் பிரபாகரன் 12 வருட காலத்தின் பின்னர் இவ்வாறான பகிரங்க பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தி அதில் கேள்விகளுக்கு முகம்கொடுக்க முன்வந்ததென்பதே ஒரு மாற்றத்துக்கான அறிகுறியாகவே புலப்படுகிறது.

புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான தமது விருப்பத்தைப் பலதடவை தெரிவித்திருந்தாலும் தற்போது இப் பத்திரிகையாளர் மாநாட்டினூடாக பிரபாகரன் நேரடியாகத் தனது நாட்டத்தைத் தெரிவித்துள்ளதானது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததொரு விடயமாகும்.

முன்னைய பல பேச்சுவார்த்தைகளில் புலிகளின் தரப்பில் பங்குபற்றியோர் உண்மையில் பிரபாகரனின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தவில்லையென்றும் அங்கு புலிகள் வழங்கும் வாக்குறுதிகளை உத்தரவாதப் படுத்த வேண்டுமானால் பிரபாகரன் நேரடியாகப் பேச்சுக்களில் பங்கு கொள்ள வேண்டுமென்றும் அரசாங்க தரப்புகளால் வலியுறுத்தப்பட்டு வந்தது.

அவ் வகையில் புலிகள் தலைவர் பிரபாகரன் நேரடியாகப் பிரசன்னமாகி வெளிப்படுத்திய கருத்துக்கள் முக்கியத்துவம் மிக்கவை.

இங்கு நாம் இப் பத்திரிகையாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட முக்கியமான கேள்விகள் என்ன, அவற்றுக்குப் புலிகள் தலைவர் பிரபாகரன் அளித்த பதில்கள் என்ன, அவற்றிலிருந்து புலப்படுவது என்ன என்பதை தெளிவாக ஆராயக் கூடியதாக உள்ளது.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் பல்வேறு கேள்விகள், இடைக் கேள்விகள் எழுப்பப்பட்டாலும் சமகால அரசியல் நகர்வில் முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளை நாம் இங்கு எடுத்து நோக்கலாம்.

பிரதானமாக, புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் உண்மையான ஆர்வம் காட்டுகிறார்களா என்பதை அறிவது சில கேள்விகளின் நோக்கமாக இருந்தது.

இதற்கான பதிலில் தாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நாட்டம் கொண்டிருப்பதாகவும், இப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காக கடந்த அரசாங்க காலத்திலேயே தாம் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்து அதை நான்கு மாதங்கள் வரை நீடித்திருந்ததாகவும், தற்போது நிகழ்ந்தேறிவரும் பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகளில் தான் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அதைக் கையாளும் ஏற்பாட்டாளர்களான நோர்வே அரசாங்கத்தின் பங்களிப்பைத் தாம் மெச்சுவதாகவும், அது மட்டுமன்றி தற்போதைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த சமாதான முன்னெடுப்புகளில் காட்டிவரும் நம்பிக்கை தரக்கூடிய செயற்பாடுகள் தமக்கு திருப்திகரமாக உள்ளதாகவும் புலிகள் தலைவர் பிரபாகரனே இப் பத்திரிகையாளர் மாநாட்டில் மிகத் தெளிவாகக் கூறியிருந்தார்.

இவ் விடயத்தில் இவ்வளவுக்கும் அதிகமாக அவர் சொல்லக்கூடியது வேறொன்றும் இல்லை.

அடுத்ததாக பலருக்கும் அதிக அக்கறைக்குரியதாக இருந்த விடயம் புலிகள் தலைவர் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடத் தயாரா என்பதே.

இதுவே இங்கு சர்ச்சை எழுப்பிய கேள்வியொன்றாக அமைந்திருந்தது.

தமிழீழக் கோரிக்கையைக் கைவிடத் தயாரா, என்பதற்கும், கைவிட்டுவிட்டாரா என்பதற்கும் ஒரு அடிப்படையான வேறுபாடு உண்டு.

முதலாவது கைவிட்ட நிலையில் பேச்சுவார்த்தைக்குச் செல்வது.

இரண்டாவது பேச்சுவார்தைக்குச் சென்று ஒரு இணக்கம் காணப்படுமிடத்தில் கைவிடுவது.

இலங்கையில் சில அரசியல் கட்சிகள் புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்ட பின்னர்தான் அவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகின்றன.

எனினும் பிரபாகரனது பதில் இவ் விடயத்தில் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை தெளிவாக்கியுள்ளது.

அவர், தாம் இன்னும் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடவில்லை என்பதை முதலில் தெளிவுபடக் கூறியுள்ளார்.

அடுத்து அவ்வாறு தாம் இக் கோரிக்கையைக் கைவிடுவதற்குரிய தேவை இன்னும் எழவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இத் தமிழீழக் கோரிக்கை புலிகளின் கோரிக்கையல்லவெனவும், தமிழ் மக்களின் கோரிக்கையெனவும், அதற்காகத் தாம் நடத்திவரும் ஆயுதப் போராட்டமும் தாம் விரும்பி எடுத்த முடிவல்லவெனவும், சாத்வீகப் போராட்டங்கள் தோல்விகண்ட நிலையில் தமிழ் மக்களையும் அவர்களின் உரிமைகளையும் காக்க மாற்று வழியின்றித் தமக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட ஒன்றெனவும் அவர் விளக்கினார்.

எனவே, இத் தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றாக அரசாங்கம் ஒரு அர்த்தமுள்ள அரசியல் தீர்வை முன்வைத்தால் அதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் தாம் தமது தமிழீழக் கோரிக்கையை கைவிடுவதுபற்றி பரிசீலிக்கத் தயாரென அவர் கூறியிருந்தார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டார்களா என்று கேட்டால் இல்லையென்பதும், கைவிடத் தயாரா என்று கேட்டால் ஆம் என்பதும் தெளிவாகிறது.

இதில் ஒருசேர அடங்கியுள்ள இவ் இரண்டு விடைகளைத்தான் அவரவர் தத்தமக்கு வாய்ப்பான வகையில் சித்தரித்து வருகின்றனர்.

இதேவேளை தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டால் தன்னையும் சுடலாமென பிரபாகரன் கூறியிருந்தது இன்றும் பொருந்துமா என ஒரு நிருபர் கேட்டபோது அவர் ஆம், இன்றும் அப்படித்தானெனப் பதலளித்திருந்தார்.

எனினும் தமிழ் மக்களுக்கு நியாயமானதும் கௌரவமானதுமான ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் பட்சத்தில் தமிழீழத்தைக் கைவிட்டுவிட்டதற்கான குற்றச்சாட்டில் அர்த்தமிருக்கப் போவதில்லை.

முன்னரும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் போது, ராஜீவ் காந்தியிடம் அவ் ஒப்பந்தத்துக்குப் பிரபாகரன் ஒப்புதல் அளித்ததும், அதற்கமைய ஆயுதக் கையளிப்புச் செய்வதற்கும் முன்வந்து ஒரு பகுதி ஆயுதங்களைக் கையளித்ததும், இடைக்கால நிர்வாக சபையின் முதலமைச்சருக்கான பெயர்களைக் கூட சிபாரிசு செய்திருந்ததும் நடைபெற்ற விடயங்களே.

எனவே இக் கூற்றில் இலட்சியப் பற்றைத் தவிர பாரதூரமாகப் பார்க்கப்படுவதற்கு எதுவுமில்லை.

அதேவேளை தாம் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதெல்லாம் சமாதானத்துக்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தோமெனவும் இன்னொரு இடத்தில் கூறியிருந்தார்.

எனினும் தமிழீழம் தவிர்ந்த மாற்றுத் தீர்வொன்றைத் தாம் பரிசீலிக்கத் தயாரெனப் புலிகள் தலைவர் கூறியுள்ளது பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான மனத்தடையை நீக்கியுள்ளது.

இதில் பிரபாகரன், தமிழீழத்துக்கு மாற்றான எத்தகைய தீர்வைத் தாம் ஏற்க முடியுமென எதையும் குறிப்பிடாததும்கூட அவர்களின் நிலைப்பாட்டை ஒட்டிய விடயமே.

தாம் தீர்வு எதையும் முன்வைக்கப் போவதில்லை, இலங்கை அரசாங்கமே அதை முன்வைக்க வேண்டும் அத்தகைய ஒரு தீர்வை அது முன்வைக்காத நிலையில் தமிழீழத்தைக் கைவிடுவது என்ற பேச்சுக்கே அவசியமில்லை என அவர்கள் கூறுகிறார்கள்.

எனினும் தமக்கு வழங்கப்படும் தீர்வு எத்தகைய அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டுமெனவும் அவர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமென்ற அங்கீகாரம், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரம், வடக்கு கிழக்குப் பிரதேசம் தமிழ் மக்களின் தாயகம் என்ற அங்கீகாரம் ஆகியவற்றை தமக்கு முன்வைக்கப்படுகின்ற எந்தத் தீர்வும் கொண்டிருக்க வேண்டுமென்பதை அவர்கள் விளக்கியுள்ளார்கள்.

இதில் பல்வேறு ஊகங்களிலும் ஊசலாடிக்கொண்டிருந்த கேள்வி, புலிகள் எதிர்பார்க்கும் சுயநிர்ணய உரிமை என்பது பிரிவினைக்கான கோரிக்கையா என்ற சந்தேகமே.

எனினும் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இங்கு அதுகுறித்து வழங்கிய விளக்கம் இதற்கு ஒரு முடிவைத் தருவதாக உள்ளது.

சுய நிர்ணய உரிமையானது உள்ளக சுயநிர்ணயத்துக்குரிய வடிவங்கள் முதல் அதன் இறுதி எல்லையான பிரிவினை வரை வியாபித்திருக்கிறது. இதில் உள்ளக சுய நிர்ணயமானது உதாரணத்துக்கு, ஒரு சுயாட்சி வடிவமாகவோ, சமஷ்டி அமைப்பாகவோ கூட இருக்கலாம். அரசாங்கம் முன்வைக்கும் வடிவங்களில் தாம் திருப்திப்படக்கூடிய உள்ளக சுயநிர்ணயத்துக்கான அம்சம் இல்லாத பட்சத்தில் தாம் பிரிவினைக்கான சுயநிர்ணய உரிமையை நாடவேண்டி இருக்கும் என்பதை அவர் தெளிவு படுத்தினார்.

இதன் மூலம் உள்ளக சுயநிர்ணய உரிமையென்ற பிரிவினையற்ற சுயநிர்ணய உரிமைக்கும் தமது கருத்தில் இடமுண்டு என்பதை வெளிப்படுத்தியிருந்தார்.

இதுவும் அரசாங்கத்துக்கும் மற்றும் இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக சிந்திக்கும் வட்டாரங்களுக்கும் ஒரு சிந்தனை மாற்றத்தை உந்துகின்ற முக்கியமான கருத்தாக இப் பத்திரிகையாளர் மாநாட்டில் வெளிவந்திருந்த விடயமாகும்.

சுயநிர்ணய உரிமையென்றால் என்ன என்பதை அன்ரன் பாலசிங்கம் கூறித்தான் எவரும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை, அது எவ்வளவோ காலத்துக்கு முன்னர் லெனினால் முன்வைக்கப்பட்ட கருத்தாகும்.

ஆனால் இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் புலிகள் தாம் வலியுறுத்தி வரும் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை மூலம் எதனைக் கோருகிறார்கள் என்பதை அறிந்து கொள்வதே.

அதே இத் தருணத்தில் தெளிவு படுத்தப் பட்டுள்ளது.

இதையடுத்து அனைவரும் அறிய ஆர்வம் காட்டிய விடயம், அடுத்து நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் தாய்லாந்திலான பேச்சுவார்த்தையில், என்ன பேசப் படப் போகிறது, புலிகள் மீதான தடை இதற்கு தடையாக இருக்காதா, இதற்கு புலிகள் தரப்பில் யார் செல்லப் போகிறார்கள், இன்ரபோலினால் விடுக்கப்பட்டிருக்கும் பிடியாணை இப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் புலித் தரப்பினரைப் பாதிக்காதா என்பனவே.

இதற்கு, அன்ரன் பாலசிங்கமே செல்வாரெனவும் பிரபாகரன் செல்ல மாட்டாரென்பதால் இன்ரபோல் பிடியாணை இங்கு பிரச்சினையாக எழாதென்பதும், இப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல முன்னதாக புலிகள் மீதான இலங்கை அரசின் தடை நீக்கப்படவேண்டுமென்றும், இப் பேச்சுவார்த்தையில் தாம் இறுதித் தீர்வு பற்றி உடனடியாகப் பேசப் போவதில்லையெனவும், பதிலாக இடைக்கால நிர்வாக சபையைப் பொறுப்பெடுப்பது பற்றியே பேசப்போகிறார்களெனவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து விளக்குகையில் ரணில் விக்கிரமசிங்கவால் தற்போது ஒரு முழுமையான அரசியல் தீர்வை முன்வைக்கக்கூடிய சூழ்நிலை இல்லையென்பதைத் தாம் புரிந்துகொண்டு, அவர் அதற்குத் தயாராகும் வரை இடைக்கால நிர்வாகத்தைப் பொறுப்பேற்க முன்வந்துள்ளதாகவும், இது புலிகள் தமிழீழக் கோரிக்கையையோ, ஆயுதப் போராட்டத்தையோ, ஆயுதங்களையோ கைவிட்டதாக அர்த்தமாகாதென்றும், இந்த இடைக்காலத்தைப் பயன்படுத்தி வடக்கு கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களைத் தாம் மேற்கொள்ள, அதேநேரத்தில் தென்பகுதியை ரணில் விக்கிரமசிங்க அபிவிருத்தி செய்துகொள்ள முடியுமெனவும் பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

இதற்கு முன்நிபந்தனையாக தடை நீக்கப்பட வேண்டுமென்றும், தடை நீக்கப்படாதவரை தாம் பேச்சுவார்த்தைகளில் சமதையான அந்தஸ்துடன் கலந்துகொள்ள முடியாதெனவும், அவ்வாறான நிலையில் தாம் பேச்சுவார்த்தைக்குச் செல்லச் சம்மதிக்க மாட்டார்களெனவும் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருந்தனர்.

எனவே தடை நீக்கப்படுவது என்பது தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு அத்தியாவசியமான அம்சமென்பதும் இப் பத்திரிகையாளர் மாநாட்டின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயமாகும்.

இதேவேளை இங்கு எதிர்க் கட்சிகளின் செயற்பாட்டுக்கு புலிகள் அனுமதிப்பார்களா என்பது குறித்து பிரபாகரன் இன்னும் பேச்சுவார்த்தையே ஆரம்பமாகவில்லை அதற்குள் எதிர்க்கட்சிகள் செயற்படுவதுபற்றி பேசுவது அநாவசியமானதென்பதாகக் கருத்துக் கூறியிருந்தார்.

எனவே புலிகளின் இடைக்கால நிர்வாகத்திலும்சரி இதர அரசியல் வேலைகளிலும்சரி மாற்றுக் கட்சிகளற்ற ஒரு நிலைமையையே தற்போதைய நிலையில் விரும்புகிறார்கள்.

புலிகளின் இராணுவ செயற்பாடுகளைவிட அவர்கள் கொண்டுள்ள அரசியல் யாது என்பதை ஓரளவுக்காவது தெளிவுபடுத்தியிருக்கிறது இப் பத்திரிகையாளர் மாநாடு. அதேவேளை இவற்றின் அடிப்படையில் அவர்கள் மேற்கொள்ளத் தயாராகும் அரசியல் பிரவேசம் எப்படி அமையப்போகிறதென்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியதாக இருக்கும். ■

அண்டை மண்டலத்திலிருந்து

# பிரபாகரன் பேட்டியும் தமிழக அரசியலும்

காணகன்

மிக நீண்ட இடைவேளைக்குப் பிறகு கிளிநொச்சியில் பெரும் எண்ணிக்கையிலான பத்திரிகையாளர்கள் முன்னிலையில் பிரபாகரன் தந்துள்ள பேட்டி, தமிழ்நாட்டு அரசியலில் குறிப்பிடத்தக்க அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அரசியலில் இதற்கான பிரதிபலிப்பு ஏற்பட்டுள்ளது இயல் பானதே!

முதலில் தமிழ்நாட்டு அரசியலில் ஏற்பட்டுள்ள பிரதிபலிப்பைப் பார்ப்போம்.

பிரபாகரன் பேட்டிக்கு அடுத்த நாளில் நடந்த தமிழக சட்டமன்றக் கூட்டத் தொடரில் தமிழ் மாநில காங்கிரசின் உறுப்பினரான ஞான சேகரன் பேசும் போது, "அமைதிப்பூங்கா வாக இருந்த தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் நுழைந்து ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்துள்ளனர். இதில் முக்கிய குற்றவாளியான பிரபாகரன் மீது தமிழக கோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது. அவர் மீதான வழக்கை நடத்தி முடிக்க தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி பிரபாகரனை இன்டர்போல் பொலீஸ் மூலம் பிடித்துத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவர அரசு முயற்சி எடுக்குமா?" என்றார்.

பாண்டிச்சேரி சட்டமன்றத்திலும் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் இது போல் பேசியுள்ளனர்.

சட்டப் பேரவைக் கூட்டம் முடிந்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஜெயலலிதா, "ராஜீவ் கொலை வழக்கில் பிரபாகரன் ஒரு அறிவிக்கப்பட்ட குற்றவாளி. இவர் சுதந்திரமாகப் பத்திரிகையாளர்களைச் சந்திப்பதும், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் அவரை ஒரு மக்கள் தலைவர் போல் சித்தரிப்பதும் சகிக்க முடியாது" என்றார்.

"லட்சக்கணக்கான மக்களின் மரணத்திற்கும் ராஜீவ் கொலைக்கும் பிரபாகரன் காரணம்" என்று திட்டவட்டமாக அறிவித்த ஜெயலலிதா, "பிரபாகரன் தானே முன்வந்து நீதி விசாரணைக்கு உட்பட வேண்டும்" என்றும் அறிவித்தார்.

பிறகு, மீண்டும் விடுதலைப் புலிகள் பிரச்சனை தொடர்பாக தலைமைச் செயலகத்தில் விரிவான பேட்டி தந்த ஜெயலலிதா, "தமிழகம் மட்டுமன்றி இந்தியாவின் எந்த இடத்திலும் அன்டன் பாலசிங்கம் சிகிச்சை பெற மத்திய அரசு அனுமதியளிக்கக்கூடாது.... விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் தேச துரோக குற்றம் செய்ததாகக் கருதப்பட வேண்டும். விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள் மீது தமிழக அரசு பொடா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் என்றதோடு, இந்தியாவில் மே 13ம் திகதியுடன் புலிகள் மீதான தடை முடிவுக்கு வருவதால் அதை மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கச் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஜெயலலிதாவின் இந்த அறிக்கை தமிழ்நாட்டு மக்களிடம் எதிர்பார்த்த வரவேற்பைப் பெறவில்லை என்பது உண்மை. ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு ஈழப்பிரச்சனைக்கான தமிழ்நாட்டு மக்களின் ஈடுபாடு குறைந்துள்ளது என்பதும் விடுதலைப் புலிகள் மீது ஒரு வெறுப்பு தோன்றியதென்பதும் மறுக்கமுடியாத உண்மையே என்ற போதிலும், அந்த வெறுப்பு இன்றுவரை நீடித்து நிலைத்துவிட்டது என்று கூறுவதற்கில்லை. மாறாகத் தமிழக அரசியலில் ஈழப் பிரச்சனைகளில் ஒரு அனுசரணையான பார்வை கொள்வதே கூட "தீவிரவாத ஆதரவு" போக்காகச் சித்தரிக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் திமுகவிற்கு ராஜீவ் கொலையில் விடுதலைப் புலிகளோடு சம்பந்தம் இருப்பதாக ஒரு வதந்தி பலமாகப் பரப்பப்பட்டது. இன்றுவரை அது நிரூபிக்கமுடியாத குற்றச்சாட்டாகவே இருந்தபோதிலும் திமுக ஒரு "தீவிரவாத ஆதரவுக் கட்சி" என்று ஒரு பேச்சு ஒரு சாராரால் தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. ஆகவே, தீவிரவாதத்தை உறுதியோடு எதிர்க்கும் தலைவர் என்னை விட்டால் வேறுயாரும் இல்லை என்று நிரூபிக்கத் துடிக்கிறார் ஜெயலலிதா "பொடா" சட்டத்தை முந்திக்கொண்டு ஆதரிப்பது, இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற பட்டுவரும் சமாதான உடன்படிக்கையை நிதானமின்றி விமர்சிப்பது... போன்ற ஜெயலலிதாவின் அணுகுமுறைகளில் தமிழக அரசியல் சார்ந்த திமுக எதிர்ப்பு அரசியல் சுயநல அரசியல் உள் மறைந்துள்ளதை அரசியல் பார்வையாளர்களால் உணர முடிகிறது.

ஆகவேதான் பிரபாகரன் பேட்டி பற்றிய விவகாரத்தில் திமுக தலைவர் கருணாநிதி அதீத எச்சரிக்கை உணர்வோடு வெளிப்பட்டார். முதலாவதாக பிரபாகரன் பேட்டி பற்றிய செய்தியாளர்கள் கேள்வியை அவர் முற்றிலுமாகத் தவிர்த்தார். நானும் உங்களைப் போல் தான் பிரபாகரன் பேட்டியைப் பார்த்தேன். இதில் எனக்கென்று சில சொந்த கருத்துக்கள் உண்டு ஆனால் அதை வெளியே சொல்லவிரும்பவில்லை என்றார். அதன் பிறகு அவர் ரத்தினச்சுருக்கமாக ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில்,

உலகின் எந்தப் பகுதியானாலும் அங்கு துப்பாக்கி வெடிச்சத்தமும், குண்டுவெடிச்சத்தமும் உயிர்ச்சேதமும் நின்றிடும் முகாந்திரம் ஏறபட்டால் அதை வரவேற்பது மனிதாபிமானத்தின் பாற் பட்டது. சமாதானத்திற்காகக் கதவு திறந்துள்ளது. தீர்வுக்கான திறவுகோல் என்ன என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருப்பது நம்பிக்கையளிக்கின்றது என்று குறிப்பிட்டிருந்த கருணாநிதி, "இந்தியப் பிரதமர், பாலசிங்கத்திற்கு மனிதாபிமான அடிப்படையில் சிகிச்சை தருவது பற்றிப் பரிசீலிப்போம்" என்று கூறியதை வரவேற்றுள்ளார்.

இந்த வகையில் இந்திய அரசின் கருத்தை ஒட்டி விடுதலைப் புலிகளை எந்த வகையில் ஆதரிக்க முடியுமோ அந்த அளவோடு ஆதரித்து நிறுத்திக்கொள்வது தான் திமுகவின் அரசியல் பாதுகாப்புக்கு உகந்தது என்று கருணாநிதி கருதுகிறார். கிட்டத்தட்ட இதே நிலையைத் தான் பாட்டாளி மக்கள் கட்சியும் கொண்டுள்ளது என்று சொல்லலாம். ஆயினும், இதைக் கூடப் பேசினால் எங்கே தங்களது அரசியல் வளர்ச்சிக்கு ஆபத்தாகிவிடுமோ என்று பா.ம.க பயப்படுகிறது.

ஆனால், மதிமுக பொதுச்செயலாளர் வை.கோ மட்டுமே எப்போதும் போல் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பேட்டியை பலமாக ஆதரித்துப் பேசியுள்ளார். "இது புதிய திருப்பம்" என வர்ணித்த வைகோ, தாய்லாந்து பேச்சு வார்த்தைக்கு முன்னதாக தங்கள் மீதுள்ள தடையை இலங்கை அரசு நீக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கை நியாயமானதே" என்றும், "இந்திய அரசும், புலிகள் மீதான தடையை விலக்கிக்கொள்ள வேண்டும்" என்றும் மீண்டும் பகிரங்கமாக அறிவித்தார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய், "புலிகள் மீதான தடையை நீக்க முடியாது. நோர்வே எடுத்துவரும் அமைதி முயற்சியில் இந்தியா பங்கேற்காது என்று அறிவித்தபோதும், விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கடுமையாக எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஆகவே தான், பேச்சுவார்த்தைக்குச் செல்லும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் இந்தியாவில் தங்கிச் செல்ல அனுமதிப்பீர்களா? என்ற கேள்விக்கு அவர் "அனுமதிக்க மாட்டோம்" என்று கூறாமல் "அப்படி ஒரு கோரிக்கையே வரவில்லையே" என்று தான் கூறினார். மேலும், பாலசிங்கம் இந்தியாவில் சிகிச்சை பெற்றுக்கொள்ள விரும்புவது பற்றி மனிதாபிமானத்துடன் பரிசீலிப்போம் என்று கூறியுள்ளார்.

வாஜபாயி இவ்விதம் கூறியுள்ள நிலையில் உள்துறை அமைச்சர் அத்வானி எந்தக் கருத்தையும் தெரிவிக்க மறுத்துவிட்டார். வைகோவின் நெருங்கிய நண்பரான அத்வானி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான மனோபாவம் கொண்டவரல்ல என்பது ஊரறிந்த விஷயம் தான்.

பொதுவாக ஈழப்பிரச்சனையை முழுமையான பார்வையில் நோக்காமல் விடுதலைப் புலிகள் ஆதரவு அல்லது விடுதலைப் புலிகள் எதிர்ப்பு என்ற அளவோடு மட்டுமே தமிழக கட்சிகள் தற்சமயம் பார்த்து வருகின்றன என்பது ஒரு துரதிருஷ்டமே!

இந்த வகையிலேயே தமா காங்கிரஸ் அதிமுக போன்ற கட்சிகள் விடுதலைப் புலிகள் எதிர்ப்பு ஒன்றை மட்டுமே பிரதான அம்சமாகக் கொண்டுள்ளன. அதேபோல் மதிமுக, பாமக போன்ற கட்சிகள் கண்ணைமூடிக்கொண்டு விடுதலைப் புலிகளை ஆதரித்து வருகின்றன. இதில் ஓரளவு நிதானமான அணுகுமுறை கொண்ட கட்சியாக மத்தியில் பாரதீய ஜனதா கட்சியையும், ஜார்ஜ் பெர்னாண்டஸின் சமதா கட்சியையும் கூறலாம். தமிழக அளவில் திமுகவையும் அந்த வகையில் கருத இடமுண்டு.

# பிரபாவுடன் ஹகீம் செய்துகொண்ட 'புரிந்துணர்வு உடன்படிக்கை'



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளனர். அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் கிழக்கில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய இன்னல்கள் குறித்து தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. முஸ்லிம்கள் மீது தொடுக்கப்பட்ட விரும்பத்தகாத பொருளாதார அழுத்தங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிய பின்னர் அமைச்சர் ரவூப் ஹகீம் புலிகளின் தலைவர் பிரபாகரனை கடந்தவாரம் சந்தித்து நிலைமையை ஆராய்ந்தார். இந்தச் சந்திப்பின் பின்னர் ரவூப் ஹகீம், பிரபாகரன் ஆகியோரது கையொப்பங்களுடன் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையின் படி முஸ்லிம்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட 3 பிரதான கோரிக்கைகளுக்கும் சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது.



அதற்கமைய கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் வடக்கிலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்கப்படுவர் என புலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிழக்கில் முஸ்லிம்களிடமிருந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கான நிதி சேகரிப்புகளை முற்றாக நிறுத்திக்கொள்வதென புலிகள் வாக்குறுதியளித்துள்ளனர்.

அத்துடன் அடுத்துவரும் நாட்களில் நடத்தப்படவிருக்கும் வடக்கு கிழக்கு பிரதேசத்துக்கான இடைக்கால நிருவாகம் குறித்த பேச்சுக்களில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் இடம்பெறுவதையும் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பிரதானமான இந்த மூன்று அம்சங்களுக்கும் புலிகளிடமிருந்து சம்மதம் வாங்கியிருப்பது தற்போதைய சூழ்நிலையில் அமைச்சர் ஹகீமின் முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றி எனக் கருத முடியும்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் புலிகள் எவ்வாறான பதிலை வழங்குவார்கள் என்ற தெளிவின்மை ஆரம்பம் முதலே முஸ்லிம் காங்கிரஸுக்குள் இருந்து வந்தது.

வன்னியில் பிரபாகரனுடனான சந்திப்பின் பின்னர் கொழும்பில் ரவூப் ஹகீம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் நிருபர் ஒருவரின் கேள்வியொன்றுக்குப் பதிலளித்த ஹகீம், "இந்த விடயங்கள் தொடர்பில் புலிகள் ஏதேனும் நிபந்தனைகளின் பேரிலேயே சம்மதம் தெரிவிப்பார்கள் என்று நாம் எதிர்பார்த்தோம் ஆனால், அதற்கு மாறாக எமது பிரச்சனைகளுக்கு அவர்கள் நிபந்தனையற்ற தெளிவான பதிலைத் தந்துள்ளார்கள்" எனக் கூறினார்.

பிரபாகரனுக்கும், ரவூப் ஹகீமுக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கில் முஸ்லிம்கள் மீளக் குடியேறுவது குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்படவிருக்கிறது. அந்தக் குழுவின் சிபார்சின் அடிப்படையிலேயே வடபகுதி முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் இடம்பெறும்.

தமது இயக்க உறுப்பினர்கள் கிழக்கு மாகாண முஸ்லிம்களிடம் நிதி சேகரிப்பதை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக பிரபாகரன் ஹகீமிடம் கூறியிருக்கிறார். ஹகீமுடனான சந்திப்பின் போது கரிகாலன் கலந்து கொள்ளவில்லை பதுமன் இடம் பெற்றிருந்தார்.

பிரபா-ஹகீம் உடன்பாட்டில் உள்ள மற்றைய விடயம் முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பில் முக்கியமானது. அது இடைக்கால நிருவாகத்தில் முஸ்லிம்களின் பங்களிப்புக் குறித்தது. தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் பேச்சுக்களில் முஸ்லிம்கள் சார்பான பிரதிநிதி ஒருவர் இடம்பெறுவதை புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளதன் மூலம் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் உடனடி அரசியல் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் ஹகீம் சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது, முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் என்பதையும், வடக்கு கிழக்கு பிரதேசம் முஸ்லிம்களினதும் தாயகம் என்பதையும், இஸ்லாமிய சமூகத்தின் சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தார். இதற்கு முன்னைய காலங்களில் 'தென்கிழக்குப் பிராந்திய அலகு", "கல்முனை தனிமாவட்டம்" என்ற பல உரிமை கோஷங்கள் முஸ்லிம் காங்கிரஸால் முன்மொழியப்பட்டு வந்தன.

ஆனால், புலிகளுடன் நடத்திய பேச்சுக்களில் ஹகீம் இவை எது குறித்தும் கருத்துப்பரிமாறவில்லை என்றே தெரிகிறது. ஹகீமுக்கும், பிரபாவுக்கும் இடையிலான சந்திப்பு அரசியல் உரிமைகள் குறித்த ஆழமான பேச்சுக்களை நடத்தும் ஒரு நிகழ்வாக அமையவில்லை என்பதாலும், நம்பிக்கையை கட்டியெழுப்பும் ஆரம்பக்கட்ட சந்திப்புக்களின் போது சர்ச்சைக்குரிய விடயங்களை ஆராய்வது வழக்கமல்ல என்பதாலும் இத்தகைய விவகாரங்கள் குறித்து விரிவான பேச்சுக்கள் எதிர்காலத்தில் இடம் பெறும் என எதிர்பார்க்கலாம்.

## Vella Maxi Credit

**சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்**

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு

**கந்தராஜா பிரபு**

**Vella Credit**

Spitalgasse 16 (4[th] மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509


# விளம்பரப் பகுதி


தெய்வீக மருத்துவம்

**டாக்டர் பாலு சோதிடர் S.A.M.P, J.P. (SL)**

National Theiveega Sakthy Foundation
International Interregious Traditional & Medical & Divine service

சர்வதேச சமூக மாந்தீரிக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No:- HA/4/BT/219
அகில இலங்கை சமாதான நீதவான்

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண் டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சனைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சனைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ பனித பராதன தீங்கற்ற மஹா மாந்தீரிக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனையை எழுதினால் அல்லது தொலைபேசி .:.பக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

THIEIVEEGAM SRILANKA
HEAD OFFICE
BATTICALOA SRILANKA.

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமை அலவலகம்
மட்டக்களப்பு ஸ்ரீலங்கா.

**தொலைபேசி / .:.பக்ஸ்**
உள்நாட்டவர்களுக்கு:- (065) 24825
வெளிநாட்டவர்களுக்கு:- 0094 78610098

**கொழும்பில் நேரில் சந்திக்கலாம்**

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
*"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"*



"உங்களது பெரிய பிரச்சனை, நடுத்தர பிரச்சனை, சின்னப் பிரச்சனை. நம்பிக்கையாக உங்களுக்கு செய்து தரப்படும் 100% உத்தரவாதம். உங்கள் பிரச்சனைக்குரிய விடை உடனடியாக. உங்கள் பிரச்சனை எதுவாகினும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் செய்து தரப்படும். பெண் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, வாழ்க்கையில் வெற்றி, பணக்காரனாக வேண்டுமா? தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகொள்ளும் இடம்:

**விலாசம் :**
**PR. DANSOKHO ALI,**
**55. Rue des Poissonniers, 75018 Paris, France.**
**தொலைபேசி – 0142552036**



**மனோதத்துவ வைத்தியம்**

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஏப்ரல் 21 முதல் 27 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் ஏப்ரல் 28 - 29 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் மே 04, 05 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் மே 11, 12 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.


# 45ம் நாள் நினைவஞ்சலியும்
# வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும், நன்றி நவிலலும்



## யோகானந்தம் சுரேஸ் (சுகந்தன்)

அல்வாய் மேற்கு, அல்வாய் (திக்கம்)

| | |
|---|---|
| அன்னையின் மடியில் | - 1983.02.18 |
| ஆண்டவன் அடியில் | - 2002.03.06 |
| அந்தியேட்டிக் கிரியை | - 2002.04.19 |

**கால் அடி வைத்தாய் இளமையில்**
**ஹாட்லிக் கல்லூரியில்**
**கலைகள் பல கற்கவென**
**கால்நூற்றாண்டில் கலைகள் எல்லாம்**
**கற்றிடுவாய் என்றிருந்தோம்**
**கால்நூற்றாண்டு ஆவதன் முன்**
**காலன் உன்னை மோட்டார் சைக்கிள்**
**வாகனமாய் வந்து கவர்ந்திட்டானே!**

எமது அன்புச் செல்வம் விபத்தில் சிக்கியபோது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோருக்கும், அன்னார் காலமானபோது நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், ஈமக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும், அன்றையதினம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், மலர் வளையம் சமர்ப்பித்தோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 19.04.2002 வெள்ளிக்கிழமை அன்று எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும், அன்னாரின் சக மாணவர்களையும் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**இங்ஙனம்,**
**பிள்ளையின் பிரிவால் துயருறும்**
**பெற்றோர், சகோதர சகோதரிகள்,**
**மாமா, மாமிமார், பேரன், பேர்த்திமார்.**

தகவல்: அ. தங்கேஸ்வரன், லண்டன்.


**மீண்டும் மறுபதிப்பாக வெளிவந்துவிட்டது**
**'தமிழ் பேசுவோருக்கான ஜேர்மன் இலக்கணம்'**

## "Deutsche Grammatik für Tamilisch Sprechende"

- * இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் விற்பனையாகி பல ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் நன்மதிப்பைப் பெற்ற புத்தகம்.
- * இந்நூல் சுவிற்சலாந்தில் பல கல்வி நிறுவனங்களில் பாடநூலாக அங்கீகரிக்கப்பட்டு மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகின்றது.
- * ஜேர்மன் மொழியை இலக்கணத்துடன் மிகச் சிறந்த முறையில் பேச, எழுத, வாசிக்க உதவும் ஓர் அரிய நூல்.
- * ஜேர்மன் மொழியில் உள்ள பல இலக்கணச் சிக்கல்களை மிக எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எழுதப்பட்டுள்ளது.
- * ஜேர்மன் இலக்கணத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை சகல விடயங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.
- * நூற்றுக்கணக்கான பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் போன்றவற்றின் மொழி பெயர்ப்புக்களும் அடங்கியுள்ளன.
- * பாடசாலை செல்லும் சிறார்கள் முதல் வீட்டுப் பெண்கள் ஈறாக வேலைக்குச் செல்லும் ஆண்கள், பெண்கள் சகலருக்குமான கலங்கரை விளக்கம்.

**இன்றே வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்.**
சுவிஸ் நாட்டில் உள்ள பெரும்பாலான தமிழ் வர்த்தக நிறுவனங்களில் இந் நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.
இந் நூலைப் பெற்றுக்கொள்ள விரும்பும் தனிப்பட்டவர்களும் மற்றும் வர்த்தக நிறுவனங்களும் எம்முடன் தொடர்புகொள்ளலாம்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**

| சுவிற்சலாந்தில், | ஜேர்மனியில், |
|---|---|
| N.Saravanaperumal,<br>Schimmelstrasse 4,<br>8003 Zurich,<br>Switzerland.<br>Tel & Fax: 0041-1-2428813<br>E.mail: nallathamby@bluewin.ch | Anojan's Asiatiche Lebensmitel<br>Mulheimer str-22<br>51375 leverkusen-Schlebusch<br>Germany<br>Tel: ++49-214-2066751<br>Fax: ++49-214-2066753 |



## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன் - எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன் - மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ. பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

**உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

# பிரபாவை நோக்கிவந்த கேள்விக் கணைகள்!

அலசுவது-இராஜதந்திரி

இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது எறிகணைகளையே பெரிதும் எதிர்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள், பெரும் படையெடுப்பை மேற்கொண்டு கிளிநொச்சி சென்றிருந்த பத்திரிகையாளரது கேள்விக்கணைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இலங்கையில் எந்தவொரு பத்திரிகையாளர் மாநாட்டிற்கும் இதுவரை காலமும் கூடியிராத தொகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் கிளிநொச்சியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஐந்நூறுக்கும் அதிகமான பத்திரிகையாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

உலகின் அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்தவர்களாக அப்பத்திரிகையாளர்கள் காணப்பட்டிருந்தனர்.

ஒரு 'போர் வீரனின் வாளை விட, பத்திரிகையாளனின் பேனா வலிமையானது' எனக்கூறப்படுவதுண்டு.

வாள் வலிமையானது என்பதற்காக அதன் கூர்மையை அகப்பட்ட அனைத்திலுமே பரீட்சிக்க முயலுவது மடமையாகும்.

பேனாவைக் கையாளுகிறோம் என்பதற்காக கண்டதையும் எழுதுவதோ அல்லது விமர்சிப்பதோ கூட அர்த்தமற்றதாகவே இருக்க முடியும்.

வடக்கே வட்டக்கச்சியில் இடம்பெற்ற புலிகள் இயக்கத் தலைவரது பத்திரிகையாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விகள் இருவகைப்பட்டதாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

பத்திரிகையாளர்களில் ஒரு சாரார், புலிகளது அரசியல் பிரவேசம் மற்றும் சமரச நடவடிக்கைகள் குறித்து கேள்விகளை எழுப்பிய அதே சமயம், மற்றொரு சாரார் புலிகளைச் சீண்டி சங்கடத்துக்குள்ளாக்கும் விதத்தில் வினாக்களை முன்வைத்ததையும் காண முடிந்தது.

எது எப்படியிருந்த போதிலும், புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எத்தகைய நோக்கத்திற்காகப் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டியிருந்தாரோ அந்த நோக்கம் பெருமளவு நிறைவேறியிருப்பதையே அனுமானிக்க முடிகின்றது.

கடந்த இரு தசாப்த காலமாக இலங்கையின் வடக்கு -கிழக்கு பிரதேசம் பாரிய யுத்த அனர்த்தத்தில் சிக்குண்டிருந்தது. இந்த யுத்தம் ஒரு அரசியல் விடிவையே இலக்காகக் கொண்டதாக அமைந்திருந்தது.

சுமார் எழுபதினாயிரம் வரையிலான உயிர்கள் இந்த இரு தசாப்த கால யுத்தத்தில் பலியாகியுள்ளன.

இத்தகைய பாரிய இழப்புக்களுடன் தொடர்ந்த வடக்கு-கிழக்கு யுத்தம் ஒரு முடிவுக்கு வரும் அறிகுறிகளே தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன.

அரசியல் நடவடிக்கைக்கே இடமில்லாது யுத்தம் ஒரு தொடர்கதையாக இருந்து விடுமோ! என அஞ்சியிருந்த நிலைமாறி சமரச நடவடிக்கைகள் குறித்த நம்பிக்கை தற்போது தோன்றியுள்ளது.

இக் கட்டத்திலேயே இராணுவ ரீதியாகவே தம்மைப் பலம் வாய்ந்த நிலையில் கட்டியெழுப்பியுள்ள புலிகள் தற்சமயம் அரசியல் பிரவேசம் செய்துள்ளதுடன், அந்த அமைப்பின் தலைவர் வே.பிராகரன் தமது நிலைப்பாட்டை அனைவரும் அறியும் விதத்தில் பத்திரிகையாளர் மாநாட்டையும் கூட்டியிருந்தார்.

வடக்கு-கிழக்கு யுத்தம் என்பது அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களின் சுதந்திர உணர்வின் வெளிப்பாடாகவே அமைந்திருந்தது.

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், புலிகள் அரசியல் பிரவேசத்தில் வெளிப்படுத்திய ஆர்வத்தை ஏற்றுக்கொண்டதையடுத்தே பல முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

புலிகள் ஏற்கனவே பல தடவைகள் அரசியல் பிரவேசத்தில் ஆர்வம் காட்டியிருந்தனர். ஆனால், அவர்களது கடந்த கால முயற்சிகள் எதிர்பார்த்த பலனைத் தந்திருக்கவில்லை.

இந் நிலையில் தற்போது சர்வதேச சமூகத்தின் அனுசரணையோடு இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வுக்கான அரசியல் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அத்துடன், முழு உலகுமே புலிகளது அரசியல் பிரவேசத்தை வரவேற்றுள்ளதுடன், இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிக்கும் பக்கபலமாக இருந்து வருகின்றன.

இக் கட்டத்திலேயே புலிகள் தலைவர் வே.பிரபாகரன் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட ஒரு கேள்வி குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமானதாகின்றது.

உள்ளூர் பத்திரிகையாளர் ஒருவர் ஆங்கிலத்தில் அக்கேள்வியைக் கேட்டிருந்தார். "The talks are expected to take place in Thailand. When the 'INTERPOL' is on the lookout for Mr.V.Prabakaran with regard to the Rajive Gandhi assasination, will he go there? என்பதே அந்தக் கேள்வியாகும்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக சர்வதேச பொலீஸ் நிறுவனமான இன்டர்போல் திரு.வே. பிரபாகரனைக் கைது செய்யக் காத்திருக்கின்றது. எனவே திரு.பிரபாகரன் தாய்லாந்தில் நடத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றச் செல்வாரா? என்பதே அந்த ஆங்கிலக் கேள்வியின் தமிழாக்கமாகும்.

இக் கேள்விக்கான பதிலை புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் வழங்குகையில் தாய்லாந்துக்குத் தாம் போகப் போவதில்லை எனவும், எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமே அங்கு செல்வார் என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தார்.



ஆனால், திரு.பிரபாகரனை நோக்கிக் கேட்கப்பட்ட அக்கேள்வியை அவதானித்த அரசியல் அவதானிகள் அதில் விஷமத்தனம் அடங்கியிருந்ததையே அறிந்தனர்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்ட சம்பவம் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. அச்சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் நிலவிய சூழல் வேறு; இன்றைய அரசியல் நிலைபரம் வேறாகும்.

ராஜீவ் காந்தி மட்டுமல்ல, வடக்கு-கிழக்கு போராட்டத்துக்குக் குறுக்கீடாக நின்ற அனைத்து சக்திகளையுமே தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக எதிர்த்து நின்ற காலப்பகுதியே அதுவாகும்.

ஆயிரக்கணக்கான இந்தியப் படைவீரர்களும் அந்த யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் கொல்லப்பட்டிருந்தனர்.

எனவே, இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான இந்தியப்படையினரும், அவர்களைத் தொடர்ந்து முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும் கொல்லப்பட்ட சம்பவங்கள் எதிர்பாராத அரசியல் மற்றும் இராணுவ ரீதியான திருப்பங்கள் காரணமாக ஏற்பட்டவையே தவிர, தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவைப் பகைத்துக்கொள்ளும் விதத்தில் அவை நிகழ்ந்தவையல்ல என்பதையே அறியமுடிகின்றது.

கடந்த இரு தசாப்த கால வடக்கு-கிழக்கு யுத்தம் மரணங்களின் வடிவமாகவே இருந்த நிலையில் அக்காலத்தில் நிகழ்ந்த ஒவ்வொரு மரணத்தையும் தோண்டித் துருவிப் பார்ப்பதில் எவ்வித பயனும் இருக்கப்போவதில்லை.

அத்தகையதொரு பீதி நிறைந்த அவலங்கள், அழிவுகள் மிகுந்த ஒரு துர்ப்பாக்கியமான சூழல் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்கும் விதத்திலேயே தற்போதைய அரசியல் தீர்வு முயற்சிகள் சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இன்டர்போல் நிறுவனம் பற்றிக் குறிப்பிட்டுக் கேட்கப்பட்ட அக்கேள்விக்கான விடை கீழ்கண்ட விதத்தில் வழங்கப்பட்டிருக்குமேயானால் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகள் குறித்த அணுகுமுறையை தெளிவாக சுட்டிக்காட்டியிருக்க முடியும்.

When the entire International community is fully supportive of the peace process, why should we worry about the INTERPOL?

அதாவது: அனைத்து சர்வதேச சமூகமுமே இலங்கை இனப்பிரச்சனைக்குரிய சமாதான முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவைத் தரும்போது நாம் எதற்கு சர்வதேச பொலீஸ் நிறுவனமான இன்டர்போல் பற்றிக் கவலைப்பட வேண்டும்?


தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் வெகுவாக ஆர்வம் காட்ட விரும்புவதையே அவர் நடத்திய பத்திரிகையாளர் மகாநாடு தெட்டத் தெளிவு படுத்துகிறது.

இம்மகாநாடு குறித்து கருத்து வெளியிட்ட இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஏனைய துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் பலரும் திரு. பிரபாகரன் கூறியவற்றின் அடிப்படையில் விரிவான அரசியல் தீர்வு பற்றி பரிசீலிக்க முடியுமென நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

எனவே ஒரு பரந்து பட்ட அரசியல் தீர்வு முயற்சிகளில் இறங்கும்போது பழையனவற்றையே அசைபோட்டால் புதியனவற்றைப் பற்றிச் சிந்திக்க முடியாது போய்விடும்.

இந் நிலையில் "பழையன கழிதலும், புதியன புகுதலுமே" இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் தற்போது இன்றியமையாததாகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



புலிகளை ஏகப் பிரதிநிதியாத் தன்ர தலையில தூக்கி வைச்சிருக்கிறவராயும் அரசாங்கத்தையும் எதிர்த்து பதவி விலகத் தயாரா இருக்கிறவராயும் தம்பட்டமடிச்சு ரேடியோவிலயும் ரீவியிலயும் தூக்கியெறிஞ்சு பேசிற தமிழமைச்சரைப் பாத்து அட மகேஸ்வரா எண்டு வியந்திருப்பியள். கூட்டமைப்பு எடுக்கிற முடிவைத்தான் தானுமெடுப்பனெண்டு மின்னல் நிகழ்ச்சியில ஓப்பினாச் சொன்னவர், இப்ப பட்ஜெட் வாக்கெடுப்பில பாதுகாப்பு அமைச்சுக்கு ஆறாயிரம் கோடிக்கு மேல ஒதுக்கியிருக்கிறத கூட்டமைப்பார் எதிர்த்து வாக்களிச்ச நேரத்தில சத்தம் போடாமல் அரசாங்கத்தை ஆதரிச்சு வாக்களிச்சுப் போட்டுக் குந்திப் போட்டார். என்னெண்டு சொல்லலாம் இதை? நிலச் சாயம் வெளுத்துப் போச்சு டும் டும் டும் டும் .. .. நரியின் வேஷம் கலைஞ்சு போச்சு டும் டும் டும் டும் .. ..!

பூனை பைக்குள்ளயிருந்து பாய்ஞ்சுபோட்டுதெண்டு பிரபாவின்ர பத்திரிகையாளர் மாநாட்டைக் கிண்டலடிக்கினம் ஜே.வி.பி. ஆனால் பாருங்கோ, அவையவையிண்ட பைகளுக்க பூதமே மறைஞ்சிருக்கிறத எப்ப திறந்து பாக்கப் போகினமாம்? மற்றவன்ர பைகளில என்ன இருக்குதெண்டு பாக்கிறத விட்டுட்டுத் தங்கட தங்கட சொந்தப் பைகளை முதலில சுத்தம் செய்யிறது நல்லதில்லையோ?

இடைக்கால நிர்வாக சபையில குறுக்கால யாரும் இடம் கேக்கக்கூடாதெண்டு மிடுக்காகப் பேட்டி கொடுத்திருந்தார் சம்பந்தர். கிடைக்காதெண்டு தெரிஞ்சால் மறுக்கிறது புத்தி தான். ஆனால் தங்களுக்கு ஆசையில்லையெண்டு வேஷம் போடுறவை ஏனாம் இதுவரை உந்த இடைக்கால நிர்வாக சபை பேச்சுக்கள் வந்த நேரமெல்லாம் குறுக்கால விழுந்து மறிச்சுக் கொண்டிருந்தவை. எல்லாம் மணிகட்டின மாடு சொன்னால்தான் கேப்பினமாக்கும்.


வருஷப் பிறப்புக்கு இந்தியப் பாட்டுக்காரரையும் கூட்டிக்கொண்டுபோய் யாழ்ப்பாணத்தில பெரும் கொண்டாட்டமெல்லே! அதில என்னை ஆச்சரியப் படுத்தின விஷேசமென்னண்டால் சிங்களப் பாட்டெதையும் பாடவேண்டாமெண்டு ரணில் விக்கிரமசிங்க நேரடியா அறிவுறுத்தல் குடுத்தாராம் பாருங்கோ. தமிழ் மனம் கோணக்கூடாதெண்ட இந்த அக்கறையப்பாக்க சந்தோஷமாயிருக்கு. இறுதித் தீர்வைக் காணும் வரை இந்த உறுதியைக் கடைப்பிடிச்சாலே போதும். வெல் டன் ரணில், கீப் இட் அப்!

மழை ஒருபடியாய்ப் பெய்ய ஆரம்பிச்சிட்டுதெண்டதால மின்சார வெட்டு கொஞ்சம் குறையுமெண்டு மனசுக்குக் குளிர்ச்சியாயிருந்துது. ஆனால் பாருங்கோ அடுத்த பக்கத்தால எரிபொருள் விலையேறப்போகுதெண்டு கேள்விப்படேக்கயெல்லே வயிறு எரியுது. ஒருவாசல் மூடி ஒருவாசல் திறப்பான் இறைவன் எண்டு வினம். இங்க ஒரு வாசல் திறக்க மறுவாசலைப் பூட்டுது அரசாங்கம்? ஆரிட்ட நோக?

பாதை திறந்தாச்சு, பயணம்தான் இன்னும் பேசி முடிவாகேல்லை. காலையில யாழ்ப்பாணத்தில இருந்து வெளிக்கிட்டால் மத்தியானம் கொழும்பு வந்து வேலையை முடிச்சிட்டு பின்னேரம் திரும்பி யாழ்ப்பாணம் வெளிக்கிட்ட அந்தக் காலம் எப்ப வருமெண்டு ஏங்கினபடி இருக்கிற சனத்துக்கு திருப்தியா ஒரு பாட்டு:

"பாதை வகுத்த பின்னே பயந்தென்ன லாபம்,
அதில் பயணம் நடத்திவிடு மறைந்திடும் பாபம்..."

# இலவசமாகத் திரைப்படம் தயாரிக்கலாம்



ஒரு சதம் கூடச் செலவு செய்யாமல் உங்கள் கற்பனையில் ஒரு திரைப்படம் தயாரிக்க முடியும் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா? www.digitalfilms.com என்ற தளத்துக்கு விஜயம் செய்யுங்கள். அது சாத்தியமாவதைக் கண்ணாரக் கண்டு மகிழ்வீர்கள்.

ஏகாந்தமான காட்டுவெளி, நெரிசலான நகரம், அமைதியான கிராமம் என்று பின்னணிக் காட்சிகளும் நிற்பது, நடப்பது, பேசுவது என்று அசைவுகளும் ரெடிமேட்டாக இருக்கின்றன.

பகல், இரவு, அந்தி என்று சூழ்நிலைகளையும் விருப்பத்திற்கேற்ப மாற்றிக்கொள்ளலாம். உங்கள் கட்டளைப்படி நடிப்பதற்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் தயாராக இருக்கிறார்கள். பதினொரு வகையான இசை வடிவங்களும் ரெடி! அப்புறமென்ன... உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டு காட்சிகளை வடிவமைக்க வேண்டியதுதான். உரையாடல்கள் உங்கள் சாய்ஸ்.

ஒவ்வொரு காட்சியாகத் தயாரித்து முடித்து படத்தின் ப்ரிவியூ பார்க்கும் போது உள்ளூர கொஞ்சம் சந்தோஷம் ஓடுவது உண்மை. படம் முடிந்ததும் வழக்கமான திரைப்படங்கள் போலவே டைட்டில் கார்ட் வருகிறது. இயக்குநராக உங்களைக் கௌரவித்தபடி!நீங்கள் பார்த்து மகிழ மட்டுமல்ல, இந்தப் படத்தை நண்பர்களுக்கு அனுப்பிப் பெருமையடித்துக்கொள்ளவும் இவர்களே உதவுகிறார்கள். உங்கள் டைரக்ஷன் திறமையை பரிசோதித்துத்தான் பாருங்களேன்!



பில்கிளின்டனும், அல்கோரும் விரல் சூப்பும் குழந்தைப் பருவத்தில் இப்படித்தான் இருந்திருப்பார்களோ...??

பட உதவி: எஸ். கிஷாந்த், டுபாய்.




பட உதவி: நெட் பிரியன்

# எயிட்ஸை மறைத்து உறவுகொண்டால்

## கம்பி எண்ணவேண்டி வரும்!

எயிட்ஸ் மற்றும் பால்வினை நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அது பற்றி பாட்னருக்கு முடிமறைத்து உடலுறவு கொண்டால் கம்பி எண்ண வேண்டும் என்ற சட்டம் கனடா உள்ளிட்ட சில மேற்கு நாடுகளில் ஏற்கனவே இருந்து வருகிறது. இந்த சட்டத்தை தமது நாடுகளிலும் அமுல் செய்வது குறித்து சில தென்கிழக்காசிய நாடுகளின் சுகாதார அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.



பால்வினை நோயால் பாதிக்கப்பட்ட நபர் உடலுறவு கொள்வதற்கு முன் அவரது உண்மை நிலவரத்தை பங்காளிக்கு கூறி பாதுகாப்பான உறவுமுறை குறித்து அவருடன் ஆலோசித்த பின்னரே காரியத்தை தொடரலாம் என்ற சட்டம் மேற்கு நாடுகள் சிலவற்றில் அமுலில் இருந்து வருகிறது.

பிரிட்டிஷ்கொலம்பியாவைச் சேர்ந்த ஹென்ரி கியுரர் என்ற நபர் இரண்டு கனேடிய பெண்களுடன் நூறுதடவைக்கு மேல் உறவு கொண்டிருந்தார். 1992 முதல் 1994ம் ஆண்டு காலப்பகுதியில் செக்ஸில் சென்ச்சரி போட்ட இந்த நபர் தனக்கு இருந்த பலான நோயை இருவரிடமும் மறைத்துவிட்டார். விஷயம் அம்பலமானதும் இவர்களில் ஒரு பெண் நீதிமன்றத்தின் உதவியை நாடினார்.

இவருக்கு நேர்ந்த கொடுமையை விசாரணை செய்த கனேடிய உச்சநீதிமன்றம் இவ்வாறானதொரு தீர்ப்பை வழங்கியது.

இப்போது இதே மாதிரியான ஒரு சட்டத்தை தங்கள் நாடுகளிலும் அமுல்படுத்தலாமா என்பது தொடர்பாக தாய்லாந்து, பர்மா மற்றும் பிலிபைன்ஸ் அதிகாரிகள் ஆராய்ந்து வருகிறார்கள்.

இந்த நாடுகளில் எயிட்ஸினால் பாதிக்கப்படும் பெண்களில் பெரும்பாலானவர்களுக்கு தங்கள் உடலில் எயிட்ஸ் விதைத்தது யார்? என்பது தெரியாது.

இந்த நாடுகளில் பாலியல் விவகாரங்களில் காணப்படும் அதீதமான ஆணாதிக்கத்தினால் ஆண்களில் பலர் தமக்கிருக்கும் பால்வினை நோய்களை பெண்களிடம் மறைத்துவிடுகிறார்கள். இதனை தடுப்பதே உத்தேச சட்டத்தின் நோக்கம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படியொரு சட்டம் அமுலுக்கு வந்தால் கணவன் தனக்கிருக்கும் நோயை மனைவியிடம் மறைத்தால் கூட அவனுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க முடியும். ■

# என்னுடம்பின் எந்தப் பகுதியை அவள் நேசிக்கிறாள்?

## வெப்தளம் ஒன்று நடத்திய ஆராய்ச்சி!

நாளாந்தம் பெருகிவரும் இணையத்தளங்கள் புதிதாக எதைக் காண்பித்து ரசிகர்களைக் கவர்வது என்று புரியாத நிலையில் தினசரி ஏதாவது ஆய்வுகளை நடத்தி மக்கள் வாழ்வுக்கு "மிகமுக்கியமான" முடிவுகளை வெளியிட்டு வருகின்றன.

இந்த வகையில் அமெரிக்க வெப்தளமொன்று மனித வாழ்வுக்கு இன்றியமையாத ஆய்வொன்றை நடத்தியிருக்கிறது.

நூற்றுக்கணக்கான இளைஞர்களிடம் இந்த ஆய்வின்போது கேட்கப்பட்ட கேள்வி, "உங்கள் உடம்பில் பெண்களை மிகவும் கவரும் இடம் என்று எதைக் கருதுகிறீர்கள்?" என்பதுதான்.

"என்னுடம்பில் பெண்களை ஈர்த்தெடுக்கும் விஷயமென்றால் அது என் அகன்ற மார்புதான்" என 26 சதவீதமான இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

"உப்பிப்பெருத்து உருளையாகக் கிடக்கும் எனது புஜங்களைத்தான் பெண்கள் அதிகம் ரசிப்பர்கள்" என 12 சதவீதமானவர்கள் கூறுகின்றனர்.

"எனது அந்த சமாச்சாரம்தான் பெண்களை வெகுவாகக் கவரும் எனக் கருதுகிறேன்" என்று தங்கள் நம்பிக்கையை வெளியிட்டவர்கள் 10 சதவீதமானவர்கள்.

"எனக்கு எப்பொழுதுமே உயரம் தான் ப்ளஸ் பொயின்ட்" என்று 6 சதவீதமானவர்கள் கூறுகின்றார்கள்.

அடுத்ததாக யுவதிகளை சந்தித்து இதேமாதிரியான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆண்களின் உடம்பில் உங்களைக் கவர்ந்திழுக்கும் பிரதேசம் எது என்று கேட்கப்பட்டபோது கேட்டவர்களே மூக்கில் விரல் வைக்கும்படியாக 49 சதவீதமான பெண்கள் சொன்ன பதில் "ஆண்களின் பின்புற அழகு தான் எங்களைக் கவர்ந்திழுக்கும்" என்பது.



"திடகாத்திரமான உருவத்துடன் கட்டான உடம்பு" என்று கூறியவர்கள் 8 சதவீத யுவதிகள்.

"துருதுருவென இருக்கும் ஆண்களின் கண்களைப் பிடிக்கும்" என்று 20 சதவீதமான பெண்கள் சொல்கிறார்கள்.

இரண்டு சதவீதப் பெண்கள் மட்டுமே ஆண்களின் "அந்த சமாச்சாரத்தை" நேசிப்பதாகக் கூறினார்கள்.

ஆண்களில் அனேகமானவர்கள் நம்பிக்கொண்டிருப்பது போல் அகன்ற மார்புக்கு அடிமையான பெண்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். அது இரண்டு சதவீதம் தான். ஆண்மகனின் புஜபலத்தை ரசிப்பதாக ஒரு பெண்கூடக் கூறவில்லை.

எத்தனை முக்கியத்துவம் மிக்க ஆராய்ச்சியொன்றின் முடிவு பார்த்தீர்களா....?

# விளையாட்டு வீராங்கனைகள் செக்ஸில்

## ஆர்வம் காட்டுவதில்லையாம்



விளையாட்டில் ஈடுபடும் இளம் பெண்கள் செக்ஸ் நடவடிக்கைகளில் அடக்கிவாசிப்பதாக ஆய்வொன்று தெரிவிக்கின்றது. உளவியல் கட்டுப்பாட்டை கடுமையாகப் பேண வேண்டிய விளையாட்டுக்களில் ஈடுபடும் பெண்கள் செக்ஸ் வைத்துக் கொள்வதால் தமது திறமை குறைந்துவிடும் என அச்சங்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மகளிர் விளையாட்டு அமைப்பும் (Women's Sports Foundation) இணையத்தளம் ஒன்றும் சேர்ந்து நியூயோக்கில் இருந்தபடி சர்வதேச ரீதியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தேசிய மட்டப் போட்டிகளிலும் சர்வதேச போட்டிகளிலும் கலந்து கொள்ளும் டீன்ஏஜ் பெண்களில் 5 சதவீதமானவர்களே கர்ப்பம் தரிப்பதாக அறியப்பட்டுள்ளது. 54 சதவீதத்திற்கும் அதிகமான பெண்கள் செக்ஸ் விவகாரங்களில் இருந்து தூரவிலகியிருப்பதையே பெரிதும் விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர். ஆனால், விளையாட்டில் ஈடுபடும் அதேவேளை குழந்தை பெற்றுக்கொள்ளாமல் செக்ஸ் வைத்துக்கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை உயர்ந்தளவு விகிதத்தில் இருப்பதாக இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

விளையாட்டு வீராங்கனைகளில் 8 சதவீதத்தினர் மட்டுமே 10-13 வயதுக்கு இடைப்பட்ட காலத்தில் செக்ஸ் உறவு வைத்துக்கொண்டவர்கள். வருடத்தில் 4 அல்லது 5 தடவைக்கு மேற்படாதவாறு உடலுறவை மட்டுப்படுத்தியிருக்கும் வீராங்கனைகள் 12 சதவீதமானவர்கள்.

சர்வதேச ரீதியில் விளையாட்டுக்கு முக்கியத்துவமளிக்கும் கலாசாலைகள், கழகங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 11 ஆயிரம் பேர் இந்த ஆய்வில் பங்கேற்றிருந்தனர்.

விளையாட்டில் ஈடுபடாதிருந்தால் செக்ஸில் அதிக ஆர்வம் காட்டியிருப்போம் எனப் பெரும்பாலானவர்கள் தெரிவித்தனர்.

இதேமாதிரியான ஆய்வு பிரிட்டனில் ஆண்கள் மத்தியில் நடத்தப்பட்டது. இதன் முடிவுகள் தலைகீழாக அமைந்தன. ஜிம்னாஸ்ரிக் போன்ற விளையாட்டுக்கள் தவிர்ந்த ஏனைய விளையாட்டுக்களில் ஈடுபடும் ஆண்கள் செக்ஸில் இருந்து தூரமாகி வாழவேண்டும் என்று விரும்புவதில்லையாம்.

விளையாட்டு வீராங்கனைகள் செக்ஸைத் தவிர்ப்பதால் உளவியல் கட்டுப்பாட்டை பேண முடியும் என்று நம்புகிறார்கள். இதனை முற்றாக நிராகரிப்பதால் வேறு வகையான உளவியல் தாக்கங்கள் ஏற்படலாம் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.



## சிகிச்சை

↑ உலகிலேயே குழந்தைகளுக்கான மிகச் சிறந்த மருத்துவமனை கனடாவின் டொரென்டோ நகரில் இருக்கிறது. Sick Children Hospital என்ற இந்த மருத்துவமனையில் குழந்தைகளைப் பாதிக்கும் மிகவும் ஆபத்தான நோய்களுக்கெல்லாம் அதிநவீன முறைகளில் சிகிச்சையளிக்கப்படுகின்றது. இங்கே படத்தில் காணும் குழந்தை கம்போடியாவைச் சேர்ந்தது. பிறக்கும் போதே முகத்தில் தோடம்பழ அளவில்பெரிய கட்டி ஒன்று காணப்பட்டது. தலைக்குள் இந்தக்கட்டியின் தொடர்ச்சி மூளைவரையில் நீண்டிருந்தது. கம்போடிய மருத்துவர்கள் கைவிரித்துவிடவே கனடாவில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பிறப்பின்போதான குழந்தையின் தோற்றத்தையும், சத்திரசிகிச்சைக்குப் பின்னரான நிலையையுமே இங்கு காண்கிறீர்கள்.

# அச்சமில்லை அச்சமில்லை அச்சமில்லை..

← சமாதானம் குறித்த நம்பிக்கைகள் அனைத்தையும் சிதறடித்துவிட்டு மத்திய கிழக்கு நெருக்கடி ஒரு பிராந்தியப் போராக பரிணமித்துக் கொண்டிருக்கிறது. பாலஸ்தீன மண்ணில் பலாத்காரமாகப் பிரவேசிக்கும் இஸ்ரேலிய இராணுவம் மோசமான இனப்படுகொலைகளை மேற்கொண்டு வருகிறது. மேற்குக் கரையில் உள்ள ஜெனின் அகதி முகாமில் இஸ்ரேலிய படைகள் கடந்தவாரம் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எத்தனை பேர் என்ற சரியான விபரத்தைக் கூற முடியாதிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைக் குழு கூறியிருக்கிறது. "தீவிரவாதிகளைத் தேடி" இஸ்ரேலியர்கள் நடத்திய தாக்குதல்களில் வீடுகளுக்குள் அகப்பட்டுக்கிடந்த பெண்கள் சிறுவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் ஜெனினில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த மனித அவலத்திற்கு முன்னால் சர்வதேச சமூகம் கண்மூடிக் கொண்டது. "சமாதான ஒப்பந்தம்" எனக்கூறி யசீர் அரபாத்தை வலையில் சிக்க வைத்த நோர்வே அரசு, அவ்வாறானதொரு மத்தியஸ்த முயற்சியில் தாம் ஈடுபட்டதாக ஞாபகமில்லை என்று கூறுவது போல் மௌனம் அனுஷ்டிக்கிறது.

அமெரிக்க இஸ்ரேலிய வல்லாதிக்கத்திற்கு முன்னால் தங்களால் தாக்குப் பிடிக்கமுடியாதெனத் தெரிந்தும் உடம்பில் குண்டுகளுடன் களத்தில் குதிக்கிறார்கள் பாலஸ்தீனப் போராளிகள்.

அல்பத்தாஹ் அமைப்பினால் நடத்தப்படும் ராபாஹ் அகதி முகாமில் சிறுவன் ஒருவன் ஏகே 47 ரக துப்பாக்கி ஒன்றால் குறி பார்ப்பதையே இங்கு காண்கிறீர்கள்.





## மதவெறி

← இந்த நபர் கையில் வைத்திருப்பது தேடியெடுத்த தொல்பொருள் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை. உயிருடன் வைத்து எரிக்கப்பட்ட ஒரு பச்சிளம் குழந்தையின் கருகிய பிரேதம் தான் இது.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தொடரும் இன வன்முறைகளில் சிக்கிய இந்தக் குழந்தை தாயிடம் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தகவல் பெட்டி

## காத்திருப்பு

↓ இதுவும் காட்டில் நடக்கும் செய்தியாளர் மாநாடு தான். தமது புகைப்படக் கருவிகளைத் தயார் நிலையில் வைத்துக்கொண்டு நூற்றுக் கணக்கான புகைப்படப்பிடிப்பாளர்கள் காத்திருக்கிறார்கள். இந்தக் காத்திருப்பு, பல வருடங்களின் பின்னர் "கெமராவுக்கு" முகம் கொடுக்கும் எந்தக் கெரில்லா தலைவரையும் க்ளிக் செய்வதற்காக அல்ல. சில பறவை இனங்களை தங்கள் புகைப்படக் கருவிகளுக்குள் அடக்கும் முயற்சியே இது. பல ஆண்டுகளுக்கு ஒரு முறை அமெரிக்கக்கரையோரங்களிலிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்தைத் தாண்டி வரும் சில வகை அரிய பறவையினங்களை புகைப்படம் எடுப்பதற்காகவே இத்தகை கெமராக்களுடன் காத்திருக்கிறார்கள்.



# நல்ல படத்திற்குச் சம்பளம் குறைப்பது லைலாவின் ஸ்டைலா?

"பார்த்தேன் ரசித்தேன்", "தில்", "நந்தா" படங்களைத் தொடர்ந்து தன் சம்பளத்தை வெகுவாக உயர்த்திவிட்டார் லைலா. இது ஏன் என்று கேட்டால் அவர் சொல்லும் பதில் வித்தியாசமானது.

"படத்திற்கு ஏற்றபடிதான் சம்பளம் வாங்குகிறேனே தவிர, எல்லாவற்றுக்கும் ஒரேமாதிரியாக வாங்குவதில்லை. நல்ல படத்திற்கு நான் சம்பளத்தைக் குறைத்து வருகிறேன். "நந்தா" படம் என் திறமையை வெளிக்கொண்டு வந்தது. அது போல என் திறமையை வெளிப்படுத்தும் நல்ல படங்களுக்கு சம்பளத்தைக் குறைத்து விடுவேன். நல்ல படம் என்றால் நான் ரெடி!"



முரளி-மீனா
படம்: லவ்வர்ஸ்

## காதோடு சொல்லுகிறோம்

'அலைபாய்தே' படத்தில் இரண்டாவது நாயகி அந்தஸ்துடன் அறிமுகமான சின்னத்திரை நட்சத்திர நடிகை வாயாடி என்பது ஊரறிந்த ஒன்று. அவர் உற்சாகபானப் பிரியை என்பது ரகசியமாக இருந்தது. இது பற்றி ஒரு பத்திரிகை எழுதியதைப் படித்துவிட்டு அவர் சொன்னது... இன்னமும் அதிர்ச்சியாக இருக்கிறது. அவர் அப்படி என்னதான் சொன்னாராம்? "நான் என்ன குடிக்கிறேன், இரவை எங்கே கழிக்கிறேன்கிறது என் பர்சனல் விஷயம. அதைப் பற்றி எழுத இவங்க யார்?" என்றாராம். கலி முற்றிவிட்டது.

**க**வர்ச்சி உதட்டழகி சினிமாவே வேண்டாம். சின்னத்திரையே போதும் என்று ஸ்டேட்மெண்ட் விட்டார். ஆனால், திரைமறைவாக அந்த தீபமயமான நடிகையின் அம்மா கம்பனிகளுக்கு, இயக்குநர்களுக்கு போன் போட்டு வாய்ப்பு கேட்டு அன்புத் தொல்லை கொடுத்து வருகிறாராம். அதன் விளைவாகத்தான் மகளுக்கு சின்னச்சின்ன துண்டு துக்கடா வேடங்களாவது சினிமாவில் கிடைத்து வருகிறது.

**ச**முக சேவை நாயகி ஒரு ஆங்கிலப்படம் எடுத்தார் அல்லவா? அதைப் போட்டுத் தெரிந்தவர்களிடம் காட்டிய போது, பலர் உதட்டைப் பிதுக்கவே, ரீஷூட் செய்து பல காட்சிகளை இணைத்திருக்கிறாராம். ஆழம் தெரியாமல் காலை விட்டால் இப்படித்தான் ஆகும் என்று முணுமுணுக்கிறார்களாம் பொறாமைக்காரர் சிலர்.

**த**ன் இன்னொரு சகோதரியைக் களத்தில் இறக்கியிருக்கும் ரன் நடிகை, "சினிமாவில் கிசுகிசு பற்றி வதந்தி பற்றிக் கவலைப்படாதே... உன் சிஸ்டர் என்னைப் பற்றி வராத கிசுகிசுக்களா? அதற்குப் பிறகுதான் நான் பரபரப்பாகப் பேசப்பட்டேன்" என்று அறிவுரை கூறியிருக்கிறாராம். நல்ல அறிவுரை.

**மூ**ன்று ரோஜாக்கள் படம் பரபரப்பாகத் துவங்கப்பட்டாலும், இயக்குநரை நிம்மதியாகப் படமெடுக்க விடுவதில்லையாம் தயாரிப்பாளினி நடிகை. கதை கேட்டு ஓகே சொன்ன நடிகையும் அவரது அண்ணனும் இப்போது எதற்கெடுத்தாலும் தலையிட்டுத் தலைவலி தருகிறார்களாம். தாங்கும் சக்தியை எனக்குத் தா என்று ஆண்டவனை வேண்டுகிறாராம் இயக்குநர். அட சஸ்வரா...!

**'த்**ரிஷாவைப் பற்றி எழுத இன்னும் ஏதாவது மிச்சம் இருக்கா என்ன...?' என்று ஆச்சரியப்படுபவர்களுக்கு ஒரு ஸ்வீட் நியூஸ்... தரிஷா ராஜசுந்தரம், பிருந்தா மாஸ்டர் இருவரிடமும் நடனப் பயிற்சி, நடிகை சோபனாவிடம் முகபாவனைக்கான ஸ்பெஷல் டியூஷன் பெற்று வருகிறார்.

★ ... தீனா டைரக்டர் முருகதாஸ் டைரக்ஷனில் ... படம் தயாரித்து வருகிறார். இந்தப் படம் ... படம் அமைந்தது போல பிரமாண்டமாக ... பேச்சு உலாவுகிறது.

★ நடிகர் விக்ரம் ஞாயிறுக்கிழமைக... குச் செல்வதில்லை. தனது மனைவி குழந்... துக்கொண்டு வெளியில் சென்று விடுவார்... ஆப் செய்து விடுவார். ஞாயிறு குடு... மற்ற நாட்கள் தான் சினிமாவுக்காம்.

## செக்ஸ் 'பாம்...

செக்ஸ் நடிகை ஷகீலா ஒ... இருக்கிறார். இவர்தான் இ... படவுலகில் நம்பர் ஒன்னாம்... மலையாள நடிகர்களின் ... படுத்துவிடுகிறதாம். இந்த ... உடலை என்னெய் பூசியும், ... யில் பகிரங்கப்படுத்தி சினி... சம்பாதித்துக்கொண்டிருக்... ஆச்சரியம், ஸ்லிமாக ... ரசிக்கும் சினிமா ர... மலைப்பூட்டும் மலைய... முடிகிறது என்பது ... ரசனையைப் பு... முடியவில்லையே...' ... கூறுகிறார் பிரப... ஒ...

## கூவம் அரு...

படப்பிடிப... வாசிகள் போ... லிவிங்ஸ்டனும். படம் ... சென்னை அண்ணாசா... பகுதியில் குருவம்மா படப்பிடிப்பில் ... பார்க்க சூழ்ந்திருந்தனர். கொசுக்கடி... படப்பிடிப்பு நடைபெறுவதைப் பார்த்... பாவம் என்று பரிதாபப்பட்டார்களாம். லிவிங்ஸ்டனும், தேவயானியும் அசல் ... அருகே உணவருந்துவது போன்ற காட்... பாராட்டினர். இது ஒட்டுமொத்த சினிம... பாராட்டாம்! லிவிங்ஸ்டன்தான் சொல்கிறா...

## கண்ணழகிக்கு நேர்...

ஷூட்டிங் பண்றோம்னு சொல்லி நியூசி... போய் படத்தின் கதாநாயகியைப் படாதபாடு... ஒரு டைரக்டர். ஷூட்டிங் ஸ்பாட்ல இரு... இதைக் கண்டுக்கல. நொந்துபோய் ... சேர்ந்து, டைரக்டர் செய்த அக்கிரமங்க... கத்தில் சொல்லி அழுதிருக்கிறார் கண்... நடிகர் சங்கம் என்ன சொல்லியிருக்கு... "நீ இன்னும் சங்கத்தில் மெம்பராகலை... அதனால நடவடிக்கை எடுக்க முடியாது"ன்னு திருப்பி அனுப்பிவிட்டார்களாம்.

கட்டழகு வட்ட முகம்- என் கதையில் அவளே கதாநாயகி
கள்ளிருக்கும் முல்லை மலர்-என் கனவில் மலர்ந்த ஒரே காதலி!
கண்மலரும் வண்ண உடல் பொன்னழகோ
கன்னியிவள் புன்னகையில் விண்ணிலவோ!



விக்ரம்-காவேரி-காவ்யா மாதவன்
படம்: காசி

திரையுலக மறுபக்கம் 231

தமிழ்நாட்டிலேயும்...

# டாக்டர் பிரகாஷின் வாக்குமூ... வாய்ப்பை இழந்த ந...

**டா**க்டர் பிரகாஷின் செக்ஸ்டாட் கொம் பிரச்சனை சற்று... கிறது. அவரது சங்கிலித் தொடர்புகள் குறித்துப் பொலீஸார் மே... ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சமீப நாட்களாக வெ... தகவல்களின்படி பிரகாஷின் வாக்குமூலத்தினால் தமிழ் நடிகைகள் பலரி... மண் விழும் போல் தெரிகிறது.

இந்த சிக்கலால் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பவர் ப்ரியமான கோ... டாக்டர் பிரகாஷின் ஆபாசப்படங்களில் ப்ரியா நடித்திருப்பதாகத் தகவல்... தொடர்ந்து ஒப்பந்தமாகியிருந்த படங்கள் பலவற்றிலிருந்து அவர் தூக்கப்... ரேஞ்சுக்கு போகாவிட்டாலும் "அக்கா" ரோல்கள் பலவற்றில் ப்ரியா பு...

ஒரு படத்தில் இவரது கணவராக மலையாள நடிகர் ஜெயராம் நடி... இந்த ஆபாச கேசட் விவகாரம் வெளியில் வந்ததும் இவருடன் நடி... இமேஜ் பாதிக்கப்படும் என்று டைரக்டர் மனோபாலாவை நச்சரித்து பட... ப்ரியாவை எடுக்கும்படி செய்துவிட்டார் ஜெயராம்.

பொலிஸாரிடம் சிக்கிய டாக்டர் பிரகாஷின் முழு நீள(ல) வீடியோ ஒன்றில் ப்ரியாவின் சாயலை ஒத்த ஒரு பெண் நிர்வாணமாக நடனமா... போலவும், இரண்டு ஆண்களுடன் ஒரே நேரத்தில் புணருவது போல... காண்பிக்கப்படுகின்றது. அந்தக் காட்சியில் குறிப்பிட்ட பெண்ணை பின்... மாகக் கட்டித் தழுவும் ஆண் டாக்டர் பிரகாஷ் என்று பொலீஸார் அடையாளம் கண்டுள்ளனர். ஆனால், அப்பெண் கோகுலம் பட கதாநாயகி ப்ரியா தானா? என்பதைத் தெளிவாகக் கூறமுடியாதிருக்கிறதாம்.

இந்த அம்மணி இதற்கு முன்னரும் வேறு சில நீலப்பட விவகாரங்களில் அசத்தியவர் என்பது பொலிவுட்டில் யாவரும் அறிந்த இரகசியம்.

மி
னி
சி
னி

★ ரோஜாக்கூட்டம் ஹீரோ ஸ்ரீகாந் திடீர் வில்லனாக மாறியதால் தயாரிப்பாளர் விளம்பரத்தில் ஸ்ரீகாந் படத்தை எடுத்துவிட்டார். என்ன ஆச்சரியம். படம் மிகவும் பிக்-அப் ஆகிவிட்டது. தியேட்டர் முழுவதும் ஹவுஸ்புல்.

★ தலைமறைவாக இருந்த கார்த்திக் கொஞ்சம் மனம் மாறி வெளியில் வந்து உலாவுகிறார். நண்பர்களுக்குப் போன் செய்கிறார். ஒரு புதிய படமும் ஒப்பந்தமாகியுள்ளார். வரவேற்கத் தக்கதுதான்.

★ பாபா படத்தில் எப்படியும் தலைகாட்ட வேண்டுமென்று தமிழ் நாயகிகள் போட்டா போட்டி போட்டு அருணாச்சலான் சென்று வருகின்றனர். சூப்பர் ஸ்டாரோ மும்பை அழகிகளைத் தேடி ஆள் அனுப்பியுள்ளார்.

★ இவ்வளவு நாள்தான், இவ்வளவு பணம்தான் என்று தயாரிப்பாளர்களை நிர்ப்பந்தப்படுத்திய வடிவேலு முழு ஓய்வில் இருப்பதால் பயந்துபோய் தானே கார் எடுத்துக்கொண்டு தனது பழைய டைரக்டர்களைப் பார்த்து வருகிறார்.

★ தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலப் பெயர்கள் வைப்பது இப்பொழுது மிகவும் பேஷனாகி விட்டது. சத்தியகுமார் என்னும் புதிய டைரக்டர் தனது படத்திற்கு "ஸ்வீட் ஹாரட்" என்று பெயர் வைத்துள்ளார். கதாநாயகன் ஒரு இருதயநிபுணராம். பாதிப்படம் லண்டனில் படமாக உள்ளதாம்.

## கீலா

முகப்பில்/சம்யுக்தா வர்மா

அஜீத்

சூர்யா

## 'குருவம்மா'

...ஜமாகவே கூவத்துக் குடிசை ...ாட்சியளித்தார்கள் தேவயானியும் ...ம்மா'. ...ட்டி தியேட்டர் அருகேயுள்ள கூவம் ...ான சென்னை சகவாசிகள் வேடிக்கை ...துர்நாற்றத்திற்கிடையிலும் கஷ்டப்பட்டுப் ...க்கை பார்க்க வந்தவர் கள், இவங்க ...க்காரக் குடும்பம் போல் கூவம் ...ாக்கப்பட்டதை அனைவரும் ...வைஞர்களுக்குக் கிடைத்த

## அநீதி!

சொர்க்கமிருப்பது உண்மை யென்றே அதைப் பக்கத்தில் வைத்துவிட்டேன்-வெறும் வெட்கத்தை விட்டுவிட்டேன் இனி துக்கப்படுவதில் அர்த்தமில்லை யென்று தோளை நிமிர்த்தி விட்டேன் மனச் சோர்வையகற்றி விட்டேன்!



மனஷ்குமார்-கரிஷ்மா
படம்: நெருப்பு-பூ

# சினிவிசிட்

## மோனலின் பரிதாப முடிவு!

நடிகை மோனலின் உடல் மும்பையில் உள்ள வெர்ஸோவா என்ற இடத்தில் அவருடைய அக்காவும், தமிழகத்தின் முன்னணி நடிகையுமான சிம்ரன் வராமலேயே தீயில் சங்கமித்தது. பிரேத பரிசோதனையில் அவரது மரணம் தற்கொலை என்பது உறுதி செய்யப்பட்டுவிட்டது. இப்போது மோனலின் மரணம் தொடர்பாக அவருடைய காதலரைத் தேடி பொலீஸ் வலை விரித்துள்ளது. அதற்குள் அவர் தலைமறைவாகிவிட்டார்.

இறப்பதற்கு முன்னர் மோனலுக்கும் அவருடைய காதலருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் தொலைபேசி வழியாக நடைபெற்றுள்ளது. அதன் பிறகு ஆத்திரமடைந்த மோனல் தனது சுடிதாரின் துப்பட்டாவினாலேயே தூக்குப்போட்டு மரணித்துள்ளார். மோனலின் மரணத்திற்கு ராஜு சுந்தரத்தின் தம்பி பிரசன்னா என்பவரே காரணம் என்கிறது பொலீஸ் தரப்பு. பொலீஸார் இந்தக் கோணத்திலேயே தமது விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

அப்போது தான் பிரசன்னாவின் கதை அம்பலமானது. கடந்த இரண்டு வருடங்களாக பிரசன்னாவுடன் மோனல் சுற்றித்திரிந்திருக்கிறார். டிஸ்கோவுக்கும் இவருடனேயே போய் வந்திருக்கிறார். சிம்ரனுக்குப் பிறகு மோனலின் வாழ்வில் ராஜுசுந்தரம் குறுக்கிட்டதாகவும், அதன் பின் அந்த உறவும் முறிந்ததால் பிரசன்னா மீது அவர் உண்மையான அன்பைச் செலுத்தியுள்ளார். அதன் பின்னர் திருமணம் செய்ய அவரை வலியுறுத்தியதாகவும் கூறப்படுகிறது. சம்பவதினமும் தன்னைத் திருமணம் செய்யும் படி மோனல் பிரசன்னாவைக் கேட்டிருக்கிறார். ஆனால், பிரசன்னா அவரைத் திருமணம் செய்ய அறவே மறுத்து விட்டார். இதுவே அவருடைய கோபமும், மரணத்திற்கான காரணமுமாகும் என்று பொலீஸ் கூறுகிறது. பிரசன்னாவும் ஓர் நடனக்காரரே! இவர் பலபடங்களில் கதாநாயகனோடு சேர்ந்து குழு நடனங்கள் ஆடியிருக்கிறார். பிரசன்னாவைத் தேடிப் பொலீஸ் வலை விரித்துள்ளது. அவர் கைது செய்யப்பட்டால் மேலும் பல தகவல்கள் வெளியாகலாம். சிம்ரன் இறுதிக்கிரியைகளுக்கு வராமல் போனது மேலும் பலத்த சர்ச்சைகளைக் கிளப்பிவிட இடமுண்டு.

இது இவ்வாறிருக்க, மோனலின் காதல் விவகாரம் தொடர்பாக மற்றொரு ஊகம் தற்போது அடிபடுகின்றது.

மோனலுக்கும்-ராஜுசுந்தரத்திற்கும் இடையே ஏற்பட்ட புதிய உறவு காரணமாகவே சிம்ரன் ராஜுசுந்தரம் உறவு முறிந்ததாகக் கூறப்படுகிறது. இது குறித்து சிம்ரனுக்கும் மோனலுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு அவர் வீடு மாறிச் சென்றதாக ஊகம் தெரிவிக்கப்படுகிறது. இதன் பின்னர் சிம்ரனுக்கு கமலுடனான தொடர்பு கிடைக்கவே அவர் ராஜுசுந்தரத்தை தூக்கி வீசினார் என்றும் கூறப்படுகிறது. இது குறித்து சிம்ரன் மோனலுக்கிடையில் இன்னொரு தடவை வாக்குவாதம் வந்தபோது ராஜுசுந்தரம் விவகாரத்தில் மோனல் குறுக்கிட்டதால்தான் தனக்கு இந் நிலை ஏற்பட்டதாக சிம்ரன் கூறியிருக்கிறார்.

இன்னொரு தகவலின்படி மோனல் ஒருவரைக் காதலித்திருக்கிறார். அவரும் மோனலைக் காதலிப்பது போல நடித்துப் பின்னர் ஏமாற்றி விட்டார். இதேசமயம், சிம்ரன்-கமல் விவகாரமும் பெரியளவில் பேசப்படுவதால் அவர் மனமுடைந்து இந்த முடிவுக்கு வந்திருக்கலாம் என்றும் இன்னொரு தகவல் கூறுகிறது. ஆனால், மோனல் தனது மரண வாக்குமூலத்தைக் கடிதமாக எழுதி வைத்ததாகத் தெரியவில்லை. அப்படி ஒரு கடிதம் இல்லாத பட்சத்தில் வரும் தகவல்கள் யாவுமே உறுதிப்படுத்தப்படாத தகவல்களாகவே அமையும்.

## இரண்டாவது திருமணம்

பாக்யராஜின் "வீட்ல விசேஷங்க" படத்தில் அறிமுகமான நடிகை மோகனா, ஃபீல்டில் அவுட்டாகி, முழுக்குப் போட்டு விட்டு கம்பியூட்டர் படித்து அமெரிக்காவில் செட்டில் ஆனார். தற்போது அங்கே விஜய் மோனேஷ் என்பவரை லவ் பண்ணி மோதிரமும் மாற்றிக்கொண்டாகிவிட்டது. இருந்தும் வரும் 18ந் தேதி வடபழனி முருகன் கோவிலில் இந்து முறைப்படி திருமணம் நடைபெறுகிறது. அன்றே பாம்குரோவ் ஓட்டலில் ரிசப்ஷனும் நடக்கிறது.

## நாயகியாக மிஸ் கேரளா

மிஸ் கேரளாவாக பட்டம் பெற்ற மான்யா, ஏற்கனவே விக்னேஷ் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகி பின் விலகிக்கொண்டார். இவரை மீண்டும் தமிழில் நடிக்கவைக்கும் முயற்சியில் வி.எஸ்.கே. பிலிம்ஸ் நிறுவனம் இறங்கியுள்ளது. இந்நிறுவனம் தயாரிக்கும் "நைனா" படத்தில் ஜெயராம் ஜோடியாக மான்யா நடிக்கப் போகிறார். கதை, திரைக்கதை எழுதி இயக்கவுள்ளார் மனோபாலா.



ரவலி



காயத்ரி ரகுராம்
படம்: சார்லி சாப்ளின்

## ஷமீதாவின் ஸ்டேட்மெண்ட்

"ராஜ்ஜியம்" படத்தில் விஜயகாந்த்திற்கு ஜோடியாக நடிக்க வந்ததன் மூலம் தமிழ்ச்சேவை தொடங்கியிருக்கும் ஷமீதா ஷெட்டியின் ஸ்டேட்மெண்ட்... "மாடர்ன்கேள் போல வளர்ந்திட்ட எனக்கு சேலையோட மகிமை நடிக்க வந்த பிறகு தான் தெரியுது. உலகத்திலேயே ரொம்ப செக்ஸியான காஸ்ட்யூம் சேலைதான். அதற்காக சேலை கட்டி இழுத்துப் போர்த்தி வெறுப்பேற்ற மாட்டேன்! கிளாமரும் பண்ணுவேன்! நாலும் நாலு படம் நடிக்கணும்! நாலு காக சேர்க்கணுமில்லே" என்று யதார்த்தமாகப் பேசுகிறார் ஷமீதா.

## நீங்காத நினைவுகள்

கனவுகளை நினைவுகளாக்கி
என் நெஞ்சத்துள் ஒளியை
ஏற்றிவைத்த காளை-நீ

காதலின் வரைவிலக்கணம்
கூறமுடியாது
ஆனால்! ஒன்றுமட்டும் கூறலாம்
கண்ணீர் வருமென்று

எத்தனை இரவுகள் தாண்டி
ஒரு புதுசுக்கள் ஞாபகம்
புதையுண்டு போனபின்னும்
கன்னிக்காதல் என்பதனாலே
எனக்குள்
வேறொன்று ஊற்றெடுப்பதில்லை

அன்பே எத்தனை இரவுகள்
இறந்து போனாலும்
எனக்குள் நீதான்

என் ஆத்மா மட்டும்
ஏகாந்தத்திலும் சுகபோகமாய்
வேலிக்கட்டையில் தனித்திருக்கும்
சிறு குருவிபோல
ஒரு அன்பு கிடைத்து விட்டதை
எண்ணி....

அன்றாடம் உனைப்பார்க்கும் போது
இனம் புரியாத தவிப்பு
காதலால் காத்தை எவ்வாறு
காத்திருந்து கரம் பிடிக்கும் வரை-என்
கண்களில் வரும் நீருக்கு
அளவேயில்லை
கனவிலாவது கைக்குட்டையை அனுப்பு
துடைப்பதற்கு.

சண்முகநாதன் நகுலா-கதிரவெளி.

## தேன் கிண்ணம்

## அகதி

அஞ்சல் முகவரி தொலைந்து
அஞ்சு வருஷங்களாச்சு!
அடுப்பெரியாமல் விடும்
அந்த நாட்களில்
அடுத்த வீட்டுப் பூனை
ஆனந்தமாய் படுத்துறங்கும்!
கந்தல் ஆடையும்
கையில் கிடைத்த
சட்டி பானைகளும்
காலத்தை ஓட்டும்
கனரகக் கருவிகள்!
நிவாரணம் என்று
நிரையில் போய் நின்றால்
நாளைக்கு வந்தாலென்ன?
கிராம சேவையாளரின் கிண்டல்!
முத்திரை வெட்டப் போனால்
முண்டியடித்துக் கொண்டு
முன்னுக்கு வந்திட்டியளோ?
முகாமையாளரின் கேள்வி!
இத்தனை தடைகளும் தாண்டி
பித்தனைப் போல் கொண்டு வந்த
அரிசியும்' மாவும்' சீனியும்
அடுத்த நிவாரணம் வரை
ஜயிரண்டு பெருக்குப் போதுமா?
அன்பான மனையாளின் அங்கலாய்ப்பு!
யாரை நொந்து என்ன பயன்?
அகதி என்று-அத்தனை
பேருக்கும் இலக்காரம்!

ராஜி தெய்வேந்திரன்-புளியங்குளம்.

## நல்வார்த்தை சொல்வாயோ..?

நீ தெரிந்தே பின்னிய வலையில்
நான் வலிந்தே வந்து விழுந்தேனா?
களித்து நுகர்ந்து காத தூரம் நடந்தபோது
காத்திருப்பேன் என்ற சொல்லி காணாமல் போனாயே

இருதயத்தில் ஈனஸ்வரமாய் ஒரு வலியடி
கண்களில் ஒரத்தில் படர்கின்ற ஈரத்துக்கும்
இதழ் விரியும் புன்முறுவலில் உதட்டோரம்
இடம் பிடிக்கும் சோகத்துக்கும் நீ பொறுப்படி

கழிந்து போன நாட்கள் கனாக்களா?
என்றொரு சந்தேகச் சுவடு
வலிந்து வந்து பேசியவளே-நீ
வராது போனதால் வலிக்கிறது உள்ளம்

நலிந்துபோன வாழ்க்கை
நரகமாய் போனதால் நகரும்
நத்தையாய் நான்-நங்கையே
நாடகம் போடாது நல்வார்த்தை சொல்வாயோ....?

அபிராமி.ஜெ.

## உழவரை நாம் மதித்திடுவோம்

நிலம் பார்த்து நிதமுழுது
பதம் பார்த்து பயிர்வளர்த்து
நிதமொமக்கு உணவளிக்கும்
உழவரை நாம் மதித்திடுவோம்.

எப்பயிரும் செழித்திடவே
எருப்போட்டுக் கருத்துடனே
விளைவித்து விருந்தளிக்கும்
விதைப்போரை மதித்திடுவோம்

பச்சையாகப் பயிர் வளர
இச்சையுடன் தனதொளியை
மிச்சமாகத் தந்துதவும்
பகலோனின் பதம்பணிவோம்

விஞ்ஞானியாய் ஆனலென்ன
விண்வெளியில் பறந்தலென்ன
ஒருவேளை உணவுண்ண
உதவுவது உழவர்தானே

சேற்றிலே தினம் உழைத்து
சோற்றை தினம் தருகின்ற
உழவரிங்கு இல்லையென்றால்
உனக்குத்தான் வாழ்வேது

வியர்வையால் தான் குளித்து
விருந்து தினம் தருகின்ற
விதைப்பவர் இல்லையென்றால்
விடிந்திடுமா நம்பொழுது

தானியம் தனை வளர்த்து
தானும் தினம் வாடுகின்ற
விவசாயி இல்லையென்றால்
விமோசனம் தானேது

கோட்டை முதல் குடிசைவரை
குமரிமுதல் குமரிவரை
அனைவரும் உணவுண்ண
அருள்பவன் உழவன்தானே

உழைப்பவர் ஒதுங்கி நின்றால்
பிழைப்பவர் எவருமில்லை
களைப்பது பார்த்திடாமல்
உழவரைநாம் திதித்திடுவோம்.

மாணிக்கன் இளங்கோ-முன்னம்போடி வெட்டை.

## தமிழ் கைதி பேசுகிறேன்

கந்தல்களையே
சொந்தங்களாகக்கொண்டு
காலம் கழிக்கும்
சொந்த நாட்டின்
பந்தம் நான் எனக்கூற முடியாது
தவிக்கும்
தமிழ் கைதி பேசுகிறேன்!

வளர்ந்தது கருவறைக்குள் தான்;
வளரப் போவது சிறையறைக்குள்
என்று தெரிந்திருந்தால்
'அம்மா... நான்
தரணியில்' தமிழனாய்
தவழ்ந்திருக்கமாட்டேனே அம்மா?

எல்லோரும் பசியாறி
முடிந்த பின்
எஞ்சியிருக்கும்
எச்சங்கள் தான்
என் வயிற்றுக்கு
மிச்சங்களாய்....
காரணம் நான் தமிழ்க்கைதி!

தியாகங்களுக்காக சிறை சென்றார்
எம்முன்னோர்-சில யாகங்களுக்காக நான்
இன்று அக்னியில்
தள்ளப்பட்டுள்ளேன்!
வேடிக்கை பார்வை வேண்டாம்
நான் தமிழ் கைதி பேசுகிறேன்!

விடுதலை வேள்விக்காக
உயிரோடு எரிக்கப்படும்
அஹிம்சை ஆகுதி நான்
கவலைப்படேன்!

உதாசீனப் பார்வைகளாலும் வீண்
உதைகளாலும் ஒடுங்கிப் போகவில்லை'
உரமாகிவிட்ட மனதோடு
இன்னும் உரக்கச் சொல்வேன்
நான் ஒரு தமிழனென்று!

எவரும் சொல்ல வேண்டாம்
வரலாறு சொல்லட்டும்
சிறை சென்ற தமிழன்
மரணம் வென்ற மனிதனென்று!

வட்டகொடை-சி.சிவகுமாரன்.

## நீ வருவாய் என

உன் வரவுக்காகவே
அண்ணாந்து பார்க்கும்
என் கண்கள்

வறண்டு போன என்னிதயம்
உன் ஒரு துளிக்காய்....
ஏங்கியதுண்டு

உன் வரட்டுக் கௌரவத்தை
நீ எனக்காக மாற்றிக் கொள்வாயா?
காத்திருந்து சலித்து விட்டது.

உன் வரவையெண்ணி
இங்கு எத்தனை கனவுகள்
கற்பனைகள் எதிர்பார்ப்புகள்

தெரியும் நீயென்றும்
கனவாக மாட்டாயடி
துணிந்து வந்து நனைப்பாயெனை

நீ பொய்த்துப் போகக் கூடாதென்று
நான் தினம் கடவுளிடம் மன்றாடுகிறேன்
நீ பொய்த்தால் நான்.

நீ இன்று வர மறுத்தாலும்
நாளை நீ வருவாய் என
தினமும் எதிர்பார்க்கிறேன்.

உனையெண்ணி கலங்குமெனக்கு
கண்ணீர் கூட உன்னையே
ஞாபகப்படுத்துதடி

தூய்மையே நீயிவன்
அசுத்தம் என்றோ

நெருங்க மறுக்கிறாய்?

உனக்காய் மரிக்கக்கூட
தயாராகிறேன், இருப்பினும்
உனை சேராமல் தவிக்கிறேன்


வானொலி, தொலைகாட்சியிலும்
உன் வருகையைத்தான்

எதிர்பார்க்கிறேன் ஆவலாய்.


கலையாத மனதோடும்
உலர்ந்த ஊனோடும் காத்திருக்கிறேன்
நீ வருவாய் என.
மழையே...

குமாரன் பிரசாத் குமார்-பண்டாரவளை.


## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ். சிவா
வயது:
முகவரி: Al. Morouj, P.O.Box No. 2166, Doha, Qatar.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: B. இளையராஜா
வயது: 21
முகவரி: இல. 43, யூனியன் பிளேஸ், கொழும்பு-02.
பொழுது போக்கு: பேனா நட்பு, கிரிக்கட்.



பெயர்: எம்.எல்.எம். இம்ரான் கான்
வயது: 22
முகவரி: P.O. Box-8491, Doha, Qatar.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

## கவனி முன்னேறு நில்

## எதிர் நீச்சல் வெற்றியின் சாட்சி

**வா**ழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டவர்கள் தான் மகத்தான முறையில் வெற்றி பெற்றிருப்பதைக் காணமுடியும். பொதுவாக நாம் நீரின் போக்கிலேயே போகின்றவர்களாகவே இருக்கிறோமே தவிர-

நீரை எதிர்த்துப் போகின்ற எதிர் நீச்சல் வாழ்க்கையாக இல்லை. முன் ஏர் போகின்ற போக்கில் செல்லும் பின் ஏர் வாழ்க்கையாகத்தான் இருக்கின்றது. ஏன் இந்த நிலை?

காலம் காலமாக ஒரு பற்றாக்குறை வாழ்க்கையை நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமே! இது நியாயம் தானா? இருப்பதைக் கொண்டு மகிழ்வு பெறுகிறோமே தவிர' அதனை அபிவிருத்தி செய்து வாழ்வாங்கு வாழ முயற்சி செய்கிறோமா?

தன்னம்பிக்கையுடன் செயல்படுபவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்றே தீருவார்கள். இதனை அறிந்து பின்பு நாமும் தன்னம்பிக்கையோடு செயல்பட முடியும் அல்லவா? நம்மைப்பற்றி பிறர் என்ன நினைப்பார்களோ என்ற பிறருடைய கருத்துக்களுக்கு முதன்மை கொடுத்து அதற்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொண்டால் ஒருபோதும் தன்னம்பிக்கை உடையவர்களாக இருக்க முடியாது.

ஒவ்வொருவரும் அவரவர் விருப்பு வெறுப்பிற்கும் ஏற்ப மன வளர்ச்சிக்கும் தளர்ச்சிக்கும் ஏற்ப அனுபவங்களுக்கு ஏற்ப நம்மைப் பற்றிய தங்களுடைய கருத்துக்களைக் கூறுவார்கள்.

நாம் அவர்களுடைய பேச்சைக் கேட்கவும்கூடாது கவனம் செலுத்தவும் கூடாது. அவர்களுடைய பேச்சைக் கேட்டால் நாம் தன்னம்பிக்கையைப் பெறவே முடியாது. பல மரத்தைப் பார்ப்பவன் ஒரு மரத்தையும் வெட்ட மாட்டான் என்பது பழமொழி.

நம்முடைய நெறிமுறைகளை நாம் தான் முடிவு செய்ய வேண்டும் நல்ல நெறிமுறைகளோடு நாம் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் அதில் வரும் இன்பதுன்பங்களை வெற்றி தோல்விகளை ஏற்று வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

பிறர் கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமே தவிர அதனையே அறிவுரையாக ஏற்றுக்கொள்ளக் கூடாது. அதில் உண்மை இருக்கிறதா? வளர்ச்சியை நோக்கிச் செல்கிறதா என்று சிந்திக்க வேண்டும்.

நன்மை இருந்தால் நாம் ஏற்றுக் கொண்ட செயல்பட வேண்டும் நம்முடைய வளர்ச்சியைத் தடைப் படுத்துகின்ற கருத்தாக இருந்தால் அதனை அறவே அகற்றிவிட வேண்டும்.

பிறருடைய வேண்டாத பயனில்லாத சொற்களுக்கு எல்லாம் செவிசாய்த்தால்' மனத்தில் இடம் கொடுத்தால்' நெல் வயலில் களையைப் போல நம் முழுமையான ஆற்றலின் ஒரு பகுதியை அது எடுத்துக்கொள்ளும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும் முதற்படி நமக்கென்று வகுத்துக் கொள்ளும் சிறந்த கொள்கையின் படி நடந்து கொள்வதுதான். துன்பங்களே வந்தாலும் அதனை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து செல்வதுதான். தெளிவான கண்ணோட்டம் இருந்தால் நம்மிடம் தன்னம்பிக்கை மிகுந்து இருக்கும். தகுதி' திறமை' அறிவு' ஆற்றல் பற்றிய தெளிவான கணிப்பு இருக்கும்.

தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள நாம் மேற்கொண்ட குறிக்கோளில் உறுதியுடன் தீர்மானமான முடிவுடன் இருக்கவேண்டும். ஏதாவது ஓர் இடையூறு வந்தால் அதனை விட்டுவிட்டு மற்றொன்றைப் பற்றிக் கொள்ளக் கூடாது.

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

இவ்வாரச் சிறப்புக்கவிதைப் பகுதியில் கவிதாசரணின் 'மெஸ்மெரிசம்' என்ற கவிதையும் கீதாஞ்சலியின் 'மணல்தேசம்' என்ற கவிதையும் இடம்பெறுகின்றது.

## மெஸ்மெரிசம்

கவனி
கண்களைக் கவனி.

இரக்கப் படாதே;
சோர்வடையாதே;

என்ன நினைப்பார்களோ
என்று தலை தாழ்த்தாதே.
கண்களைக் கவனி.

எத்தனை முறைதான்
தங்களிடமிருந்து
பிடுங்கிப் பிடுங்கி
எறிவார்களென்று
பார்ப்போம்.

இமையாது
கழுத்தைத் திருப்பாது
கரு விழி மையத்தில்
கதிர்களைப் பாய்ச்சு,

ஆண்களோ
பெண்களோ
அந்நியரோ
நமவரோ
முகங்களா முக்கியம்?

கண்களைக் கவ்வு.

பயப்படுகிறார்கள்
கண்களிடம்.

தம் சொந்தக் கண்களுக்கே
பயப்படுகிறார்கள்.

பார்வைகள் எங்கெங்கோ....

பேச்சுக்கள் எதனெதனிடமோ.

பொய் தியானங்களின்
இமைத் திரைகள்
தப்பித் தவறி
மோதும் பார்வைகள்
சிதறி ஒடுங்கி
பகலாய் ஓர் அந்நியம் தேடும்.

நம்பிக்கையின்மையா?
பிடிபட்டு விடும்
தலைமறை வாழ்வச்சமா?

பதிலுக்கு
தம்மைப்
பார்க்காததை மட்டும்
பார்ப்பதன் திட்டம் என்ன?

அழகானவை
என் கண்களைப் போலவே
உன் கண்களும்.

குருரங்கள்
இனிமைகள்
பரிதாபங்கள்
சாகசங்கள்
ஒன்றாய் கலங்கிவிட்ட அழகு
அதன் சின்னப் பள்ளங்களுள்
அருவியாய் விழும் பிரபஞ்சம்.

பள்ளங்கள் வழிய
திக்கெங்கும் கிளைக்கும் நதிகள்.

ஒரு மிடறு அள்ளிப் பருகத்
துணிவற்ற
தாகத்தால் வெறியுண்ட
விலங்குகளின் இடப் பெயர்ச்சியோ
முடிவில்லாமல்'
இங்கே வா
என் விருந்தாளியே!

ஒரு வார்த்தை பேச வேண்டாம்.

எல்லா அறிமுகங்களும் எதையும்
சொல்லாதவை.

குறுகுறுப்பின்றி வெறுமனே
பார்த்துக் கொண்டிருப்போம்
சுடர்கள் பொருத.

கண்கள் எரிந்து, கசிந்து,
கண்ணீர் மல்கும் வரை,
நம் புராதன மொழி,
நம் புராதன இதயம்,
மீளும் வரை.

-கவிதாசரண்.

## மணல் தேசம்

கண்ணுக்கு எட்டிய
தூரம் வரை
மனிதர்களை
காண முடியவில்லை.

மணல் பரப்பும்- அதில்
மனிதர்களின்
காலடி சுவடுகளும்.

ஊர்திகள் நகர்வதும்-அதன்
சத்தங்களும்
நீலநிற சமுத்திரமும்-அதன்
துள்ளிக் குதிப்பும்.

பசுமையான மரங்களும்-அதன்
அசைவுகளும்
ஆனால் மனிதர்கள் எங்கே!?

பாரதியார் கவிதையும்
ராமாயணமும்
பைபிளும் குர்ஆனும்
கால் பரப்பி
படபடத்துக் கொண்டிருந்தது
அனாதைகளாய்.

ஆங்காங்கே கூச்சல்கள்
அடிதடி ஓசைகள்.
அலறல்கள்
நியாய அநியாய குரல்கள்
வயலின் இசை.

ஓசைகள் வருகிறது
மனிதர்கள் எங்கே!?

மாடுகளும் நாய்களும்
என்னை கடந்துதான் செல்கிறது
ஆனால் என் கண்கள்
மனிதர்களைத்தான் தேடுகிறது.

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை
மனிதர்களை காணவில்லை
அப்படியென்றால் நீ யார் என்ற கேள்வி
வரலாம்!

நான் யார் என்று
எனக்கே தெரியவில்லை.
நீயாவது சொல்லேன்
ஆமாம்... நீ யார்?

-கீதாஞ்சலி.

லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# கழுத்தைக் கவனியுங்கள்

உடலின் மிக முக்கியமான பகுதி கழுத்து. ஆனால், நகைகள் போட்டு அழகு பார்ப்பதைத் தவிர, மற்ற நேரங்களில் அதைப் பெண்கள் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. வயதாவதன் முதல் அறிகுறி கழுத்தில் தான் ஆரம்பிக்கும். கழுத்தழகுக்கு சில டிப்ஸ்.....

★ கழுத்தழகைக் கெடுப்பதில் மிகமுக்கியமானவை மருக்கள். இதை அப்படியே விட்டால் மற்ற இடங்களுக்கும் பரவும். எனவே திறமையான அழகுக் கலைஞர் அல்லது சரும மருத்துவர்களிடம் மரு நீக்கும் சிகிச்சையின் (கேட்டரை ஸேஷன்) மூலம் அகற்றிக்கொள்வதே நல்லது.

★ ஃபேஷியல் மற்றும் பிளீச்சிங் செய்து கொள்பவர்கள் கழுத்திற்கும் அவற்றைச் செய்து கொள்ள வேண்டும்.

★ குளிக்கும் போதும், முகம் கழுவும் போதும் கழுத்தை நன்றாகச் சுத்தப் படுத்த வேண்டும். கழுத்தில் அழுக்கு சேரக்கூடாது.

★ கழுத்தில் அணியும் மஞ்சள் கயிறு அடிக்கடி மாற்றப்பட வேண்டும்.

★ கழுத்திற்கான செயின் போன்ற நகைகளை வாரத்திற்கொருமுறை சோப்புத் தண்ணீரும் எலுமிச்சம் பழச் சாறும் கலந்த கலவையில் போட்டு சுத்தம் செய்ய வேண்டும்.

★ முல்தானி மிட்டி, பன்னீர் மற்றும் கிளிசரின் மூன்றையும் கலந்து கழுத்தில் தடவி, சிறிது நேரம் ஊற விட்டுக்கழுவி வந்தால் கழுத்துப்பகுதி பளிச்சென்றாகும்.

★ பாலாடையுடன் குங்குமப் பூ கலந்து கழுத்தில் தடவி, சிறிது நேரம் ஊறவிட்டுக் கழுவி வந்தால், கழுத்தின் கருமை நீங்கும்.

★ முதுமையின் முதல் அடையாளமாகக் கழுத்தில் சுருக்கங்கள் ஏற்படும். அதை வளரவிடாமல் தடுப்பதும், வந்த உடனேயே சரி செய்வதும் நம் கையில் தான் உள்ளது.

★ ஒரு முட்டையின் வெள்ளைக்கருவோடு ஒரு ஸ்பூன் தேன் கலந்து கழுத்தில் தடவி, அரை மணிநேரம் ஊற விட்டு கழுவி வந்தால், சுருக்கங்கள் நீங்கிக் கழுத்து அழகு பெறும்.

★ பியூட்டி பார்லர்களில் கழுத்திற்கென்றே இப்போது பிரத்தியேக சிகிச்சைகள் தருகிறார்கள், அவையும் பலன் தரும்.

**கழுத்திற்கான பயிற்சிகள்.**

★ தினமும் கழுத்தை கிளாக் வைஸ் மற்றும் ஆண்ட்டி கிளாக் வைஸ் முறைகளில் எட்டு முறைகள் சுற்றவும். தலை சுற்றுகிற மாதிரியிருந்தால் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளலாம்.

★ குளிக்கும் போதும், முகம் கழுவும் போதும் கழுத்தைக் கீழிருந்து மேல் நோக்கி மசாஜ் செய்து விடவும்.

★ பின்பக்கமாகக் கழுத்தை வளைக்கவும். அதே நிலையில் வாயைத் திறந்து மூடவும். இந்தப் பயிற்சி கழுத்தில் கோடுகள் விழாமல் தடுப்பதோடு, டபுள் சின் எனப்படும் பிரச்சனை வராமலும் காக்கும்.

★ வாரம் இரு முறைகளாவது ஸ்கரப்பர் உபயோகித்து, கழுத்தை நன்றாகத் தேய்த்துக் கழுவவும். இது கழுத்தின் சருமத்திலுள்ள இறந்த செல்களை அகற்றும்.

★ தூங்கும் போது தலையணையை உபயோகிப்பதைக் கூடியவரையில் தவிர்த்து விடவும். இது கழுத்தழகுக்கு உத்தரவாதம் தரும்.

★ அரோமா சிகிச்சையில் கழுத்தழகைக் காக்கவென இப்போது பிரத்தியேக எண்ணெய்கள் வந்துவிட்டன. அழகுக்கலை நிபுணரின் ஆலோசனையின் பேரில் அவற்றில் பொருத்தமானவற்றை வாங்கி உபயோகிக்கலாம்.

★ கடலைமாவு, பயத்தம் மாவு என எதில் முகத்திற்கு பேக் போட்டாலும் கழுத்திற்கும் போட வேண்டும். இல்லாவிட்டால் கழுத்து ஒரு நிறத்திலும், முகம் வேறு நிறத்திலும் காட்சியளிக்கும்.

★ முப்பது வயதைத் தொட்டவர்கள் அனைவருக்குமே கழுத்தில் மெதுவாகக் கோடுகள் ஆரம்பித்துவிடும். அதற்கு ஆரம்பத்திலிருந்தே சரியான பராமரிப்பு அவசியம்.

★ நல்ல நிறமாக இருப்பவர்களுக்குக் கூட கழுத்து மட்டும் கறுத்துப் போயிருக்கும். இவர்கள் உடல் எக்கச்சக்கமாகப் பெருத்திருந்தால், அப்படி ஆகக் கூடும்.எடையைக் குறைத்தாலே இவர்களுக்குக் கழுத்துக் கறுப்பு போகும்.


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் 0

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 27- 04-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சல்வார்?
## தலவாக்கலை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான் | எஸ். சுபாஷினி, மெயின் வீதி, தலவாக்கலை. |
| --- | --- |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




சீதாராவும், தாமுவும், அபியும் சற்று நேரத்தில் வந்தனர். அவர்கள் அனிதாவிடம் பேசவில்லை.

"தாமு சார்! அவருக்கு எப்படியிருக்கு?"

"அனிதா! அந்த டாக்குமெண்ட்கள் எல்லாம் எங்கே?"

"எங்கிட்டே இருக்கு சார்!"

"நாங்க ஸ்ரீலதா இண்டர்நேஷனல் ஓட்டல்ல தங்கியிருக்கோம். அந்த டாக்குமெண்ட்டுகளை அங்க... வேண்டாம்... வேண்டாம்... நீ உங்கிட்டயே எல்லாத்தையும் வெச்சிரு" தாமு சொன்னார்.

"எனக்கு எதுவும் புரியலை" என்றாள் அனிதா.

"புரிய வேண்டாம்... அதுவே நிம்மதி."

மதியக்கா, சிவகாமியக்கா இருவரும் வந்தார்கள். குளித்துவிட்டு நல்ல உடை அணிந்து பதற்றமில்லாமல்தான் இருந்தார்கள். ரொம்ப கூர்ந்து கவனித்தால் தான் அவர்களின் சாம்ராஜ்யம் இடிந்து போய்விட்ட கவலை தெரியும்! அனிதாவுக்குத் தெரிந்தது!

அனிதாவைப் பார்த்து "நீ இங்க இருக்கியா?" என்றார்கள். "நீ வந்த வேளை... எல்லாச் சொத்தையும் அட்டாச் பண்ணியாச்சு!"

"சும்மாரு சிவகாமி" என்று தாமு அதட்ட.

"எங்கேயோ புடிச்சகான் பாரு வைரவன்! பாரிஜாத புஷ்பம்... தேவலோகத்திலிருந்து... அதான் வாரிக்கிட்டுப் போயிருச்சி" என்றனர்.

தாமு அதட்டலாக, "நாம ஷோ்ல ஏய்ச்சா இந்தப் பொண்ணு என்ன செய்யும்! அனிதா, நீ போயிரும்மா... இங்க உனக்குச் சூழ்நிலை சரியில்லை" என்றார்.

அவர் இப்ப எங்கே இருக்கார்?" – அனிதா.

"எங்களுக்கே தெரியாதும்மா... சிபிஐ கஸ்டடியில வெச்சிருக்காங்க. வைரவனை ஜாமீன்ல எடுக்கிறதுக்கும், "ஹேபியஸ் கார்பஸ்"ங்கற ரிட் மனு தாக்கல் செய்யிறதுக்கும் பெரிய லாயர் கிட்ட ஏற்பாடாயிருக்கு. ஆனா, சிபிஐ காரங்க வைரவனை "தடா"வில கூட்டிட்டுப் போயிருக்காங்க... பதினைஞ்சு நாள் டயம் கேட்டிருக்காங்க..."

"தாமு சார்! அவரை நான் பார்க்க முடியாதா?"

"இப்ப யாரும் பார்க்க முடியாதும்மா! தொடர்ந்து டெல்லியிலிருந்தும், பம்பாய்லருந்தும் அதிகாரிங்க வந்து கேள்வி கேக்கிறாங்க..." என்றார் தாமு.

அனிதாவும், சீதாராமனும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்து பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோது, சீதாராமன் கேபத்தில் சீறினான்.

"என்ன ஒரு ஏமாத்து வேலை பாத்தியா அனி?! என்ன ஒரு மோசடி! சினிமா செட்டு மாதிரி, கட்-அவுட் மாதிரி ஒரு பிரமாண்ட சாம்ராஜ்யத்துக்குப் பின்னால எல்லாம் ஏமாத்து வேலை... தகிடுதத்தம் செஞ்ச பணம்!"

"யாரை ஏமாத்தினார்?"

"எல்லாம் மக்களைத் தான்... உன்னையும் என்னையும் போல சாதாரண ஜனங்களை... ஷோ் விலை உசா்றதேன்னு அவனவன் தன் வாழ்நாள் சேமிப்பு எல்லாத்தையும் போட்டு வாங்கியிருக்காங்க. இப்ப லட்சம் குடும்பங்கள் தலைல கை வெச்சுட்டான்! கிராதகன்."

"நல்ல வேளை நானும் பாங்க் வேலையை விட்டுட்டு அவன் கூட சேர்றதா இருந்தேன். அனி... உன்னைப் பார்க்கத் தான் எனக்கு ஆத்து ஆத்துப் போறது."

சீதாராமன் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

"வைரவனுடைய எல்லா ஆபீஸையும் சீல் வெச்சு மூடிட்டாளாம்... ஊழல் மோசடி மொத்தத்தையும் கண்டு பிடிச்சாச்சுன்னா மூர்க்கத்தனமா நடந்துப்பா!"

பஸ் வந்தது, அது நிரம்பி வழிந்தது.


"ஏறிக்கோ... இதை விட்டுட்டா அரை மணிக்கு பஸ் கிடையாதாம்."

அனிதா பஸ்ஸினுள்... அந்த இறுக்கத்தில், கசகசப்பில் நின்று கொண்டு வந்தாள். சீதாராமன் அவளருகில் படாமல் நின்று கொண்டு டிக்கெட் எடுத்தான்.

பஸ்ஸிலிருந்து இறங்கி உசேனியா ஸ்டோரின் எதிரே வந்ததும் அனிதாவுக்குப் படபடவென்று வந்தது.

"சீதா... எங்கேயாவது கூல்டிரிங்க் கிடைக்குமா...?"

அவர்கள் ப்ரகாஷ் கஃபேயில் போய் உட்கார்ந்து கொள்ள, அனிதாவுக்குத் தண்ணீர் அருந்தியதும் படபடப்பு அடங்கியது. சுற்றிலும் பார்த்தாள். விலைப் பட்டியலும், மேஜைபோல் இருந்த குளிர்பதன சாதனமும், நெற்றியில் சந்தன மிட்ட முதலாளியும், ராகவேந்திரர் படத்தருகில் ஊதுபத்தியும் எல்லாமே வேற்றுலக அடையாளங்கள் போலிருந்தன.



"அனி... கோவிச்சுக்காம இருந்தா நான் ஒண்ணு சொல்லட்டுமா?"

"ம்..."

"உனக்கு ஏற்பட்டது அநீதி, துரோகம்."

நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா

"அதைத் திருப்பித் திருப்பிச் சொல்றதில் என்ன பிரயோஜனம்?"

"திருப்பித் திருப்பிச் சொல்லலை... உனக்கு ஒரு ஏற்பாடு செய்யத்தான் சொல்றேன்."

"ஏற்பாடா?"

"அனி! இப்பகூட... இப்பகூட எதுவும் தாமதமில்லை. வைரவன் உன்னைக் கல்யாணத்துக்குச் சம்மதிமா? ன்னு கேக்கக்கூட அவகாசம் கொடுக்காம புயல் மாதிரி வந்து உன்னைக் கல்யாணம் செஞ்சுண்டான். இதில நாங்க எல்லோருமே ஏமாந்துட்டோம். அவன் தன் பணம் பகட்டுல அத்திம்பேர், அக்கா, நான், சுகந்தி, ராஜாராம் அத்திம்பேர், ஜிம்பு இப்படி நம்ம குடும்பத்துல எல்லாரையும் மயக்கி வளைச்சுட்டான். அவன் உண்மை சொரூபம் இப்ப தெரிஞ்சப்புறம் மிஞ்சறது உன் வாழ்க்கைல ஒரு கேள்விக்குறி அனி! நான் சின்ன வயசில் டிராயர் பாக்கெட்ல உனக்கு நிறைய நாவப்பழம் கொண்டு வருவேனே! ஞாபகம் இருக்கா? கொஞ்சம் உப்புப் போட்டுண்டு அடிக்கடி நாக்கை நீட்டி நீட்டிக்கொண்டு சாப்பிடுவோமே... அப்பா, அம்மா விளை யாட்டு விளையாடுவோமே ஞாபகம் இருக்கா? அந்த அறியாப் பருவத்தில இருந்து அனி, நதன் உன்னைக் காதலிக் கிறேன். பொட்டிபூரா எட்டு வருஷம் டைரில உன்னைப் பத்தி எவ்வளவு எழுதியிருக்கேன் தெரியுமா? அனி... என் வாழ்க்கைல மிகப் பெரிய ஏமாற்றம் உனக்குக் கல்யாணம் ஆனது! உன்னை நான் இழந்ததும் தற்கொலை கூடப் பண்ணிக்கலாமான்னு இருந்தது. சே... நான் ஒரு சாதாரண கிளார்க்.... அதனாலேதானே சொந்த அக்கா பொண்ணை உரிமையோட கேக்க முடியலைன்னு ரொம்ப வருத்தமா இருந்தது. கடைசில கடவுளாப் பார்த்து ஒரு வழி பண்ணிட்டார்."

"வழியா?"

"அனி... நான் உன்னை இன்னும் காதலிக்கிறேன். உன்னை நான் கல்யாணம் பண்ணிக்க இப்பவும் தயாரா இருக்கேன்."

"சீதா... நான் கல்யாணமான பொண்ணு!"

"பரவால்லை, காத்திருக்கேன்... நீ வைரவன் கிடடேயிருந்து இப்ப டைவோ்ஸ் வாங்கிடலாம்!"

அனிதா சற்றுத் தாமதித்து, "இருக்கிற குழப்பம் போறாதுன்னு புதுசா ஒண்ணைக் கொண்டு வராதே... பில் எவ்வளவு ஆச்சு பாரு" என்றாள்.

"நீ உடனே பதில் சொல்ல வேண்டாம்... யோசிச்சுப்பாரு... நான் காத்திருக்கேன்... எத்தனை வருஷம் ஆனாலும்!"

"யூ ஆர் ஸோ ஸ்வீட் சீதா! நான் ஒரு கல்யாணம் பண்ணிண்டு லோல் படறது போதும்!"

வீட்டுக்கு அவர்கள் இருவரும் திரும்பியபோது மகாதேவனும், கமலமும் கவலையுடன் காத்திருந்தார்கள்.

"எங்க போனே?"

"ஆஸ்பத்திரிக்குத் தான்."

"எட்டுத்தடவை போன் பண்ணிட்டா உன் மாமியார். போன் நம்பர் கொடுத்திருக்கா."

சீதா, "நீ இரு அனிதா... நான் போன் பண்ணி விவரம் கேட்டுக்கறேன்..." என்று சொல்ல,

"இல்லை சீதா... நானே பேசறேன்" என்றாள் அனிதா.

"நீ தான் அவாளைத் தாங்கறே அனிதா... அவா என்ன அவமதிப்பா பேசினா பார்த்தியா ஆஸ்பத்திரில!" என்ற சீதா, "அக்கா... வைரவன் அரஸ்ட் ஆனதுக்கே அனிதாவைக் கல்யாணம் பண்ணிண்டது தான் காரணமாம்... அவா சொல்லுறா...!"

"சொல்வா... சொல்வா!" – கமலம்.

[அனிதா வருவாள்...]



வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்;
மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்;
கானில் வளரும் மரமெலாம் நான்;
காற்றும் புனலும் கடலுமே நான்.
-சுப்பிரமணிய பாரதியார்-



## ஞானோதயம்

பாப்பா முரசு சிறுகதை



**மு**ன்னொரு காலத்தில் உப்புலியாபுரம் என்ற ஊரில் தவசி என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் மிகுந்த கடவுள் பக்தி உடையவர். மக்களிடையே மதச் சொற்பொழிவு களை நடத்தி வந்தார்.

மக்களைத் தெய்வ பயத்துடன் ஒழுக்க நெறியில் வாழ அவர்களுக் குப் போதனை செய்து வந்தார். அவரது போதனை மக்களுக்கு தெய்வ பக்தியையும், நல்ல தைரியத் தையும் கொடுத்தது.

அதே ஊரில் சுந்தரமூர்த்தி என்ற மனிதர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு நாஸ்திகவாதி. தவசிக்கு எதிரான கருத்துக்களைப் பொதுக் கூட்டங்களில் பேசி வந்தார்.

கடவுள் இல்லை என்ற விதத்தில் அவரது பேச்சுக்கள் இருக்கும். இருவரும் எதிரிகளைப் போல் இருந்தனர். மனதளவில் சுந்தர மூர்த்தியை தவசிப்பிள்ளை வெறுக் கவில்லை என்றாலும், அவரு டைய கருத்துக்களை வெறுத்தார்.

தவசிக்கு கூட்டம் கூடுவதைப் போலவே சுந்தரமூர்த்தியைச் சுற்றியும் ஒரு கூட்டம் கூடும். அவ ரது கருத்துக்களை வைத்துக் கொண்டு "ஆமாம்..." போடும் அந்தக் கூட்டம்.

ஒரு நாள்-

தவசிக்கு மிகவும் உடல்நிலை சரியில்லை. வயதாகி விட்டபடியால் நோய்வாய்ப்பட்டு விழுந்தார். அப் படியே அவரது மரணத்திற்கும் நாள் குறிக்கப்பட்டு விட்டது.

தங்கள் மீது உயிரையே வைத் திருந்து நற்போதனைகள் செய்த தவசியைப் பார்க்க மக்கள் கூட்டம் அவர் வீட்டை முற்றுகையிட்டது. ஆனால், தவசியோ சுந்தரமூர்த் தியைப் பார்க்க ஆசைப்பட்டார். மக்கள் கூட்டத்திற்குப் பயங்கர மான ஆச்சரியம்.

இருவருக்கும் எப்போதும் ஆகாது. தவசியின் கருத்துக்களை எதிர்த்துப் பேசுவது தான் சுந்தர மூர்த்தியின் கொள்கையே. அப்படி யிருக்கப் பெரியவரைப் பார்க்க நாமெல்லாம் ஆசைப்படும் போது இவரோ சுந்தரமூர்த்தியை கூப்பிடு கிறாரே என்று நினைத்தனர்.


சுந்தரமூர்த்தியும் அப்படியே நினைத்தபடியே உள்ளே சென் றார். அவனைக் கண்டதும் மலர்ந்த முகத்துடன் கைகாட்டி அழைத்து அருகில் அமர்த்திக்கொண்டார்.

"உங்களுடைய கருத்துக்களை எப்பவும் எதிர்த்துப் பேசுவது தான் என்னுடைய பழக்கம்மே... அப்படி யிருக்க இறக்கும் தறுவாயில் இருக் கும் நீங்கள் என்னைப் பார்க்க ஆசைப்பட்டது ஏன்?" என்றான்.

அதற்குத் தவசி, "நண்பா... உன் மீது எப்போதும் எனக்கு வெறுப்பு இருந்ததில்லை. உன்னு டைய கொள்கையின் மீது தான் எனக்கு உடன்பாடு இல்லை. நான் இறந்தவுடன் நிச்சயமாக சொர்க்கத் திற்குச் செல்வேன். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இங்கு விட்டுச் செல்லும் மக்களை அங்கு சென்ற பின் பார்க்க முடியும். ஆனால், உன்னை மட்டும் சொர்க்கத்தில் பார்க்க முடியாதே! அதனால் தான் உன்னை இங்கேயே பார்க்க விரும் பினேன்" என்றார்.

அந்த வார்த்தைகள் சுந்தர மூர்த்தியின் உள்ளத்தைத் தொட்டது. முதல் முறையாகக் கடவுளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான் சுந்தரமூர்த்தி.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **27.04.2002.**


வர்ணம் தீட்டும் போட்டி இல: **442**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 440

பரிசுக்குரியவர்:
பாத்திமா நிஷ்மா நஜீம்,
இல. 320, இரத்தினபுரி வீதி, பலாங்கொடை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| யோகராசா கலாரஞ்சினி<br>சரஸ்வதி வித்தியாசாலை, சாவகச்சேரி. | பிரியங்கா<br>கிங்ஸ்டன் சர்வதேசகங் கல்லூரி, கொழும்பு-15. |
| ப.பிரசாத்<br>ஸ்ரேசன் வீதி, வவுனியா. | எம்.ஏ.பாத்திமா இஸாமா,<br>ஜமாஹிரியா வித்தியாலயம், சாய்ந்தமருது-02. |
| எஸ்.உஷா அருந்ததி<br>ஆமர் வீதி தொடர் மாடி, கொழும்பு-12. | கு.கஜாணன்<br>நுகேகொடை த.ம.வி., நுகேகொடை. |
| ம.ஸ்ரீகிருஷ்ணாஹர்<br>நீதிமன்ற வீதி, திருகோணமலை. | பொன்னம்பலம் கமலராஜ்<br>கோளாவில் விநாயகர் ம.வி., அக்கரைப்பற்று. |
| எஸ்.கே.ருஸ்னி குறைஸ்<br>சன்ஜீதா வத்த, நுரைச்சோலை, புத்தளம். | எப். ஷானாஸ் இர்பான்<br>ஹிரும்புர முஸ்லிம் மகா வித்., காலி. |



இங்கு எத்தனை பின்கள் உள்ளன என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## எவரெஸ்ட் கோபுரம்

**உ**லகின் மிக உயரமான எவரெ ஸ்ட் சிகரம் மீது ஏறும் மலையேற்ற வீரர்கள் மற்றும் சுற்றுலாப் பயணி களின் வசதிக்காக சீனா தபால் நிலை யம், செல்போன் நிலையம், கல்ரோடு ஆகியவற்றைக் கடல் மட்டத்தி லிருந்து 5200 அடி உயரத்தில் அமைக்கிறது.

இதற்காக மொத்தம் 28 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது. இதன் மூலம் வீரர்களின் மலையேற்ற பயணத்தின் போதே, தங்கள் உற வினர்களோடு கடிதம் மற்றும் மொபைல் போன் மூலம் எளிதாகத் தொடர்பு கொள்ள முடியும். ■

## ஒட்டகம்

**ஒ**ட்டகம் நடக்கும் போது முன் இடது கால், பின் இடது காலையும், பிறகு முன் வலது கால், பின் வலது காலையும் தூக்கி வைத்தே நடக்கும்.




## ஆயிரம் வருடங்களுக்கு முந்திய யானை

**இ**ப்போது நாம் காணும் யானை கள் எல்லாம் ரொம்ப சிறியது. ஆச் சரியமாக இருக்கிறதா?

50 ஆயிரம் வருடங்களாகப் பூமிக் கடியில் உறங்கிக்கொண்டிருந்த மிகப் பெரிய யானை உருவத்தைத் தோண்டி யெடுத்துள்ளார் ஜி.எம்.பாட் என்ற இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியா ளர். ஸ்ரீநகர் அருகே கல்லாந்தர் கிராமத்தில் நடத்திய ஆராய்ச்சியில் கல் போன்று உறைந்த நிலையில் இந்த யானை கண்டுபிடிக்கப்பட்டதாகும்.

## மரபணு மாற்றம்



**ம**ரபணு மாற்றம் செய்து உணவு தானியங்கள் தயாரிக்கப்படுவதாக படித்திருக்கிறேன். அவை என்ன? அவை எப்படி நமக்குப் பயன்தரு கிறது?

பழங்கள், தானியங்கள்,காய்கறி கள் போன்றவற்றின் விதைகளிலேயே மாற்றம் செய்யப்படுகின்றன. விஞ் ஞானிகள் இதுபோன்ற உணவுப் பொருட்களின் தன்மையை மாற்றி நமக்குப் பெருமளவு பயன் தருமாறு செய்கின்றனர்.

உதாரணமாக அரிசியை எடுத் துக்கொள்ளலாம். நோயை எதிர்க்கும் தன்மையை அரிசியில் செலுத்த முடியுமா என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இதன் மூலமாக ஆரோக்கியமான தானியங்களை உற்பத்தி செய்ய முடியும். உணவுப் பொருட்களை அதிக நாட்கள் புத்தம் புதிதாக வைக்க முடியும். அதன் சீதோஷ்ண நிலையிலும் வளர்க்க முடியும். ■

## கோடீஸ்வரக் குழந்தை



**உ**லகிலேயே நம்பர் 1 பணக் காரக் குழந்தை இவள். ஆனால், ஆசையாக ஒரு சின்ன காட்பரீஸ் சாக்லேட் வாங்க வேண்டுமென்றா லும், இவளின் அளவற்ற சொத்துக் களைப் பராமரித்து வரும் நபர்களி டம் தான் கைநீட்ட வேண்டும்.

உலகப் பணக்காரரான அரிஸ் டாட்டல் ஒனாஸிஸ் அவரின் ஒரே மகன் அலெக்சாண்டர் இறந்துவிட இப்போது இந்த சாம்ராஜியமும் இந்த சிறுமிக்குத் தான். இப்போது இவள் தந்தை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தயரீரீ ரஸ்ஸீல், தன் மகளின் சொத் துக்களைக் கையாளும் உரிமை தனக்கு மட்டுமே உண்டு என்று கோர்ட்டில் வழக்குத் தொடுத்துள் ளார். ●

# குடிசை

செக்கலுக்குள்தான் வள்ளம் கரை தட்டியது. இப்போதெல்லாம் கடல் முன்னர் போல இல்லை. உடம்பை முறித்துவிடுகின்றது. வெய்யில் அகோரம் ஒரு பக்கம்.... பொக்குணிக்குத் தெரியும் எங்கு நல்ல வடிசாராயம் கிடைக்குமென்று. உடம்பு அலுப்புக்கு மாற்று ஏது? சாராயத்தால் தொண்டைக் குளியை நனைத்தபடியே கொட்டாபெட்டிக்குள் இருந்த மாசி கருவாட்டை எடுத்துக் கடித்துக் கொண்டதில் எல்லையற்ற சுகம்.

தள்ளாடியபடியே நடந்தான். கையில் ஒரு மணலை மீன். "மண்ணை விற்றும் மணலை தின்" என்பார்களே... அதே மீன்தான். மறுகையில் போத்தல்.

இருட்டில் பூதங்கள் போல நெருக்கமாகத் தெரியும் குடிசைகளை எல்லாம் தள்ளாடும் கால்களால் கடந்து செல்லும் போதே, பொக்குணி அந்த அந்த குடிசைகளை அடையாளம் கண்டு தனக்கும் அவ்வக்குடிசையில் இருக்கும் மனிதர்களுக்கும் இடையே இருக்ககூடிய பகைமைக்கும் நட்புக்கும் ஏற்ப புலம்பியபடி சென்றான்.

"டேய் மண்டாடி... நான் தானடா உனக்கு யமன்" என்று கூறியும், "தூ..." என்று காறி உமிழ்ந்தும் செல்வான்.

"ஏய் ராசாத்தி... நீ நல்லவள்... நான் குடிக்கேல்லை. குடிக்கவேயில்லை. கண்ணனைக் கேட்டதாய் சொல்லு..." என்றும் சரணடைவான்.

அந்த வெறியிலும் அவனுடைய கால்கள் எந்த இலக்கை நோக்கிச் சென்றனவோ அந்த இலக்கை எய்தின. குடிசை வாசலிலிருந்து பிய்த்துப் பிடுங்கி விடுவதாக படலையை நோக்கிப் பாய்ந்துவந்த வீமன் நாய், மோப்ப சக்தி காரணமாக பொக் குணியை அடையாளம் கண்டு "ங்.. ங்..." என்று அனுங்கியபடி அவனது கால்களுக்கிடையே விழுந்து புரண்டு எஜமான் விசுவாசத்தை உணர்த்தியது.

தெய்விக்கு முப்பதுக்கு மேல் இருக்காது. கட்டழகி! ஆனால், அதற்குள்ளாகவே அவள் இந்த வாழ்க்கையின் மேடு பள்ளங்களை நன்கு அனுபவித்து சலித்து விட்டிருந்தாள். தனது தெய்வம் என்று அவள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய அவள் கணவன் மண்டாடியின் மகளோடு ஒடிவிட்டபின். அவள் எதிர்கொண்ட அவமானங்கள் எண்ணிலடங்கா. அதன் காரணமாகவே ஆண்களை மதிக்காத தன்மை ஒன்று அவளுள் முகிழத்து எழுந்தது.


அவளுக்குப் பொக்குணி யார்?... யாருமல்ல... வெறுமனே அவளுக்கு உழைத்துப்போட வேண்டியவன்... அவளைக் கட்டாக்காலிகள் மேய்ந்துவிடாதபடி காவலிருக்க வேண்டியவன். சில வேளைகளில் அவளது வக்கிரத்துக்குத் தீனி போடவேண்டியவன். மற்றும்படி அவளுக்கு அவன் வெறும் தூசு...

"தெய்வி... என்னடி செய்யிறாய்?" குப்பி விளக்கு குடிசைக்குள் சிணுங்கிக்கொண்டிருந்தது. எனவேதான் தெய்வி எங்கிருக்கிறாள் என்று வினாவால் துளாவினான் அவன். "நான் என்ன செய்யிறது... வாற வழியிலை எந்தக் குடிசை தடக்கி எங்கை மல்லாந்து கிடக்கிறியோ எண்டு தான் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறேன்" தெய்வி உக்கிரம் ஏற்றினாள்.

"என்னத்தை இழந்தாலும் உன்னுடைய வாய்க்கொழுப்புப் போகாதே!" என்று கூறியபடியே கையில் வைத்திருந்த மீனை அவளிடம் நீட்டினான். தெய்வி உடுப்பு மாற்றும் மறைப்புக்கும் பின் தட்டிக்குமிடையே அந்த வடிசாராயப் போத்தல் மறைக்கப் பட்டது.

தெய்வி, உலையை ஏற்றினாள். பின் அரிவாளை எடுத்துக் குப்பி விளக்குக்கு முன்னால் வைத்தாள். மீனின் கழுத்துப் பகுதியில் அரிவாளை ஏற்றினாள். விரல்களை வெட்டுண்ட பகுதிக்குள் செலுத்தி நுங்கு தோண்டுவது போல எதையோ பிதுக்கினாள். குடலும், ஏனைய பகுதிகளும் விரலில் சிக்குண்டு வந்தன. அந்த மீனினுடைய இருப்பே அவ்வளவு தான்!

பொக்குணிக்கு அவளுடைய குத்தல் பேச்சு விளங்காமல் இல்லை. வடிசாராயம் விற்கும் கயல்விழிக்கும் அவனுக்கும் தொடுப்பு இருக்கக்கூடும்... இல்லாமலும் இருக்கக்கூடும். அது பற்றி அவளுக்கு எந்த ருசுவும் கிடையாது. ஆனால், பொக்குணியின் பல வீனங்களை ஒரு புறமும் கயல்விழியின் எடுப்புச் சாய்ப்பை மறுபுறமும் அறிந்தவள்தான் அவள். அதை வைத்து அவள் மானசீகமாக வளர்த்துக் கொண்ட கற்பனைகள் தான் அதிகம்.



பொக்குணி பொறுத்துப் பார்ப்பான். அவளுடைய வாய் அடங்கும் வாயல்ல. "போனாய்..." என்று கூறுவாள். சிறிது நேரம் கழித்து... "கதைத்தாய்..." என்று கூறுவாள். பின் "தொட்டாய்..." என்றும் "தொடர்ந்தாய்..." என்றும் கதை வளருமே தவிர முற்றுப் பெறாது.

"போனால் தான் என்னடி?" என்று பொக்குணி அதட்டினான். அதற்கு மேல் தெய்வியின் கற்பனை கரை புரண்டோடியது. "ஓ..." என்று குரல் வைத்தாள். ஊரைக் கூட்டுவது போலக் கூப்பாடு போட்டாள்... திட்டினாள். பின் இடுப்புச்சேலையை உருவி உதறிவிட்டாள். உடுப்பு மாற்றும் மறைப்புக்குள் போனாள். வந்தாள். பொக்குணி மௌனம் காத்தான். அவனுக்குத் தெரியும். அவளுக்கு கோபம் எல்லை மீறும் போது அவனுக்குத் தெரியாமல் வடிசாராயத்தில் ஒரு மிடறு பருகி வைப்பாள்....

"நீ போனாலென்ன... கிடந்தாலென்ன... நான்.. நான் தான். என் புருஷன் சரியாக இருந்திருந்தால் நான் இக்கேடு கெடுவேனா?" தெய்வி குரல் வைத்தாள்.

பச்சை மிளகாய் வெங்காயம் சேர்த்து மிளகாயங்பொடியும் மஞ்சளும் தடவி வைத்த மணலை மீன் குழம்பு குமிழியிட்டுப் பொடுபொடுத்தது. உலையும் உவிந்து மணம் வீசியது. அவள் தனது புருஷனை அதுவும் ஒடிப்போய்விட்ட புருஷனை இழுத்துப் புகழ்ந்தது பொக்குணிக்குப் பெரும் கோபத்தையே உண்டு பண்ணியது.

**திருமலை-வீ.என்.சந்திரகாந்தி**

இருந்தபடியே எட்டிக்காலால் உதைத்தான் அவளை. தெய்வி விலகிக் கொண்டாள். இவளுடனான வாழ்க்கையே வேண்டாம் என்று அவனுக்குத் தோன்றியது. போத்தலைத் திறந்து வடிசாராயத்தை சிறிதளவு ஊற்றிக்கொண்டான். பின் குடிசை முற்றத்தில் குடம் வைக்கும் தென்னங்கன்றுடன் சாய்ந்து நின்றபடி யோசித்தான். "போய்விடலாமா?"

அப்போதென்று மீன் குழம்பு அதிக அளவு வாசத்தை வீசியது. சினிமாக் காரிகள் போன்று அவளது மாராப்பு எடுப்பு நினைவுக்கு வந்தது. நிலவும் எழுந்து வந்தது.

"ஏய்... தென்னங்கன்று ஒன்றும் சாய்ந்து விடாது. வந்து சாப்பிட்டு விட்டுத் தூங்கு..." தெய்வி குரல் கொடுத்தாள். பாத்திரங்கள் கழுவுவதற்கென வைத்த குடத்து நீரை சரித்து கைகால் அலம்பி விட்டு பொக்குணி குடிசை மத்தியில் அமர்ந்தான். அவனது இடது கால் தொடையோரம் அமர்ந்து மீனுக்கு' முள் உடைத்து சோற்றைக் குழம்புடன் திரட்டி அவனது வலது கையில் வைத்தாள். அவர்களுக்கிடையே சண்டை மூளாத இரண்டு சந்தர்ப்பங்களில் ஒன்றுதான் அது! தெய்வியும் உணவருந்தி

கையலம்பிய பின் கூறினாள்.

"இனிமேல் கயல்விழியைத் தேடியலையாதே... அப்படி அலைந்தாய்... புழுப்பிடித்துத்தான் சாவாய்..." பொக்குணிக்குக் கோபம் சிரசைத் தட்டியது.

"உனக்கு உன் புருஷன் தான்ரி சரி" என்று ஓடிப்போன அவளது கணவனை இழுத்தான். தெய்வியின் பெண்மைக்கு அது சவாலாக அமைந்தது போலும்! எழுந்தாள்... அரிவாளை வலது கையில் உயர்த்திப் பிடித்தாள். பின் அதட்டினாள். "ஏய்... மற்ற பொம்பிளைகளுக்கு எல்லாம் அகப்பை தான் ஆயுதமாக இருக்கலாம். ஆனால், எனக்கு இந்த அரிவாள் தான் ஆயுதம்."

பொக்குணியும் அடங்கிப் போய் விடவில்லை. இப்போதுதான் அவனுக்கு அந்த வடிசாராயம் அதிக அளவு வேலை செய்தது. புலம்புவது போலவே அவளை மடக்கினான். "ஏய்... யாரை விரட்டுகிறாய். நான் கேட்கிறதுக்கு மறுமொழி சொல்லு... அண்டைக்கு நான் விரால் மீன் கொண்டு வந்த தினம்... கண்ணன்ரை மனுசி ராசாத்தி... உன்னை ஏன் ஏசினவள்?"

தெய்வி, "ங்..." என்று ஓலமிட்டு அழத் தொடங்கினாள். பொக்குணி மீண்டும் மீண்டும் கேட்டான். "கண்ணன்ரை மனுசி ராசாத்தி... உன்னை ஏன் ஏசினவள்?"

தெய்வி வாயடைத்துப் போனாள்! அவளது ஓலம் படிப்படியாகக் குறைந்தது. பதில் மட்டுமில்லை. பொக்குணி அந்த அமைதியில் அரைத்தூக்க நிலைக்குப் போய்க்கொண்டிருந்தான்.

தெய்வி இலாவகமாக மாராப்பை அவிழ்த்து வீசியதில் குப்பி விளக்கு அணைந்தது...!

# அழுவதா? சிரிப்பதா?

பரபரப்பான ஒரு அலுவலக நேரத்தில் ஊழியர்கள் யாவரும் தங்களின் கடமையில் மும்முரமாய் இருந்தார்கள். திங்கட்கிழமை என்பதால் வாடிக்கையாளர்கள் சற்று அதிகமாக இருந்தார்கள். ஒன்பது மணிக்குபோய் வைத்துவிட்டுப் போன தேனீரைப் பருகி விட்டு மறுபடியும் கணனியில் மௌஸை கிளிக் செய்து ஒரு வாடிக்கையாளின் கோப்பு ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தான் முரளி. பக்கத்து ஆசனத்து பரமசிவம் தன்னிடம் வந்திருந்த வாடிக்கையாளரிடம் "நான் அந்தக் காலத்திலே...." என்று பழைய புராணம் பாடத்தொடங்கினார். "ஆரம்பிச்சுட்டான்யா..." என மனசுக்குள் சொல்லிக்கொண்ட முரளிக்கு அது எரிச்சலாய் இருந்தது.

பரமசிவம் இந்த அலுவலகத்தில் நீண்ட நாளாய் தொழில் செய்பவர். இன்னும் ஓரிரு வருடத்தில் ஓய்வு பெறவேண்டியவர். இரண்டு மகன்களும் படித்து நல்ல தொழிலில் இருக்கின்றார்கள். மகளும் கூடத் திருமணமாகிப் போய்விட்டாள். மூத்த மகனுக்குக் கூடப் பெண்தேடிக் கொண்டிருக்கிறார். வேலை செய்து தான் ஆகவேண்டும் என்னும் நிலையில் இல்லாதபோதும் இன்னும் ஒரு இளைஞனைப் போல் சுறுசுறுப்போடு அலுவலகத்திற்கு வந்து போகிறார். அலுவலகம் சம்பந்தமான எந்தவொரு தகவலையும் கணனியை விட வேகமாகக் கிரகித்துச் சொல்லிவிடுவார். அலுவலகத்தில் இவருக்கு நல்ல சம்பளமும், மிகுந்த மரியாதையும் உள்ளது. ஆள் நல்ல மனிதர். யாரோட வம்புதும்புக்கும் போகாதவர். என்றாலும் முரளிக்குப் பரமசிவத்தைக் கண்டாலே பிடிக்காது.

எல்லோரும் எல்லா விசயத்திலும் நல்லவராக இருக்க முடியாது. ஏதாவதொரு விசயத்தில் எதிர்மாறாக இருப்பார்கள். அந்த வகையில் இந்த பரமசிவத்திடம் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. சில நேரம் உண்மையாகவே இருந்தாலும், தினசரி இவர் சொல்வதைக் கேட்கும் போது பொய் என்று



தான் எண்ணத் தோன்றுகிறமாதிரி ஒரு பழக்கம். யாராவது ஒரு கதையையோ, சம்பவத்தையோ அல்லது ஒரு செய்தி யையோ இவரிடம் சொல்லி விட்டால் போதும். "இதே மாதிரி எங்க ஊர்ல ஒருத்தர் இருந்தார்" என்று அவருடைய கதையைச் சொல்ல வாரம்பித்துவிடு வார். அது நல்லதானாலும் சரி, கெட்டதானாலும் சரி. எப்படி இவ ருடைய வாழ்வில் இது மாதிரி எல்லா நிகழ்வுகளும் நடந்துவிடுகின்றது என்று பலமுறை தனக்குள் கேட்டுக்கொள்வான் முரளி. பக்கத்து ஆசனம் என்பதால் பலரிடம் பலவாறாகப் பரம சிவம் விடும் கரடியைக் கேட்டுச் சகித்துக்கொள்ள முடியாது தவிப்பான்.

யாரேனும் ஏதாவது சொல்லிவிட்டால் நமக்கும் இது போல் நடந்ததென்று காட்டிக்கொள்ள வேண்டும் என்பதில் பரமசிவத்தாருக்கு பெரிய ஆர்வம். இதற்காக சில சமயம் சிலரிடம் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசி அறுத்துவிடுவார். யாராவது தங்களுக்கு நேர்ந்ததைச் சொல்வதைக் கவனமாய் கேட்டுக்கொண்டு அவர்கள் சொன்ன சம்பவத்தையே இடத்தையும், ஆட்களின பெயரையும், சம்பவத்தையும் சற்று மாற்றித் திரும்பவும் அவரிடமே சொல்லி சில சமயம் வீரப்பா போல் இவர் சிரிக்கும் போது தூக்கு மாட்டிக் கொண்டு செத்துப்போகலாம் என்று தோன்றும் முரளிக்கு.

இன்று இவருக்கு ஒரு பாடம் படிப்பித்துக்காட்ட வேண்டும். இது போல் கதைப்பதை நிறுத்துவதற்கு ஒரு வழி செய்ய வேண்டும். இனிமேல் இவர் "நான் 1947ல்ல..." என்று எந்த ஒரு பழைய பல்லவியையும் பாடவிடாமல் செய்ய வேண்டும் எனத் தனக்குள் எண்ணிக்கொண்டிருந்தபோதே அந்த ஐடியா மின்னலாய் தோன்றியது.

அன்று பகல் உணவிற்காக சென்றிருந்த சமயம் முரளி தன்னோடு கடமைபுரியும் ஒரு நண்பனோடு சாப்பாட்டு மேசையில் ஏதோ சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான். அந்நேரம் பார்த்து பரமசிவம் இவர்கள் பக்கமாக வந்தார். இவர் வருவதைக் கண்டுவிட்ட முரளி,வரட்டும் இன்றைக்கு இவரோட மூக்கை உடைக்கிறேன் பார். இது தான் நல்ல சந்தர்ப்பம் என எண்ணிக்கொண்டு இவரைக் கண்டும் காணாதவன் போல் நண்பனோடு அரட்டையடித்துக்கொண்டிருந்தான்.

சாப்பாட்டு நேரமாகையால் பெரும்பாலான அலுவலகத்து ஊழியர்களும் இவர்களைப் போலவே சிரித்துப் பேசிச் சாப்பிட்டுக்கொண்டிருந்த அவ்வேளையில் முரளியையும், நண்பனையும் கண்டுவிட்ட பரமசிவம், "என்னப்பா... ரொம்ப குஷியா இருக்காப்ல. என்ன விஷேசம்?" கேட்டார்.

"ஒண்ணுமில்லை மிஸ்டர் பரமசிவம்"

"ஒண்ணுமில்லாததுக்கா இப்படிச் சிரிக்கிறீங்க?"

"அது வந்து இவனோட பக்கத்து வீட்ல ஒருத்தர் இருக்காராம்..."

"ஆ... அவருக்கென்ன?" என்றவாறு நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக்கொண்டார் பரமசிவம்.

"அவருக்கு ஒன்னும் இல்லீங்க. அவர் ஒரு பெரிய அறுவையாம். யாராவது ஒரு சம்பவத்தையோ, கதையையோ சொல்லிட்டாப் போதுமாம். அதை அப்படியே பேரையும், ஊரையும் மாத்தி அதுஅமாதிரி அவருக்கும் நடந்தது மாதிரி சொல்வாராம். அந்த ஆளோட பேசினால் கொலையாளி ஆக வேண்டி வந்திடும் என்று இவன் அவரோட பேசுறதே இல்லையாம்" கதை சொல்வது போல் பரமசிவத்தைப் பற்றிப் பரமசிவத்திடமே சொன்னான் முரளி.

மிகவும் சுவாரஷ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்த பரமசிவம், "இப்படித் தான் முரளி, ஆயிரத்தி தொள்ளாயிரத்து அறுபத்திரெண்டுல எங்க வீட்டுக்குப் பகக்கத்திலேயும் ஒருத்தர் இருந்தார். அவரும் இதே மாதிரித் தான்...." என்று சொல்லவாரம்பித்த போது முரளிக்கு தன் செருப்பைக் கழற்றித் தன் தலையிலேயே அடித்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அக்கம் பக்கத்திலிருந்து அவதானித்துக் கொண்டிருந்த சிலர் விபரம் புரிந்து சிரிக்க, அவருக்குச் சொன்ன கதைக்கும் ஒரு கதை சொல்லிக்கொண்டிருக்கும் பரமசிவத்தைப் பார்த்து அழுவதா? சிரிப்பதா? என்று புரியாமல் போனது முரளிக்கு.

**மெய்யன் நட்ராஜ்-கத்தார்**

# கண்ணாமூச்சி ரே... ரே... 21

## பட்டுக்கோட்டை பிரபாகர்

"பார்சனலா கேக்கிறதுக்காக ஸாரி. நீங்க மதுலதாவை கல்யாணம் பண்ணிக்க இருந்ததா எதிலையோ படிச்ச நினைவு. உண்மையா?"

"முதல்ல அப்படி ஒரு எண்ணம் இருந்திச்சி. அப்புறம் நான் தான் மனசை மாத்திக்கிட்டேன்."

"உங்களுக்கு டூப் ஆர்ட்டிஸ்ட் துர்க்காவைத் தெரியுமா?"

"கேள்விப்பட்டிருக்கேன். சந்திச்சதில்லை."

"சேதுன்னு போட்டோகிரா:ப்பர் யாரையாவது தெரியுமா?"

"யாரது எதுக்குக் கேக்கறீங்க?"

"இல்லை. இவங்க ரெண்டு பேருக்கும் மதுலதா மேல லேசா பகை இருந்திச்சின்னு தெரியவருது. நேத்து ஹோட்டல் பிரசாந்த்ல சேது செத்துப் போய்ட்டான்."

"அப்படியா? என்ன இது மர்மமா சொல்றீங்க? கொலைகாரனைப் பத்தி எதாச்சும் தகவல் கிடைச்சிருக்கா?"

"இதுவரைக்கும் இல்லை. அப்போ நாங்க புறப்படறோம சார்."

"நல்லதுங்க..."

பரத், சுசிலா எழுந்து கொள்ள...

"உங்களுக்கு நடிகை ஸ்நேகப்ரியா அட்ரஸ் தெரியுமா?" என்றான் பரத்.

"ஓ... தெரியுமே..." என்றான் சங்கரதாஸ்.

"ஸ்நேகப்ரியா மதுலதாவுக்கு நெருக்கமான தோழியாமே. அடுத்தது அவங்களைத் தான் விசாரிக்க இருக்கோம். அட்ரஸ் தர்றீங்களா?" என்ற பரத் சட்டை, பேண்ட் பாக்கெட்டுக்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு, பேனா இல்லை. எழுதிக் கொடுத்துடுங்க... ப்ளீஸ்" என்றான்.

சங்கரதாஸ் மணிபர்சில் இருந்து தன் விசிட்டிங் கார்டு எடுத்து அதன் பின்புறம் எழுதினான்.

ஸ்நேகப்ரியா,
17, கோதண்டராமன் தெரு,
ராயப்பேட்டை,
சென்னை-14.

வாங்கிக்கொண்ட பரத், "தேங்ஸ் சார் வர்றோம்" என்று வெளியேறினான் - சுசிலா தொடர.

"இப்ப எங்கே?" என்றாள் சுசிலா.

"நேரா நம்ம ஆ:பீஸ்" என்றான் பரத்.

வந்தார்கள். மாதவியின் புதிய ஸோர் ஸ்டைலை ரசிக்க, விமர்சிக்க நேரமில்லாமல் தன் அறைக்குள் வந்த பரத் டிராயரைத் திறந்து பூதக் கண்ணாடி எடுத்தான்.

"என்ன பரத், உங்க நடவடிக்கையே புரியலை எனக்கு. அங்கே சங்கரதாஸ் கிட்டே இன்னும் கொஞ்சம் விசாரிப்பீங்கன்னு நினைச்சேன். பட்டுன்னு புறப்பட்டிட்டீங்க. நாம ஏற்கனவே ஸ்நேகப்ரியாவை விசாரிச்சாச்சி. அவ அட்ரஸ்ஸும் நம்ம கிட்ட இருக்கு. மெனக்கட்டு எழுதி வாங்கினீங்க. இப்ப என்னடான்னா ஜோசியம் பார்க்கிற மாதிரி லென்ஸ் எடுத்துக்கிட்டீங்க" என்று வந்து அவனருகில் நின்றாள் சுசிலா.

"சுசி, நாங்க பேசினப்போ அவன் எல்லாக் கேள்விக்கும் சாமர்த்தியமா பொய் பேசிகிட்டே வந்தான். சடார்னு ஒரு இடத்தில பயங்கரமா ஸ்லிப் ஆகிட்டான். கவனிக்கலையா?"

ம்கூம் என்பதற்குத் தலையசைத்தாள்.

"துர்க்காவையும் தெரியாதுன்னான். சேதுவையும் தெரியாதுன்னான். ரெண்டும் அப்பட்டமான பொய். இவன் பேங்கில வித்ட்ரா செஞ்ச ஐநூறு ரூபா நோட்டுக்கள் அவங்க ரெண்டு பேருக்கும் வழங்கப்பட்டிருக்கு. அப்புறம் ஹோட்டல்ல சேது செத்துட்டான்னு தான் நான் சொன்னேன். அவன் என்ன கேட்டான்? கொலைகாரனைப் பத்தித் தகவல் ஏதும் கிடைச்சிருக்கான்னான். அது கொலைன்னு எப்படித் தெரியும்? இன்னும் பேப்பர்ல வரலை சுசி. தட் மீன்ஸ்? இவன் தான் மாஸ்டர் மைண்ட்! இவன் தான் ஆணி வேர். இவனோட கையெழுத்தும், கைரேகையும் வாங்கறதுக்காகத் தான் எழுதிக்கொடுக்கச் சொல்லி வாங்கினேன்"

"பரத், யூ ஆர் கிரேட்..."

"எனக்குப் புகழ்ச்சி பிடிக்காது சுசி. உன் பாராட்டை அப்புறமா வேறு விதமா நேத்து ராத்திரி குட் நைட் சொன்ன மாதிரி இன்னும் சில இன்ச் கீழே இறங்கிச் சொல்லிட்டாப் போதுமானது. இப்போ... சந்திரஜித் வெறியர்கள் எழுதின ரெண்டாவது ரத்தக்கடிதத்தோட காப்பியை எடு."

> "எனக்குப் புகழ்ச்சி பிடிக்காது சுசி. உன் பாராட்டை அப்புறமா வேறு விதமா நேத்து ராத்திரி குட்நைட் சொன்ன மாதிரி இன்னும் சில இன்ச் கீழே இறங்கிச் சொல்லிட்டாப் போதுமானது."

சுசிலா மேஜைக் குழப்பங்களில் தேடி எடுத்துத் தந்தாள்.

பரத் அந்தக் கடிதப்பிரதியையும், விசிட்டிங் கார்ட்டில் சங்கரதாஸ் எழுதித் தந்த விலாசத்தையும் பக்கம் பக்கமாய் வைத்துக் கொண்டு லென்ஸ் வைத்துப் பெரிது படுத்தப்பட்ட எழுத்துக்களில் பார்த்து இரண்டிலும் சில இடங்களில் கீழ் கண்டவாறு வட்டமடித்தான்.




"சுசி, இங்கே வா. லுக்!" என்றான்.

சுசிலா கிட்டே வந்து லென்சை வாங்கிப் பார்த்தாள்.

"சுசி, நல்லா உன்னிப்பாப் பாரு. பேட்டில உள்ள "பேட்"டும், ராயப் பேட்டைல உள்ள "பேட்"டும் ஒத்துப் போகுதா? தண்டனையில உள்ள "தண்ட" வும், கோதண்டராமன்ல உள்ள "தண்ட" வும் ஒத்துப் போகுதா?"

"மைகாட்! ஆமாங்க பரத்!"

"ஆகவே... ரத்தக் கையெழுத்துக் கடிதம் எழுதினது சங்கரதாஸ். துர்க்காவையும், சேதுவையும் பணம் காட்டி வளைச்சிப் போட்டது சங்கரதாஸ். மதுலதாவைக் கடத்தினது சங்கரதாஸ். ஆள் மாறாட்டம் நடத்தினது சங்கரதாஸ். துர்க்காவோட கொலைக்கும் சேதுவோட கொலைக்கும் காரணகர்த்தா சங்கரதாஸ். இப்போ விடை தெரியாத ரெண்டே கேள்விகள்-மது லதா எப்படிப் பைத்தியமானா? இதெல்லாம் சங்கரதாஸ் எதுக்காகச் செஞ்சான்?

:போன் ஒலித்தது.

சுசிலா எடுத்து, "பரத், அனில்தாத் பேசறார். இந்தாங்க."

"ஹலோ பரத்..."

"சங்கரதாஸ் வீட்டுக்குப் போனீங்களோ என்ன சார் ஆச்சி?"

பரத் சுருக்கமாகச் சொல்லி, "ஸோ சங்கரதாஸ்தான் காரணம். இப்ப :போனை வைச்சிட்டு நேரா உதவி கமிஷனரைப் பார்க்கப் போறோம். லீகலா அவனை எப்படி வளைக்கிறதுன்னு டிஸ்கஸ் பண்ணனும். அவரைப் பார்த்துட்டு வந்து போன் செய்றேன் சார்" என்றான்.

கிச்கிச் என்று நடு மண்டையில் சொறிந்து கொண்டார் உதவி கமிஷனர் மார்த்தாண்டம்.

"பரத்... எங்கே உங்க கை? கொண்டாங்க. கில்லாடி வேலை எல்லாம் செஞ்சிருக்கீங்களே... இப்போ நேராப் போய் சங்கரதாஸைக் கைது செஞ்சிட முடியாது. அவன் பலத்த பின்னணி வைச்சிருப்பான். நழுவிடுவான். அப்படி இப்படி அசையாம கிடுக்கிப்பிடி போடணும். அதை நிதானமாத்தான் செய்யணும். ஒரு பத்து நாளைக்கு அவனை ஷேடோ பண்ணச்சொல்லப் போறேன். அவன் டெலி:போன்களை ஒட்டுக்கேக்கலாம். இன்னும் நிறையத் தகவல் சேர்த்துக்கலாம். பட், ஒரு விஷயம் தான் எனக்கு என்ன செய்யறதுன்னே புரியலை."

"என்ன சார்?"

"பைத்தியமா இருக்கிறது துர்க்கா இல்லை. மதுலதான்னு பயங்கர ஸ்ட்ராங்கா நிரூபிக்க நம்ம கைல என்ன இருக்கு? குரல், மொழி இது ரெண்டும் செல்லாது பரத். சம் திங் எல்ஸ்?"

*(கண்ணாமூச்சி தொடரும்)*

# வாழ்க்கையை தொலைத்தவர்களுக்காக ஒரு சங்கம்

அந்தப் பெண் பாலியல் தொழிலாளி. வாடிக்கையாளர்களாக வந்த ஒருவனின் பேச்சில் மயங்கி, அவனையே தனக்கும் தனது பெண் குழந்தைக்கும் பாதுகாவலனாக நினைத்து சொச்ச வாழ்க்கையைக் கழித்துக்கொண்டிருந்தாள். மகள் வயதுக்கு வந்தாள். அம்மாவைச் சுவைத்தவனுக்கு மகள் மீதும் கண். மறுத்த அம்மாவுக்கு அடி, உதை. அதற்குப் பயந்து மகளைச் சம்மதிக்கக் கட்டாயப் படுத்தியிருக்கிறாள் அம்மா. அப்பா ஸ்தானத்தில் வைத்துப் பார்த்தவன், படுக்கையில் பங்கு கேட்பதை அந்த இளம் பெண்ணால் சகித்துக்கொள்ள முடியவில்லை. கதறிப் பார்த்தாள். காலைப் பிடித்தாள். பலனில்லை. அடி, உதைகளால் ஏற்பட்ட உடல்வலிக்கு, மனவலியே பரவாயில்லை என்று அவனிடம் தன்னை இழக்க ஆரம்பித்தாள் அவள். இது பத்மாவின் காதுக்குப் போனது. உடனே களத்தில் இறங்கினார் பத்மா. சம்பந்தப்பட்டவனை ஒரு கை பார்த்தார். அவனின் பிடியிலிருந்து அந்த இளம் பெண்ணை மீட்டார். இன்று அந்தப் பெண் எக்ஸ்போர்ட் நிறுவனமொன்றில் நல்ல வேலையில் கை நிறைய சம்பாதிக்கிறாள் கௌரவமாக.

கலர் கலர் கனவுகளுடன் சினிமா ஆசை காட்டியவனை நம்பி, வீட்டை விட்டு வெளியேறினாள் அந்தப் பெண். சினிமா வாய்ப்பு வாங்க, உடலே மூலதனம் என்று சொன்னவனை நம்பினாள். ஒன்றை இழந்தால் தான் இன்னொன்றை அடைய முடியும் என்று அழைத்து வந்தவன் விரல் நீட்டியவர்களுக்கெல்லாம் விருந்தாக்கினாள் தன்னை. ஒரு கட்டத்தில் தான் அவன் தனக்கு சினிமா வாய்ப்பு வாங்கித்தர அழைத்துவரவில்லை. தன்னை வைத்து பிஸினஸ் செய்கிறான் என்ற உண்மை தெரிந்தது. அதன் பிறகு சுதாகரித்துக்கொண்டாலும், தெரிந்த அதே தொழிலையே தொடர ஆரம்பித்தாள். யாரிடமோ ஏமாந்ததில் ஒரு பெண் குழந்தை. பத்மாவைச் சந்தித்த பிறகு பாலியல் தொழிலை நிறுத்திவிட்டாள் அந்தப் பெண். தனக்குத் தெரிந்த சுங்கு (தலைக்கு வைக்கும் குஞ்சம்) கட்டும் கலையை அந்தப் பெண்ணுக்குப் பத்மா கற்றுத்தர, இப்போது அந்தப் பெண்ணும் சுயதொழிலதிபர். பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறார் பத்மாவின் துணையோடு.

பத்மா...?

சென்னை கே.கே நகரில் இயங்கும் ஜான்சிராணி மகளிர் மேம்பாட்டு முன்னேற்ற நலச் சங்கத்தின் தலைவி. விலைமாதர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றவர்கள் என வாழ்க்கையைத் தொலைத்த பெண்களுக்கான சங்கம் இது.

இனி பத்மாவுடன்...

பாலியல் தொழில் பண்ற பெண்கள், புருஷனால கைவிடப்படற பெண்கள்னு நிறையப் பேரோட பிரச்சனைகள் அப்ப தெரியவந்தது. இவங்களுக்காக ஏன் ஒரு சங்கம் ஆரம்பிக்கக் கூடாதுன்னு தோணிச்சு. ஜான்சிராணி மகளிர் முன்னேற்ற மேம்பாட்டு நலச் சங்கம் ஆரம்பிச்சு ரெண்டு வருஷமாகுது. இதுல 150க்கும் மேலானவங்க உறுப்பினரா இருக்காங்க.எல்லாத் தரப்புப் பெண்களும் இருக்காங்கன்னாலும், பாலியல் தொழில் பண்றவங்க அதிகம். இவங்க சந்திக்கிற பிரச்சனைகள் ரொம்ப அதிகம். சிலர் பொலீஸ் கேஸ்ல மாட்டிப்பாங்க. அவங்கக் கிட்டயிருந்து எனக்குத் தகவல் வரும். உடனே சம்பந்தப்பட்ட ஸ்டேஷனுக்குப் போய் எங்க வக்கீல் கண்ணதாசன் உதவியோட ஃபைன் கட்டி, மீட்டிட்டு வருவேன்.

சங்க உறுப்பினர்கள்கிட்டருந்து மாசம் ஒரு தொகையை வசூல் பண்ணி, அவர்கள் பேர்ல பேங்க்ல போடறேன். மூணுமாசத்துக்கொரு தடவை அவங்களை ஜி.ஹெச்சுக்குக் கூட்டிட்டுப் போய் மெடிக்கல் செக் கப் பண்ண வைக்கிறேன். அதே மாதிரி மூணு மாசத்துக்கொரு முறை டாக்டருங்க வந்து அவங்களுக்குக் கிளாஸ் எடுப்பாங்க. பாதுகாப்பான உடலுறவைப் பத்தி, ஹெச்.ஐ.வி. கிருமி எப்படியெல்லாம் பரவுது, அது எய்ட்ஸா எப்படி மாறுது, அதோட விளைவுகள் என்னங்கிறதை வீடியோ படம் மூலமோ விளக்குவாங்க.

இவங்களுக்கு மருத்துவ விழிப்புணர்வுக்காக கிளாஸ் எடுப்பேன். பாலியல் தொழில்ல வாடிக்கையாளர்கள் காசு தராம ஏமாத்தறது ரொம்ப சகஜம். அந்த மாதிரி ஏமாறாம இருக்க, முதல்லயே கைல காசை வாங்கிடுங்க. ஒரு கைல காசையும், இன்னொரு கைல காண்டத்தையும் வச்சிக்கிட்டு பிசினஸை ஆரம்பியுங்கன்னு அட்வைஸ் பண்றேன்.



இந்தத் தொழிலே வேணாம், விட்டுடுன்னு நிறைய பேருக்கு சொல்லிட்டிருக்கேன். சிலர் விட்டுர்றேன். மாசம் ஐயாயிரம் ரூபா தர்றியான்னு எடக்குமுடக்கா கேட்பாங்க. அது சாத்தியமில்லை. அதனால நான் அவங்ககிட்ட போங்க ஆனா வியாதியை வாங்கிட்டு வராம பாதுகாப்பா நடந்துக்கோங்கன்னு தான் சொல்ல முடியுது.

டாக்டர் பிரகாஷ் விவகாரம் இந்தப் பொம்பிளைங்களை ரொம்பவே பயமுறுத்தியிருக்கு. நிறையப் பேர் இந்தத் தொழிலை விடற ஐடியால தான் இருக்காங்க. விட்டா அடுத்து அவங்க பிழைக்க ஒரு வழியைக் காட்டியாகணுமே! அதுக்காக பேங்க் லோன் கேட்டு மனு கொடுத்திருக்கேன். அடுத்து இந்தத் தொழில் பண்றாங்கன்னு தெரிஞ்சா அவங்களுக்கு யாரும் வீடு கொடுக்க மாட்டேங்கறாங்க. அதனால அவங்களுக்கு நிரந்தரமா வீடு கேட்டு குடிசை வாரியத்துக்குக் கோரிக்கை அனுப்பியிருக்கேன். மனசு மாறத் தயாரா இருக்கிறவங்களுக்கு எனக்குத் தெரிஞ்ச சுங்கு கட்டற தொழிலைக் கத்துத் தரேன். அதுல அவங்க சாமர்த்தியத்தைப் பொறுத்து, ஒரு நாளைக்குக் குறைஞ்சது அம்பது ரூபா வரைக்கும் சம்பாதிக்கலாம். கல்யாண வயசுல பொண்ணுங்க இருந்தா, அவங்க கல்யாணத்துக்காக நாலு பெரிய மனுஷங்ககிட்ட கையேந்தியாவது, கூறைப் புடவையும், தாலியும் வாங்கித்தரேன். ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலாம்பாங்க. அம்மா பண்ற தொழிலை மறைச்சு, பொண்ணுக்கு நல்ல இடத்துல வரன் தேடி, கல்யாணம் முடிச்சு வைக்கிறோம்.

கடவுள் புண்ணியத்துல இது வரைக்கும் நான் எந்தத் தப்பான வழிக்கும் போகலை. இந்த மாதிரி பொம்பிளைங்களுக்காகப் போராடறதால நானும் அப்படிப்பட்டவதான்னு நிறையப் பேர் நினைச்சு ஒரு மாதிரிப் பேசுவாங்க. எதையுமே நான் கண்டுக்கிறதில்லை. எனக்குத் தேவை இவங்களுக்கெல்லாம் ஒரு மறுவாழ்வு. அதுக்காக எத்தனை வலிகளையும் பொறுத்துக்க நான் தயார். ■

# பிரபாவின் பத்திரிகையாளர் மாநாட்டு எதிரொலிகள்!

இலங்கையின் அண்மைய நிகழ்வுகளில் மிகவும் பரபரப்பானதும், உலகம் முழுவதும் உன்னிப்பாக அவதானித்ததும், நம்பிக்கைகளுக்கும் அவநம்பிக்கைகளுக்கும் விடைதரும் மூடுமந்திரமாகவும் அமைந்திருந்த விடயம் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கடந்த ஏப்ரல் 10ம் திகதி புதன்கிழமை கிளிநொச்சியில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடாகும்.

அண்மைய காலத்தில் நடந்த ஆசியாவிலேயே மிகப் பெரிய பத்திரிகையாளர் மாநாடு இது.

இம் மாநாட்டுக்கென இலங்கைப் பத்திரிகையாளர்கள், இலங்கையில் செயற்படும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மட்டுமன்றி வெளிநாடு களிலிருந்தே பிரபலமான பத்திரிகை நிறுவனங்களிலிருந்து பத்திரிகையாளர்கள் வந்து குவிந்திருந்தார்கள்.

புதன்கிழமை நிகழ்ந்த பத்திரிகையாளர் மாநாட்டுக்கு செவ்வாய்க்கிழமைக்கு முன்னரே பத்திரிகையாளர்கள் கிளிநொச்சிக்குச் சென்று காத்திருந்தார்கள்.

இத்தனை பேரார்வத்திற்கு இரு முக்கியமான காரணங்கள் இருந்தன.

முதலாவது, 12 வருடங்களின் பின் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு பகிரங்கப் பத்திரிகையாளர் மாநாடொன்றுக்கு இப்போதுதான் வெளிவந்திருக்கிறார்.

எனவே அவரை நேரில் பார்ப்பது முதல் அவரது மனக்கிடக்கைளை அறிந்து கொள்வது, அவர் கூறுவதை நேரடியாகக் கேட்பது, அவரது அரசியல் முதிர்ச்சி, சுபாவம், வார்த்தைகளில் உள்ள உறுதித் தன்மை, நேர்மை வெளிப்பாடு என்பவற்றை எடைபோட்டுக் கொள்வது போன்ற நோக்கங்கள் ஒரு புறம்.

இரண்டாவதாக, தற்போது இலங்கையில் இனப்பிரச்சினைக்கான ஒரு சமாதானத் தீர்வைக் காணும் முயற்சியில் இலங்கை அரசாங்கமும் புலிகளும் இறங்கியிருக்கும் ஒரு ஆரம்பத் தருணத்தில் இப் பத்திரிகையாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, புலிகள், சமாதானத்துக்கான எவ்வகையான தீர்வு வடிவத்தையும் வழி முறைகளையும் கொண்டிருக்கிறார்கள், அதுபற்றி புலிகளின் பல்வேறு மட்டத் தலைவர்கள், மற்றும் அதன் அரசியல் ஆலோசகர் ஆகியோரால் சொல்லப்பட்டு வந்த கருத்துக்களை விட புலிகள் தலைவர் பிரபாகரனின் சிந்தனை என்ன என்பதை நேரடியாகத் தெரிந்து கொள்வது மிக முக்கியமான அம்சமாகக் கருதப்பட்டது.

> தமிழ்க் கல்விமான்கள் மற்றும் கட்டுரையாளர்கள் பலரும் இப் பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகள் சமாதானத்துக்குச் சாதகமாக வெளிப்படுத்திய கருத்துக்களுக்கே முதன்மையளித்து அவற்றை சாதகமான கோணத்தில் ஆராய வேண்டுமெனக் கருதுகிறார்கள்

இதில் தற்போது பிரபலமாக அடிபடும் இடைக்கால நிர்வாகம் பற்றி பிரபாகரன் என்ன கருதியிருக்கிறார், முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து அவரது கருத்து என்ன என்பது பற்றியும், இதைவிட மிக முக்கியமாக பல்வேறு தரப்பினரதும் சந்தேகத்துக்குரிய விடயமாக இருந்து வந்த தமிழீழப் போராட்டத்தை பிரபாகரன் கைவிடத் தயாரா என்பதையும் நேரில் அவரிடம் கேட்டறிந்து கொள்வது இங்கு குழுமிய பத்திரிகையாளர்களின் பேரார்வத்துக்குரிய விடயங்களாக இருந்தன.

இதன் காரணமாகவே இத்தனை இடர்பாடுகளைத் தாண்டி புலிகளின் கடும் கட்டுப் பாட்டுப் பிரதேசத்துக்குள் பாரிய வசதிகள் ஏதுமற்ற நிலையில் நிகழ்ந்த இப் பத்திரிகையாளர் மாநாட்டுக்கு இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேசப் பத்திரிகை நிறுவனங்களிலிருந்தும் பத்திரிகையாளர்கள் சென்று பங்குபற்றியிருந்தனர்.

இப் பெரும் பத்திரிகையாளர் திரளினை புலிகளே எதிர்பார்க்கவில்லை. தாம் இலங்கைப் பத்திரிகையாளர்களும் இலங்கையில் செயலாற்றும் சர்வதேச பத்திரிகை நிறுவனங்களின் பத்திரிகையாளர்களும் வருவார்களென எதிர்பார்த்தனரேயல்லாமல் இவ்வாறு சர்வதேச நாடுகளிலிருந்து பத்திரிகையாளர்கள் நேரடியாக வருவார்களென எதிர்பார்க்கவில்லையென புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டபோது தெரிவித்திருந்தார்.


இப் பத்திரிகையாளர் மாநாடு புதிய ஆரம்பமொன்றை திறந்துவிட்டிருந்தது.

இதில் புலிகள் தலைவரும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் தெரிவித்த கருத்துக்களை ஒட்டி அடுத்த அரசியல் நகர்வுகளுக்கான முஸ்தீபுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் எதிரொலித்த விடயங்கள் தொடர்பாக பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களை வெவ்வேறு பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

அத்தோடு பல்வேறு அரசியல் வாதிகளும் பலவிதப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புலிகள் தலைவர் பிரபாகரன் சமாதானத் தீர்வொன்றுக்கு தனக்கிருக்கும் நாட்டத்தையும், பேச்சுவார்த்தைகளிலுள்ள நம்பிக்கையையும், தனது அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்புகள் பற்றிய திருப்தியையும் வெளிப்படுத்தியிருக்கிறாரென்றும் உரிய மாற்றுத் தீர்வு ஒன்றில் இணக்கம் காணும் பட்சத்தில் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடத் தயாராயிக இருப்பதையும் வரவேற்றுள்ளார்.



அத்துடன், புலிகளின் எதிர்பார்ப்பைத் திருப்தி செய்வதற்கு உகந்த வகையில் அரசியல் யாப்பின் 13ம் திருத்தச் சட்ட மூலத்தைவிட மேலதிகமான அதிகாரங் கொண்ட தீர்வை வழங்க நாம் தயாராக வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

அதேவேளை புலிகளின் தடையை நீக்க வேண்டுமென்ற அவர்களின் நிபந்தனையை அரசாங்கம் சாதகமான வகையில் பரிசீலிக்குமெனவும் ரணில் பதிலளித்திருந்தார்.

அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் புலிகள் ஐக்கிய இலங்கைக்குள்ளான சுயநிர்ணய உரிமைக்குத் தயாராக இருக்கிறார்களெனத் இப் பத்திரிகையாளர் மாநாடுமூலம் தான் புரிந்து கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

பிரதான எதிர்க் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியிடமிருந்தும் இப் பத்திரிகையாளர் மாநாடு குறித்து அதிருப்திகள் எதுவும் பெரிய அளவில் வெளிப்படவில்லை.

ஜே.வி.பி. புலிகள் தமிழீழத்தை நிறுவுவதற்கான கபட நாடகத்தை நடத்தி வருகிறார்களென்றும் அரசாங்கம் இதற்குப் பலியாகிச் செல்வதாகவும் தனது பாணியில் விமர்சித்து வருகிறது.

பிரபாகரனின் பையிலிருந்து பூனை வெளியே பாய்ந்து விட்டது என்றும் அவரின் தமிழீத்துக்கான உள்மனக்கிடக்கை அவரையறியாமலே வெளிவந்துவிட்டதாகவும் ஜே.வி.பி.யினர் கருத்துக் கூறியுள்ளனர்.

இதேவேளை புலிகளின் நடவடிக்கைகள் ஒப்பந்தத்தை மீறுவதாக கண்டித்திருந்த அமெரிக்கத் தூதரகம், புலிகள் தலைவர் பிரபாகரன் இப் பத்திரிகையாளர் மாநாட்டில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து வெளிப்படுத்திய நம்பிக்கையை வரவேற்று அதை புலிகள் தொடர்ந்தும் பேணுவார்களென எதிர்பார்ப்பதாகக் கூறியுள்ளதானது கவனிக்கத்தக்க ஒரு மாற்றமாகும்.

இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாட்டாளர்களாகச் செயற்பட்டு வரும் நோர்வே அரசாங்கமும் புலிகள் தலைவரது சமாதானத்துக்கான உறுதிப்பாட்டை வரவேற்றுள்ளது.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் நோர்வே அரசாங்கத்தின் பங்கையும் சேவையையும் புலிகள் தலைவர் பிரபாகரன் மெச்சியிருந்தார்.

மத்திய கிழக்கில் நோர்வே அரசாங்கத்தின் முயற்சியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனாக இன்று பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான நிலை புலிகளுக்கு ஏற்படாதாவெனக் கேட்கப்பட்ட போதும் தான் அப்படி நினைக்கவில்லையென பிரபாகரன் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

நோர்வே, ஒரு நடுநிலை நாடு, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அனுபவம் கொண்ட நாடு, இலங்கையில் தனது நலன்களெதையும் கொண்டிராத நாடு, என்ற வகையில் அது ஏற்பாட்டாளராகச் செயலாற்றுவதற்குப் பொருத்தமான நாடென அவர் அதனை மெச்சியிருந்தார்.

அதேவேளை பிரபாகரனின் பத்திரிகையாளர் மாநாட்டுக் கருத்துக்களையிட்டு தமிழ்க் கட்சிகள் பலதும் பெரிதும் வரவேற்று அறிக்கைகள் விடுத்துள்ளன.

அவரது சமாதானத்துக்கான நாட்டத்தை இலங்கை அரசாங்கம் சரியாகப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென அவை கோரியுள்ளன.

புலிகள் தலைவர் திட்டவட்டமாகத் தெரிவித்தபடி பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வதற்கு முன்னர் புலிகள் மீது இலங்கை அரசாங்கம் விதித்திருக்கும் தடையை நீக்க வேண்டுமெனவும் அவை கோரியுள்ளன.

இத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் சேராத புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் இப் பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகள் தலைவர் வெளிப்படுத்திய அறிகுறிகளைப் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், அவர் யுத்தத்துக்கான கதவையும் சமாதானத்துக்கான கதவையும் ஒரே நேரத்தில் திறந்து வைத்துள்ளாரெனவும் அதில் அவர் எந்தக் கதவை இறுதியில் தெரிந்தெடுக்கப் போகிறார் என்பதைப் பின்னர்தான் அறியக் கூடியதாக இருக்குமெனவும் கூறியிருந்தார்.

இதேவேளை பிரபாகரனின் சமாதானத்துக்கான நாட்டத்தை வரவேற்று மலையகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் அமைச்சர்களுமான ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், அரசாங்கம் விதித்துள்ள புலிகள் மீதான தடை சமாதானப் பேச்சுக்களுக்குத் தடையாக அமையுமானால் அரசாங்கம் புலிகள் மீதான தடையை நீக்க முன்வரவேண்டுமென புலிகளின் நிபந்தனைக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கல்விமான்கள் மற்றும் கட்டுரையாளர்கள் பலரும் இப் பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகள் சமாதானத்துக்குச் சாதகமாக வெளிப்படுத்திய கருத்துக்களுக்கே முதன்மையளித்து அவற்றை சாதகமான கோணத்தில் ஆராய வேண்டுமெனக் கருதுகிறார்கள்.

இம் மாநாட்டில் புலிகள் தலைவர் பிரபாகரனும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் இந்தியாவுடனான நட்புறவையும் நல்லெண்ணத்தையும் வளர்த்துக் கொள்வதற்கான தமது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

அத்தோடு ராஜீவ் காந்தி கொலை பற்றியும் அது பத்து வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த துன்பியல் சம்பவமெனவும் அது குறித்து இருதரப்பும் மறந்து விடுவோமெனவும் கோரியிருந்தனர்.

அதேவேளை இந்தியா தற்போதய பேச்சுவார்த்தையில் முக்கிய பங்கேற்க வேண்டுமென அழைப்பு விடுத்திருந்தனர்.

மேலும், இப் பேச்சுவார்த்தைகளுக்கு வசதியாக இந்தியா தனது தென் மாநிலப் பகுதியில் அன்ரன் பாலசிங்கம் தங்கியிருந்து மருத்துவ சிகிச்சைக்குரிய ஏற்பாடுகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட ஏற்பாடு செய்து தரவேண்டுமெனக் கோரியுள்ளதாகவும் கூறியிருந்தனர்.

எனினும் இது குறித்து இந்திய வட்டாரங்களில் சாதகமான விளைவுகள் தோன்றவில்லை.

மாறாக இன்னும் மோசமான நிலைமைக்கு இட்டுச் செல்ல அங்குள்ள அரசியல் வாதிகளுக்கு ஒரு தூண்டுதல் அளித்ததாக அமைந்துவிட்டது.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி புலிகளின் தடையை நீக்கும்படியான வேண்டுகோளை நிராகரித்துள்ளதுடன் இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்கு மிடையிலான பேச்சுவார்த்தைகளில் இந்தியா நேரடியாகப் பங்கேற்கப் போவதில்லையெனவும் மறுத்துள்ளார்.

எனினும் புலிகள் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மருத்துவ சிகிச்சைக்கான வேண்டுகோளை மனிதாபிமான அடிப்படையில் கரிசனையுடன் ஆராயுமெனக் கூறியிருந்தார்.

இதையே இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நிருபாமா ரோ, புலிகள் இன்னும் பயங்கரவாத அமைப்பாகவே இந்தியாவால் கருதப் படுவதால் அவர்கள் மீதான தடையை இந்தியா நீக்க மாட்டாதென அறிவித்திருந்தார்.

அத்துடன் நில்லாது 1995ல் இந்தியா புலிகள் தலைவர் பிரபாகரனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு விடுத்திருந்த கோரிக்கை இன்னும் அமுலில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியின் பிரதிபலிப்பும் உணர்ச்சிவசப்பட்ட எதிர்ப்பாகவே இருந்தது.

பிரபாகரன் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய எதிரியென்றும் அவரை அவ் வழக்கில் ஆஜர் படுத்த வேண்டுமென்றும் அதற்காகவே இலங்கையிடம் அவரை நாடு கடத்தும்படி கேட்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்திருந்தார்.

அவர் கொலையுண்ட ராஜீவ் காந்தியின் மனைவியாகவும் அவரது கட்சிக்குத் தலைமை வகிப்பவராகவும் உள்ள நிலையில் தனது கணவனாரின் கொலை குறித்து இத்தகைய உணர்ச்சி பூர்வமான மனோபாவத்தைக் கொண்டிருப்பது எதிர்பார்க்கக் கூடியதாயினும் இலங்கையின் சமாதான முயற்சி பற்றிய எவ்வித கரிசனையும் அவரால் காட்டப்படவில்லை.

முன்னாள் இந்தியப் பிரதமர் என்ற வகையிலும் இந்தியச் சுதந்திரத்தில் முதன்மைப் பாத்திரம் வகித்த ஜவகர்லால் நேரு பரம்பரையில் எஞ்சியிருந்த கடைசி மகன் என்ற வகையிலும் ராஜீவ் காந்தி பற்றி இந்திய மக்களிடம் உள்ள உணர்வுகளுக்கு சோனியா காந்தியின் கருத்து முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

அத்தோடு இன்றைய இந்திய அரசியல் சூழ்நிலையில் இந்திய மத்திய அரசில் ஆட்சி மாற்றங்களுக்கு ஏதுநிலைகள் தோன்றி வருகின்ற போக்கில் அடுத்த இந்தியப் பிரதமராகும் வாய்ப்பையும் சோனியா காந்தி கொண்டிருப்பதும் அக்கறைக்குரிய விடயமாகும்.

இந் நிலையில் இவ் விடயத்தில் அவரது கருத்துகள் இன்றைய இந்திய அரசாங்கத்தின் முடிவுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியனவே.

இதேவேளை இதுகுறித்து தமிழ் நாட்டின் உணர்வலைகள் இங்கு முக்கியமான ஒன்றாகும்.

அங்கு, தற்போது பெரும் ஆதரவோடு ஆட்சிபீடம் ஏறி, தனது முதல்வர் ஸ்தானத்தை மீண்டும் உறுதிப்படுத்திக்கொண்ட ஜெயலலிதா புலிகளின் இத் தாழ்மையான வேண்டுகோள்களை அலட்சியமாக நிராகரித்ததோடல்லாமல் புலிகள் தலைவர் பிரபாகரன் இந்திய மண்ணில் ராஜீவ் காந்தி கொலையில் ஒரு கொலைக் குற்றவாளியாகத் தேடப்படுபவரென்றும் அவரை இலங்கை அரசாங்கம் கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், அவ்வாறு அதனால் செய்ய முடியாவிட்டால் இந்தியா இலங்கையின் அனுமதியைப் பெற்று தனது படையை அனுப்பிக் கைது செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

அத்தோடு நில்லாது இதனை உடனடியாகத் தனது தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானமாக நிறைவேற்றி, இத் தீர்மானம் இன்றைய தமிழ்நாட்டு மக்களின் மனநிலையைப் பிரதிபலிப்பதாகவும் அத் தீர்மானத்திலேயே தெரிவித்துமுள்ளார்.

மேலும் எதிர்வரும் மே மாதம் 13ம் திகதி காலாவதியாகும் இந்தியாவின் புலிகள் மீதான தடையை மேலும் இரு வருடங்களுக்கு நீடிக்கும்படி அவர் மத்திய அரசாங்கத்திடம் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் சார்பில் கேட்டுள்ளார்.

இதேவேளை புலிகள் மீதான தடை நீக்கப்படமாட்டாதென இந்தியப் பிரதமர் வாஜ்பேயி தெரிவித்ததை வரவேற்றுள்ள ஜெயலலிதா புலிகள் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மருத்துவ சிகிச்சைக்கான கோரிக்கையை அவர் கரிசனையுடன் ஆராய்வதாகக் கூறியதை எதிர்த்தார்.

இது விடயத்தில் இந்திய மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் மீது எவ்வித அழுத்தத்தையும் வழங்க மாட்டாதெனத் தான் நம்புவதாகவும் அதையும் மீறி மத்திய அரசாங்கம் அன்ரன் பாலசிங்கத்தை இந்தியாவுக்குள் அனுமதித்தால் தனது தமிழ்நாடு அரசாங்கம் அவரைத் தமிழ் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப் போவதில்லை யெனவும் கூறியுள்ளார்.

இவற்றைவிட, புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுக்கு எதிராக "போட்டா" எனப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுமெனவும் எச்சரித்துள்ளார்.

இலங்கை விடயத்தில் தமிழ்நாடு அரசாங்கத்தின் நிலைப்பாடும் கருத்துக்களும் இந்திய மத்திய அரசாங்கத்தை பாதிக்கக்கூடியவையாகும்.

இதேவேளை தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரான கலைஞர் கருணாநிதி பிரதமர் வாஜ்பேயின் நிலைப்பாட்டை ஆதரித்ததுடன் உலகத்தில் எங்கேயாவது சமாதானம் ஏற்பட ஒரு வாய்ப்பு இருக்குமானால் அதை நாம் வரவேற்க வேண்டுமென வெறும் பொதுப்படையாகவே கருத்துக் கூறியிருந்தார்.

தமிழ் நாட்டில் புலிகளின் கோரிக்கைகளை ஆதரித்து வெளிப்படையாக அதற்குச் சாதகமாக இந்திய அரசாங்கம் பதிலளிக்க வேண்டுமெனக் கோரியிருந்தவர் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபாலசாமி ஒருவர்தான்.

புலிகளுக்கு ஓரளவு ஆதரவாகக் கருத்துக்கூறிவருகின்ற பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ்கூட இது விடயத்தில் ஆணித்தரமான கருத்துக்கள் எதையும் சொல்லவில்லை.

இந்தியப் பத்திரிகைகளிலும் பொதுப்படையாக புலிகள் பற்றிய சந்தேகக் கண்ணோட்டம் நிலவுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

பத்திரிகையாளர் மாநாட்டிலும்கூட இந்தியப் பத்திரிகையாளர்களின் சில இக்கட்டான கேள்விகளை தவிர்த்துக் கொள்ளக் கோரும் விதத்தில் புலிகள் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தாம் இங்கே ஒரு சமாதானத்தை உருவாக்க முயற்சிக்கின்ற வேளையில் இந்தியாவிலிருந்து இவ்வளவு தூரம் வந்து பழைய நிகழ்வுகளைக் கிண்டி தம்மை அசௌகரியப் படுத்த வேண்டாமென அறிவுறுத்தியிருந்தார்.

இக் கோரிக்கைக்கு அவ்விடத்தில் செவிமடுத்த இப் பத்திரிகைகள் அதுபற்றிய தமது செய்திகளிலும் கருத்துக்களிலும் அவ் அறிவுறுத்தலை அதிகதூரம் மதிக்கவில்லை என்பதையே உணரக்கூடியதாக இருந்தது.

இதேவேளை இப் பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகள் எடுத்துக்கொண்ட அதிகூடிய பாதுகாப்பு சோதனை நடவடிக்கைகள் பற்றிய விசனங்களையும் சில வெளிநாட்டுப் பத்திரிகைகள் வெளிப்படுத்தத் தவறவில்லை.

எனினும் இத்தகைய கடும் சோதனை மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகளால் பத்திரிகையாளர்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மன்னிப்புக் கோரியிருந்ததுடன் அதற்கான காரணத்தையும் விளக்கியிருந்தார்.

> இதேவேளை இப் பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகள் எடுத்துக்கொண்ட அதிகூடிய பாதுகாப்பு சோதனை நடவடிக்கைகள் பற்றிய விசனங்களையும் சில வெளிநாட்டுப் பத்திரிகைகள் வெளிப்படுத்தத் தவறவில்லை.

இப் பத்திரிகையாளர் மாநாடு பற்றிய கருத்துக்கள் ஒவ்வொருவருக்கும் வேறுபட்டதாக இருந்தாலும் மிக நீண்ட காலத்திற்குப் பிறகு - 12 வருடங்களுக்குப் பின்னர்- புலிகள் தலைவர் பகிரங்கமாகப் பத்திரிகையாளர்களைச் சந்தித்து அவர்களின் கேள்விகளுக்கு விடையளிக்க முன்வந்ததானது கேள்விக்கப்பாற்பட்டு வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

இந் நீண்ட கால இடைவெளியில் ஏற்பட்ட பல்வேறு சம்பவங்கள், எடுத்துக் கொண்ட நிலைப்பாடுகள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் யாவற்றையும் பற்றி முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டிலேயே முழுமையாகவும் திருப்திகரமாகவும் பதிலளிக்க முடியுமென்பது எதிர்பார்க்க முடியாத விடயமே.

அத்தோடு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் தலைவர் ஒருவர் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஆரம்பக் கட்டத்திலேயே, மற்றத் தரப்பின் முழுமையான நிலைப்பாடுகளும், அது தமது அபிலாஷைகளை எந்தளவு ஈடு செய்யுமென்பதும் பூரணமாகத் தெரியாத நிலையிலேயே சகல கேள்விகளுக்கும் தீர்மானமான பதில்களை வழங்குவதும் சாத்தியமற்றதே.

ஆக, சமாதானத் தீர்வு பற்றிய தனது நாட்டத்தையும் அதற்கான பேச்சுவார்த்தை குறித்த நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துவதற்கு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்குமேயன்றி அதற்கு மேலதிகமாக எதையும் எதிர்பார்க்க முடியாது.

அந்த வகையில் புலிகள் தலைவர் தம்மில் ஒரு சாதகமான பக்கத்திற்கும் இடமுள்ளதென்பதை வெளிப்படுத்தியுள்ளமையை இங்கு நாம் அனுகூலமாக நோக்கலாம்.


# ஸ்போர்ட்ஸ்

## இலங்கை அணி 217 ஓட்டங்களால் தோல்வி

### சார்ஜா கிண்ணம் பாகிஸ்தானுக்கு...

**சா**ர்ஜா கிண்ணத்திற்கான முக்கோண ஒருநாள் போட்டித்தொடரை பாகிஸ்தான் வென்றுள்ளது.

நியூஸிலாந்து, இலங்கை, பாகிஸ்தான் அணிகள் பங்கு பற்றிய இப்போட்டித் தொடரில் இலங்கை பாகிஸ்தான் அணிகள் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றன. புதன் கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் பாகிஸ்தான் அணி 217 ஓட்டங்களால் சுலபமாக வெற்றியை ஈட்டிக்கொண்டது.



முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 296 ஓட்டங்களைப் பெற்றது. யூசுப் யொஹானா சிறப்பாக துடுப்பாடி 129 ஓட்டங்களைப் பெற்றார். இம்ரான் நஸீர் 63 ஓட்டங்கள். யூனிஸ்கான 66 ஓட்டங்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 78 ஓட்டங்களில் தமது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்கள் சகலரும் மிகக் குறைந்த ஓட்டங்களுடன் மைதானத்தை விட்டு வெளியேறினர். ரஸல் ஆர்னோல்ட், சனத் ஜயசூரியா ஆகியோர் தலா 19 ஓட்டங்கள் வீதம் பெற்றனர். இதுவே இலங்கை அணியின் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

### முரளிதரன் காயம்

இதற்கிடையில் சார்ஜா கிண்ண இறுதி ஆட்டத்தின் போது களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த முத்தையா முரளிதரன் கையில் ஏற்பட்ட காயம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டார்.

முரளிதரனின் தோள்பட்டை விலகியிருகப்பதாகவும், குறைந்த பட்சம் இன்னும் 3 மாதகாலத்திற்கேனும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற முடியாதநிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக இம் மாதம் 21ம் திகதி இடம் பெறவிருக்கும் இலங்கை அணியில் இங்கிலாந்துக்கான சுற்றுப்பயணத்தில் முரளி இடம்பெறமாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சார்ஜா இறுதிப்போட்டியின்போது ஆட்டநாயகனாக யூசுப் யொஹானா தெரிவு செய்யப்பட்டதுடன் போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரராக மாவன் அத்தப்பத்து தெரிவானார்.

# அவளது விம்பம்

**வ**குப்பினுள் நுழையும் போதே மனம் ஆரவாரமாய்த்துடிப்பதை உணர்ந்தான் வரதன்.

அவன் படித்த பாடசாலையில் ஆண்கள் மட்டுமே. இப்போது அவன் வந்திருக்கும் உயர்நிலைப் பாடசாலையில் பெண்களும் இருப்பார்கள் என்று நினைக்கவே வரதனுக்கு உடம்பு முழுக்கப் பரபரத்தது.

அவனால் நேரே பெண்கள் இருந்த பக்கம் தைரியமாகப் பார்க்க முடியவில்லை. ஆனாலும், அவர்கள் எல்லோரும் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதான ஓர் அவஸ்தையில் அவன் இருந்தான். அவர்கள் பக்கமிருந்து சிறு குருவிகளின் சலசலப்பு போல மென்மையான ஒலிகள் வந்து கொண்டிருந்தன.

வகுப்பில் ஆண்கள் இருந்த பக்கம் ஒரே அமர்க்களமாக இருந்தது. எல்லோரிடமும் பரபரப்பான முகத் தோற்றம்.

தைரியசாலிகளான சில மாணவர்கள் பெண்கள் பக்கம் சென்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஏனென்று தெரியாமல் அப்படியொரு சிரிப்பு!

ஒரு மாணவன் ஒரு பெண்ணின் பெயரைக் கேட்கிறான். அந்தப் பெண்ணும் பெயரைச் சொல்கிறாள். இதில் எங்கே சிரிப்பு வருகிறது என்று வரதனுக்குப் புரியவில்லை.

ஆனால், ஏதோ பெரிய நகைச்சுவை வெடியை உதிர்த்துவிட்டதைப் போலச் சிரிக்கிறார்கள்.

ஆண்கள் சிரிப்பில் தடுமாறி அசடு வழிந்து கொண்டிருந்தார்கள்.

வகுப்பில் பெண்கள் இருந்தால் ஆண்களிடம் இவ்வளவு மாறுதல்களா? பெண்களின் கவனத்தைத் திருப்புவதே வாழ்க்கையின் ஒரே இலட்சியம் என்பது போல பல்வேறு முனைப்புகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

இவர்கள் யாருமே இதுவரை பெண்களைப் பார்த்ததே கிடையாதா?

பெண்களுக்குள்ளேயும் இப்படிப்பட்ட உணர்ச்சிகள் இருக்குமா?

பார்த்தால் அப்படித் தெரியவில்லை. ஆண்கள் தான் அலையும் ஜென்மங்களோ?

வரதனுள் கேள்விகள் புரண்டு எழுந்தன. அவனுக்கும் ஏதாவது ஒரு பெண்ணிடம் பேசிவிட வேண்டும் என்ற ஆசை இருக்கத் தான் செய்தது.

ஒரு நாள் அவனும் பேசியபோது, அந்த சிறகடிக்கும் உணர்வு எந்த இரசாயனச் சுரப்புக்களின் வேலை என்று இவன் யோசித்தான்.

அந்தப் பெண் தன் பெயரைச் சொன்னபோது, அது தேனாகத் தன்னுள் பாய்ந்ததை உணர்ந்தான். இதயத்தின் சுவர்களில் இனிப்பாகச் சென்று ஒட்டிக்கொள்கின்றன அவள் பேசும் ஒவ்வொரு சொல்லும். நேரம் போனதே தெரியவில்லை. கனவுகளின் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருப்பது போலவும்,



வண்ண வண்ணப் பட்டாம் பூச்சிகள் அவன் மூளைக்குள் பறந்து திரிவது போலவும், அந்தச் சிறிது நேரத்தைப் பூமியில் தான் வசிக்காத நேரமாகவும் உணர்ந்தான்.

அன்றிரவு அவனால் தூங்க முடியவில்லை. அந்தப் பெண் பேசிக்கொண்டிருக்கையில் செய்த ஒவ்வொரு அசைவும் மிகப்பிரமாண்டமாகி மிகமிக மெதுவாக அவனிடம் திரும்பத் திரும்ப அசைந்தது. அவள் பேசிய வார்த்தைகளிடையே அவன் நீந்தினான். இன்னும் கொஞ்ச நேரம் அவளிடம் பேசியிருக்கலாமோ? ஏன் சட்டென்று விலகி விட்டாள் அவள்? நான் தவறாக ஏதாவது பேசி விட்டேனா? அல்லது அளவுக்கதிகமாக வழிந்து விட்டேனா? ஏன் இன்னும் சற்று நேரத்திற்கு அவளை மடக்கி வைத்துக்கொள்ள முடியவில்லை.... வரதன் கவலையிலாழ்ந்தான். பேச்சினிடையே அவன் மீசை சடைத்திருப்பதைச் சொல்லி அவள் சிரித்தது ஞாபகம் வந்தது. எழுந்து கண்ணாடி முன் சென்றான்.

அடுத்த நாள் அவளை மீசையில்லாமல் போய் பார்த்தான். இப்போதும் அவள் சிரித்தாள். ஏன் சிரிக்கிறாள் என்று புரியாமல் குழம்பினான்.

அவள் வேறொரு மாணவனுடன் சிரித்துப் பேசியதைப் பார்த்து, அவனை எட்டி உதைக்க வேண்டும் என்று ஆவேசம் கொண்டான்.

சே... இது என்ன குரூர உணர்வு என்று தன்மீதே வெறுப்புக்கொண்டான்.

அவள் தன்னைப் புறக்கணிக்கின்றாளோ? என்ற சந்தேகத்தில் மனது அழுதது.

அவள் யார்? அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? ஏன் பெண்கள் என்றாலே இந்த மனம் குழம்பித் தவிக்கிறது?

அவள் என்ன சொன்னாலும் செய்ய வேண்டும் என்ற விவஸ்தை கெட்டதனத்துக்கு நானும் ஏன் பலியானேன்?

இது தொப்புள் கொடியோடு தொடரும் விதியா?

பெண்ணின் கடைக்கண் கட்டளைக்கே காற்றிலேறி விண்ணைச் சாடிவிட்டு வருவது காலாகாலமாக ஆண்கள் வழக்கமாக இருந்து வருகிறது.

பாரதிதாசனுக்கு முன்னால் குறுந்தொகைக் காலத்திலேயே இரு என்றால் இருந்தும், எழு என்றால் எழுந்தும் அடிமைப்பட்டவர்களாக நடந்திருக்கிறார்கள் இந்த ஆண்கள்!

மாமரத்திலிருந்து கனிந்து விழுந்த பழங்களை வயலிலுள்ள வாளை மீன்கள் கவ்வி உண்ணும் ஊரையுடைய பேர் பெற்ற தலைவர், அந்தோ பரிதாபம்! நம்முடைய வீடுகளுக்கு வந்தால் பெரிய வீராவேசப் பேச்செல்லாம் பேசுபவன், தன்னுடைய வீட்டில் மனைவி சொல்லுகிற படியெல்லாம் ஆடுகிறவனாக இருக்கிறான்.

எதிரில் நிற்பவர் கையைத் தூக்கினால் கையையும், காலைத் தூக்கினால் காலையும் தூக்குகின்ற கண்ணாடி விம்பத்தைப் போல அவள் விரும்புகிறபடியெல்லாம் ஆடுகிற அப்பாவி தான் அவன்!

**கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉம் ஊரன்,**
**எம்மில் பெருமொழி கூறித்**
**தம்மில்**
**கையும் காலும் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல**
**மேவன செய்யும் தன்**
**புதல்வன் தாய்க்கே!**

(குறுந்தொகை: 8)

## சிந்தியா பதில்கள்



மோனல்

**★ விடுதலைப் புலிகளது தலைவரின் பத்திரிகையாளர் மாநாடு எப்படி?**

கை.ரமேஷ், பொத்துவில் நகர்.

வெளியே வராமலிருந்திருக்கலாம்.

★★

**★ தமிழ் கூட்டமைப்பினர், முஸ்லிம் காங்கிரஸ், மலையகத் தலைவர்கள் எல்லோரும் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்தித்து வந்திருக்கிறார்களே, எதற்காக?**

க.கமால்தீன், ஏறாவூர்-03.

ஏகப்பிரதிநிதி என்பதை உறுதிப் படுத்துவதற்கு.

★★

**★ அறுபது வயதுக்குப் பின் பேய்க்குணம் என்பது உண்மையா?**

ஆர்.தேவராஜ், கட்டுகஸ்தோட்டை.

எனக்குத் பேயைத் தெரியாது.

★★

**★ அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக கைதூக்கிய மலையகத் தலைவர்கள் இன்று வட-கிழக்கிற்கு ஓடுகிறார்களே?**

எஸ்.அருள், ஹட்டன்.

பொங்கு தமிழ் நேரம் இது. பழசையெல்லாம் கிண்டிக்கொண்டிருக்க வேண்டாம் என்று சொன்னது உங்களுக்கு விளங்கவில்லையா!

★★

**★ விஜய்க்கு "இளைய தளபதி" என்று பட்டம் வந்தது ஏன் சிந்தியா அவர்களே?**

வி.பிரதாபன், நீர்கொழும்பு.

விஜயகாந், இனி "மூத்த தளபதி" எனவே அவர் ஒதுங்கிக்கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலாக இருக்கலாம்.

★★

**★ உண்மையில் எமது மக்களுக்கு ஜனநாயகம் தேவைப்படுகிறதா? அவர்கள் அதை விரும்புகிறார்களா?**

எஸ்.எச்.எம்.றபியுதீன், மீராவோடை-04.

மக்களில் ஒருவனாக யோசிக்கையில் குழப்பமாகத்தான் இருக்கிறது. "கரமசோவ் சகோதரர்கள்" என்ற நாவலில் கிராண்ட் இன்குவிஸிடர் இயேசு கிறிஸ்துவிடம் பேசுவதாக வருவது: "மக்களுக்கு பாதுகாப்பும் உணவும் தான் வேண்டுமே ஒழிய அவர்களுக்குச் சுதந்திரம் வேண்டாம். அவர்கள் பல்வேறு வாய்ப்புகள் வேண்டாம், தெரிவுகள் வேண்டாம் என்று சொல்கிறார்கள். இதை எடுப்பதா, அதை எடுப்பதா என்பதெல்லாம் அவர்களுக்குக் குழப்பம். நீயே முடிவு பண்ணி எங்களிடம் ஒரு விஷயத்தைக் கொடு என்று இறைஞ்சுகிறார்கள். அதனாலேயே நான் சர்வாதிகாரியாக இருக்கிறேன்."

★★

**★ எழுத்தாளர் ஜெயகாந்தன் மிகுந்த கர்வம் பிடித்தவர் என்கிறார்களே?**

எம்.எம்.மிஹ்லார், கல்முனை.

"நான் செய்வது சரி, என் செய்கை யாரையும் புண்படுத்தாது, எனக்கு நன்மை தரவில்லை என்றாலும் அடுத்தவருக்குத் தீமை தராது, இன்னொருவரைத் துன்புறுத்தக் கூடாது என்பதை என் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் கடைப்பிடித்து வருகிறேன்" என்று உங்களுக்கு நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மீதே உங்களுக்குக் கர்வம் உண்டாவதைக் காண்பீர்கள்.

★★

**★ புன்னகை அரசி பிரதியுஷாவின் மரணம் கொலையா? தற்கொலையா? என்று இன்னும் சரியாகக் கண்டுபிடிக்கப்படாதது ஏன்?**

க.நித்தியா, ஒந்தாச்சிமடம்.

ஹொலிவூட்டின் மர்லின் மன்றோவில் ஆரம்பித்து ஷோபா, படாபட் ஜெயலட்சுமி, திவ்யபாரதி, சிலுக்கு ஸ்மிதா, விஜி. பிரதியுஷா என்று எல்லா நடிகைகளின் மரணமும் அந்தந்த நேரப் பரபரப்போடு மறக்கப்பட்டு விடுகிறது. இதோ அடுத்தது, மோனலின் மரணச் செய்தி வந்துவிட்டது.

பொலீஸ் விசாரணையை நம்பியிருந்து கடைசியில் ஃபைலை மூடிவிடாமல், இதை ஒரு சமூகப் பிரச்சனையாக எடுத்துக்கொண்டு ஆராய்ந்து தீர்வு காண சேவை அமைப்புகள் முன்வர வேண்டும்.

★★

**★ சாஜா கிரிக்கெட் எப்படி?**

என்.எம்.எம்.நஸ்கான், காத்தான்குடி.

இலங்கைக்கு இறுதிப் போட்டி சறுக்கல் என்றாலும் பந்து வீச்சில் முரளியும், வாஸும் காட்டும் துல்லியத்தைப் பார்த்தால் உலகக் கோப்பையைக் கொண்டு வர ஜெயசூரியாவுக்கும் வாய்ப்பிருப்பது தெரிகிறது.

★★

**★ கன்னத்தில் முத்தமிட்டால் வெற்றி கிடைக்குமா சிந்தியா?**

பா.ஜனார்த்தனி, பெரியகல்லாறு-02.

பெரும்பாலும் அடிதான் கிடைக் கும்.

★★

**★ ரஜினியின் "பாபா" கதை என்ன?**

எம்.வாசன், எட்டியாந்தோட்டை.

ரஜினி படங்களுக்கான விளம்பர வெற்றியே கதையை ரகசியமாக வைத் துக்கொண்டு ஊகங்களைக் கிளப்பி விடுவதில் ஆரம்பமாகின்றது.

ரஜினிகாந்த் தனது ஒவ்வொரு படத்தையும் ஆரம்பிக்கும் வேளையில் தான் பொது மேடைகளிலோ, ஊடகங் களிலோ வாய் திறந்து தன் கருத்தைச் சொல்ல வருகிறார். மற்றும் நேரங்களில் பதுங்கி மௌனமாகிவிடுகிறார்.

தமிழ் நாட்டில் பெருகி வரும் வெடிகுண்டு கலாசாரத்தைப் பற்றி அவர் பேசியபிறகு "பாட்ஷா" படம் வந்தது. ஜெயலலிதா என்ற பெண் மணியால் மக்களுக்கு ஆபத்து என்று பேசிய பிறகு "படையப்பா" வந்தது. இப்போது துக்ளக் ஆண்டு விழாவில் இவரை மேடையில் வைத்துக்கொண்டு பலம் மிக்க மூன்றாவது அணியை உருவாக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று சோ பேசியிருக்கிறார். ரஜினியின் மகள் ஐஸ்வர்யா "அப்பா அரசியலில் இறங்க வேண்டும்" என்று பேட்டியளித்திருக்கிறார். இதையெல் லாம் மறுக்காத நிலையில் "பாபா" ஆரம்பிக்கப்படுகிறது. கதையை நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

# இந்தவருட உங்கள் பலன்

## 2002 பண பலன்கள்

புத்தாண்டு தொடங்குகிறது. வழக்கம் போல் எல்லா ராசியினருமே மிகுந்த எதிர் பார்ப்புடன் இந்த ஆண்டையும் எதிர்நோக்கு வார்கள்.

ஒவ்வொரு வருடம் பிறக்கும்போதும் இந்த ஆண்டாவது மறுமலர்ச்சி ஏற்படாதா என்ற ஏங்கி விட்டு பிறகு ஆண்டு முடியும் வரை பொறுமைகாத்து விட்டு அடுத்த ஆண்டை எதிர்பார்ப்பது வாடிக்கையாகி விட்டது.

சரி, இந்த ஆண்டு எப்படி இருக்கும்?

சில ராசிகளின் அடிப்படையில் பொதுப் படை யாக பலன்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. வழக்கம்போல் பலன்களை எழுதிவிடாமல் மிக முக்கியமான தலைப்பின் கீழ் பலன்கள் விபரிக்கப்பட்டுள்ளன (பலன்களை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை, ஏனென்றால் உங்களின் ஜனன கால ஜாதகத்தில் கிரகங்கள் சுபபலம் பெற்று வலிமை பெற்றிருந்தாலும் தசாபுக்திகள் அனுகூலமாக இருந்தாலும் பலன்கள் வெகு வாக மாறிவிடும்.)

ஜென்ம சனி, ஏழரை சனி, ஜென்மகுரு என்று பலவாறாக விவரிக்கப்பட்டுள்ள பலன் களைப் படிக்கும் வாசகர்கள் கவனத்திற்கா கவே இதைத் தெரிவிக்க வேண்டியுள்ளது.

ஆண்டின் மத்தியில் கடகராசிக்கு குரு பகவான் வந்து உச்சம் பெறுவுள்ள நிலையில் யாவருமே நல்ல பலன்களை அடையலாம்.



### மேஷம்:

(அச்சுவினி, பரணி, கிருத் திகை முதல் பாதம்)

**குருப்ரீதி செய்யவும்**

ஏழரைச்சனியின் பிடியில் இருக்கின் றீர்கள். இந்த ஒரு காரணத்தினாலேயும் சிற்சில இடர்பாடுகளை அனுபவிக்க வேண் டித் தானிருக்கும். ஏப்ரல் மாத இறுதிவரை யிலுமே பணப்புழக்கம்-புழுக்கமாகவேயிருக் கும்.

மனம் சஞ்சலப்பட்டபடியிருக்கும். தேவையற்ற விவாதம்' குழப்பம், குமைச்சல் என்று அல்லாடுவீர்கள்.

ஏது, எடுத்த எடுப்பிலேயே இப்படிச் சொல்லி வருகிறோமே என்ற கலவர மடைய வேண்டாம்.

இடையிடையே சில நன்மைகளும் தலை காட்டும்தான். இருப்பினும் நீங்கள் பணம் விஷயமாக எங்கும் எதிலும் எப்போதும் ஒரு எல்லை வகுத்துக் கொள்ளுவது நல்லது.

மே மாதம் துவங்கும்போது முதற் கொண்டு பொருளாதாரச் சிக்கல்கள் தீர்வடையக்கூடும். ஒன்றுக்கும் மேற்பட்ட வழிவகைகளில் பணம்புழங்கும். மூன் றாவது வாரத்தில் குரு, செவ்வாய் இணை யும்போது சுப பலன்கள் தெரியும். மனதிலும் ஒரு தெளிவு கூடும். பொதுவாக கடந்த மார்ச், ஏப்ரல் முதற்கொண்டே பிசினஸ் உலகம் கூட படுக்காத குறையாக பல வீனமாகி கிடக்கிறது. தொழில்துறையினரும் தொய்வடைந்து அதன் மூலமாகவும் நிரம்ப பிரச்சனைகளை அனுபவித்து வரு கின்றனர். இந்த நிலை என்றுதான் மாறும்? ஜூலை மாதம் குருப்பெயர்ச்சி நான்காம் ராசிக்கு வந்ததும் உங்களுக்கு வீடு' வாகனம், நிலபுலன் என்று சொத்து சேர்க் கைக்ககு அதிக வாய்ப்புள்ளது. தடைகள்-மாயமாகும். அதிர்ஷ்டத்தென்றல் ஆகஸ்டில் உங்களை வருடிச் செல்லும்.

தொழில் ரீதியான முன்னேற்றங்கள் தாராளமாக அமையும் வியாபாரம் அபி விருத்தி அடையும். செப்டம்பர், அக்டோபரில் நினைத்திட்ட திட்டங்களை எந்தவித இடர் பாடுகளுமின்றி செய்து முடிக்கலாம். அதே சமயம் அக்டோபரின் இறுதியில் சனி' சுக் கிரன் போன்றோர் வக்ரநிலை அடைய உள்ள னர். இந்த சூழ்நிலையில் விழிப்புடன் செயல்படவேண்டியிருக்கும். நவம்பர், டிசம் பர் சுமாராகச் செல்லும்.

எது எப்படியோ மே மாதத்திற்கு பிறகு உங்களிடம் பணப்புழக்கம் சரளமாகும். அதன் மூலம் நீங்களும் புத்துணர்வு அடை வீர்கள்.

நீங்கள் ஒருமுறை ஆலங்குடி சென்று குருப்ரீதி செய்து வாருங்களேன்!



### ரிஷபம்:

(கிருத்திகை 2,3,4ம் பாதங்கள்; ரோகிணி, மிருகசீரிடம் 1,2ம் பாதங்கள்)

**பண பலத்தில் ப்ளஸ்**

வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும். அதை வாங்கித் தரும் பெருமை யெல்லாம் புத்தாண்டைச் சேரும்.

என்ன, உற்சாகப் பாட்லெல்லாம் வரு கிறதே என்று விந்தையாக நினைக்கிறீர் களா? என்ன செய்வது? நாட்டில் போர் மேகம் சூழ்ந்து கொண்டு முஷாரஃபும்' வாஜ்பாயும் ஒருவரையொருவர் உறுமிக் கொண்டு உள்ளனர்.

உங்களுக்கும் ஜென்ம சனி உள்ளது. அவர் உங்களை அதிகம் படுத்திடமாட்டர் என்றாலும் ராகு அவருடன் இணையப் போகிறார். அதன் பிறகுதான் கதையே உள்ளது.

அதிகபட்சமாக உழைக்க வேண்டி வரும். எதிலும் இரட்டிப்பு கவனம் செலுத்த வேண்டும். மார்ச் மாதம் பொருளாதார எல்லை விரிவுபெறும். பணம் தடையின்றி வரும். ஆனால், வந்த வேகத்தில அதைக் கொண்டு செல்ல அடுத்து வரும் ஏப்ரல், மே, ஜூன் மாதங்கள்காத்திருக்கின்றன.

சனி, ராகு, செவ்வாய் என்று மூவருமே இணைவது, பனிபோர் மாதிரிதான். நீங்கள் பாகிஸ்தான் மாதிரி முறைப்பு காட்டாமல் இந்தியா மாதிரி விவேகம் காட்டுங்கள். தீயநட்பு வேண்டவே வேண்டாம்.

இதனிடையே மே இறுதியில் ஒரு பண வரவுக்கு சாத்தியம் உண்டு பயம் வேண் டாம். ஜூலை மாதம் இரு பெரும் கிர கங்களான குரு, சனி இருவரும் மாறுகின்ற னர். இந்த மாற்றம் கூட சுமார் ரகமே! அது முதல் அக்டோபர் வரை சுமாரான பலன்களே ஏற்படும். நவம்பர் மத்தியில்தான் உங்களின் வாழ்க்கைத் தரம் உயரும். நியாயமான வருமானமும் கிடைக்கும்.

டிசம்பரில் குரு வக்ர நிலையில் சஞ்சாரம் செய்ய உள்ளார். உங்கள் பிர சனைகளை தூர எறிந்து விடலாம். இதே காலகட்டத்தில் செவ்வாயும் கூட 6ம் இடம் வரப்போகிறார்.

சொத்து சேர்க்கைக்கும். தனப்பிராப் திக்கும் வழிஉண்டு. பணம் புழங்கும். உங் கள் மனம் துணிவும், தைரியமும் பெறும்.

2002 பல வெற்றிகளுடன் சில சங் கடங்களையும் கொடுத்து பணபலத்தில் சற்று பளஸ் நிலையைத் தரும்.



### மிதுனம்:

(மிருகசீரிடம் 3,4ம் பாதங்கள்; திருவாதிரை, பனர்புசம் 1,2,3ம் பாதங்கள்)

**புள்ளி நீங்கள் பெரிய புள்ளி...!**

ஜனவரி ஆரம்பம் உங்களுக்கு பெருத்த சுவாரஸ்யம் தரும்படியாக இல்லைத்தான். ஆனால் அதே நிலை நீடிக்கிறதா என் றால் அதுவும் இல்லை. பிப்ரவரிக்குப் பிறகு கேது கிரகத்தின் பலம் கூடுகிறது. இதுவே ஒரு திருப்பம்தான். எனவே பணம் உங் களிடம் வந்து போகத் துவங்கும். மார்ச் மத்தியிலிருந்து மே மாதம் முடிவுக்குள் பல சுவையான திருப்பங்களைப் பெற்று பிரகாசிக்கத் துவங்குவீர்கள். உங்கள் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வழிமுறை வரப்போகிறது. நீங்கள் இன் றியமையாத புள்ளியாவீர்கள் என்று கூட சொல்லலாம்.

ஜூலையிலோ உங்கள் ராசியிலேயே ஜென்மகுரு என்ற அடைமொழியுடன் உட்கார்ந்து உங்களை அச்சுறுத்தி வந்த குருவும் மாறுகிறார். தனம்-பணம் என்ற ழைக்கப்படும் இரண்டாமிடத்திற்கு வருகி றார்.

வாழ்வில் புதிய நம்பிக்கை ஒளி ஏற் பட்டு பணப்புழக்கம் சரளமாகும். ஜென்ம குரு விடுபடும் காலத்தில் ஜென்மசனி துவங்குவதுதான் ஒரு மைனஸ் பாயிண்ட். ஆனாலும் சனி உங்களை அதிகம் தொல்லைப்படுத்த மாட்டார் என்று உறுதியாக நம்பலாம். என்ன நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டிவரும் சரி உழைப்போமே என்று நீங்கள் உழைத் தாலும் அதற்கேற்ற ஊதியம் கிடைக்காது.

இதன்பிறகு உங்களுக்கு நன்மையும், நன்மை அற்ற முடிவுகளும் மாறிமாறி வரும் என்றாலும் குருவின் பிரவேசம் உங்களை ஓரளவுக்கு நல்ல விதமாகவே கொண்டு செல்லும். பணப்புழக்கம் சுத்தமாகவே தடைப்பட்டுப் போய்விடாமல் அவ்வப்போது வந்து செல்லும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படும்.

சிக் யூனிட் என்று சிலாகித்து வந்த நிறுவனங்கள் கூட லாபம் காணத்துவங்கும். சமூக மதிப்பும் உங்களுக்கு உயரும் இன் றைய சமூக அந்தஸ்து என்பது எதை வைத்து என்று உங்களுக்குத் தெரியும்.

அதற்கான ஆயுதம் பணம் அது வரப் போகிறது.

அக்டோபர் மாதத்தில் சனியின் வக்கிர நிலயையும் டிசம்பரில் குருவின்வக்ரநிலயையும் உள்ளது. அதனால் இடைப்பட்ட இந்த மாதங்களில் நூதன முயற்சிகளில் இறங் காமலிருப்பது நல்லது.

ஆக பணபலத்தைப் பொறுத்தவரை குறைந்தபட்ச உத்திரவாதம் என்று சொல் லும் விதத்தில் பணப்புழக்கம் இருக்கும்.



### கடகம்:

(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)

**ஓடிவருகிறது அதிர்ஷ்டம்**

உங்களது ராசிப்படியே வருடத்துவக் கத்தில் மூன்று கிரகங்கள் மிகச் சிறப்பாக உள்ளது உங்களின் உழைப்பிற்கு ஒரு அர்த்தம் கிடைக்கும். உங்களைக் கண்டால் ஓடி ஒளிந்த அதிர்ஷ்டம் முன்னால் வந்து நிற்கும். பொதுவில்மனநிம்மதி உண்டாகும். பலதரப்பில் இருந்தும் உதவிகள் கிடைக்கும். ஆனால் ஒருவிஷயம் நினைவில் கொள்ள வேண்டும் குடும்பத்தில் ஒரு சிலருடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரும்.

பிப்ரவரியில் மிக முக்கியமான திருப்பம் உண்டாகும். இதேசமயம் குருவும் வக்கிர நிவர்த்தி அடைந்துவிடுகிறார். பணவரத்து மிகவும் பொறுமையைச் சோதிக்கும் இருப் பினும் மனதில் ஒரு துணிவும், தெளிவும் இருக்கும். 20 தேதிக்குப்பிறகு செவ்வாயின் சிறப்பினால் நற்காரியங்கள் நிகழும். சொத்துக்கள் சேரக்கூடும் இந்த பலன்கள் மே மாதம் வரை தொடரும்.

ராகு ராசிக்கு 11ம் இடத்தில் நிலவு கிறார். இது அற்புதமான பலன் கொடுக்கும். இதற்கு எதிர்மாறாக கேது 5ல் இருப்பது சுமாரான தன்மையே! இவர் ரிஷபத்தில் உள்ள சனியைப் பார்வையிடுவதால் உங்கள் எண்ணங்கள் ஒருங்கிணையாது.


என்னதான் குரு 12ல் இருப்பினும் கோசாரப்படி 10, 11 ஆகிய இடங்கள் உத் வேகம் பெறும் நிலை இருப்பதால் பணப் புழக்கம் சரளமாகும்.

பல வழிகளில் பணபலம் பெருகும். குறிப்பாகச் சொல்லப் போனால் அயல் நாட்டு வகையில் உதவிகள் கிடைக்கும். மே மாதம் பின்பகுதிக்கு உங்கள் செலவுகள் அதிகரிக்கும். தேவையற்ற செலவுகளுக்குத் தடை போடுங்கள். ஜூலை மாதம் உங்களின் ராசிக்குள் குரு நுழைகிறார். இது அவ்வளவு சுமுகமான பலன் தருவதற்கில்லை என்று சொல்லப்பட்டாலும் 9க்குரியவரான குரு நிச்சயம் நன்மைகளைச் செய்வார்.

புகழ், பொருள் கூடும். இதே காலகட்டம் ஏழரைச்சனி தொடங்குகிறது. உங்களுக்கு, விரும்பத்தகாத சம்பவங்கள் ஏற்படலாம் தொடர்ந்து ஆகஸ்ட் மாதமும் மந்த நிலை யிலேயே இருக்கும். செப்டம்பர் மாதம்தான் உங்களை சீர்செய்யும். அன்றாட நடவடிக் கைகள் கூட சிறப்பு பெறும். அதே சமயம் புதுநபர்களிடம் கவனமாகப் பழகவும்.

அக்டோபரில் பணவரத்து அதிகரிக் கும். அது எப்படி சாத்தியம் என்று கேட்கத் தோன்றம். இதுவரை டல் அடித்துக் கொண்டிருந்த தொழில் நிமிர்ந்து கொடுக் கும். இதேமாதம் சனிக் கிரகமும் வக்கி ரம் அடைவதால் அனகூலத்திற்கு பஞ்ச மிராது. டிசம்பரில் சிறிய பிரச்சனைகள் வந்து நீங்கும்.

பணபலம் என்றால். இந்த ஆண்டு உங்களுக்கு ஒஹோ என்று சொல்ல முடி யாது எனினும் கவலைப் படும் படியாக எதுவும் இல்லை.



### சிம்மம்:

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம்)

ஜூலை வரை உங்களக் கென்ன கவலை வரப் போகிறதாம்? தற் சமயம் குருவும், ராகுவும் 11ம் ராசியில் சஞ்சரித்து வருகின்றன.

தோல்விகூட வெற்றியோகம். பணம் பிரவாகமாய் பொங்கும். வெளிவர்த்தக தொடர்புகளால் உங்கள் பொருளாதாரம் உயர்வடையும். பிப்ரவரியில் ராகு இடப் பெயர்ச்சியாகி 10ம் இடமான ரிஷபத்திற்கு வருவது இன்னும் ஒரு மைல்கல். இதன் பிறகு ஜூலையில் நிகழவுள்ள குருப்பெயர்ச்சி வரை கவலையில்லாமல் இருக்கலாம்.

மிகவும் முக்கியமான கிரகங்கள் பலம் பெற்று இருப்பதால் பிரச்சனைகள் விலகிப் போகும்.

தொழில் செய்வோர் நிறைந்த வாய்ப் புகளைப் பெற்று ஆதாயம் பெறலாம். அதற்கேற்ற வகையில் பணப்புரட்சியும் நடக்கும்.

உங்கள் திட்டங்கள் திட்டமிட்டபடி நிறைவேறும்.

என்ன, ஜூலையில் குருப்பெயர்ச்சி நடைபெறுவது உங்களுக்கு விரயஸ்தானத் திற்கு வருகிற குருவாகிறார். எனவே, இதுவரைநடைபெற்ற அதிர்ஷ்ட வாய்ப்புகள் தடைப்படலாம். ஆனால், பாருங்கள். சனிப் பெயர்ச்சியாகி 11ம் இடம் வருவது உச்ச பலனாகும். புகழ்-பொருள் இரண்டுமே சேர்ந்து கிடைக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பு கள் வரும். வராமல் வட்டியுடன் முடங்கிக் கிடந்த பணங்களும் வசூல் ஆகிவிடும்.

ஆனால், நீங்கள் ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை பொறாமை காத்துதான் ஆக வேண்டும். போட்டி பொறாமைகளுடன் உங்களையே சிலர் திட்டமிட்டு வீழ்த்த முனையலாம். சொல்-செயல் இரண்டிலும் நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். அக்டோ பரில் சனியின் வக்கிர நிவர்த்தி நற்பலன்களைத் தரவல்லதுதான் என் றாலும் நவம்பரில் செவ்வாய் பூரணபலம் பெறும்போதும் டிசம்பரில் குரு வக்கிரம் பெறுவதும் பண நடமாட்டத்தை உண்டு பண்ணும்ஙங. டிசம்பரில் எதிர்பாராத லாபமும் எற்படும். உங்கள் திறமை

மிகுதி அடுத்த வாரம் தொடரும்...

# காதில பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வ தெல்லாம்
பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்று மில்லை *-காதில பூ கந்தசாமி-*

கனவில கனநாள் எமலோ கத்திலயே இருந்திட்டனெண்டு பூமிக்கு வந்தால் முன்னால ஏ 9 வீதி திறந்து கிடக்குது, பின்னால எங்கட கூட்டுக் கட்சி எம்பி மார்! "என்னப்பா இங் காலப்பக்கம், பெரும் அதிசயமாக் கிடக்குது. யாரும் அமைச்சர் கிமச் சரை வரவேற்க வந்தனீங்களோ" வெண்டு கேட்டன்.

அதொண்டுமில்லை நாங்கள் வன்னிக்குப் போறம் எண்டு வலு பயபக்தியாச் சொன்னார் வினாய கத்தார்.

"வன்னிக்குப் போகும் சன்னி யாசி... உன் குடும்பம் என்னாகும் நீ யோசி.." எண்டு ஏதோ நினைப்பில நான் பாட, பதறியடிச்ச சங்கதியார், "ஓய் காதில பூ, இப்ப நீரேன் இந்த நேரம் பாத்து என்ர குடும்பம் கனடா வில எண்டதைக் கிண்டப்பாக்கிறீர்?" எண்டார்.

உடனே மாவை பாய்ஞ்சு, "அவற்றை ஒரு குடும்பம்" எண்டு அந்த ஒருவுக்கு கொஞ்சம் அழுத்தம் குடுத்துத் திருத்தம் சொல்ல, சங்கதியாருக்கு வந்துதே கோவம்! "உம்மட குடும்பத்த மட்டும் இந்தியா வில செட்டிலாக்கிப் போட்டு இங்க வந்து வீரம் பேசாதயும். சத்தம் போடா மல் வாகனங்கள வித்துச் சொத்துச் சேக்கிறதெல்லாத்தையும் மூடி மறைச்சிட்டுத் தியாகி வேஷம் போடா தையும். நான் வாய் திறந்தால் வண்ட வாளமெல்லாம் தண்டவாளத்தில ஏறும்" எண்டு சீற, ரவியண்ணை இடையில புகுந்து சமாதானப் படுத்தி னார்.

"நீங்களே ஆளையாள் காட்டிக் குடுத்துக் கூட்டைக் குட்டிச்சுவராக் கிப் போடுவியள் போல கிடக்கு. நான் அங்கபோய் என்னத்தைச் சொல்லி எப்படிச் சமாளிக்கிறதெண்டு முழுசாட் டத்தில இருக்கிறன். ஒற்றுமையா எல்லாரும் ஒருமித்த குரலில பேசாட் டால் பிறகு அங்க ஆளுக்காள் பிடி குடுத்து அம்பிட்டு நிக்க வேண்டியது தான்."

இதைக் கேட்டவுடன் திரும்ப எல்லாரும் கப்சிப்பாயிட, நான் மெல்லக் கேட்டன் ரவியரிட்ட, அண்ணை, அங்க போறதாச் சொல்லு றியள் எங்கயெண்டு.

"என்ன நீர் பேப்பர் படிக்கிற தில்லையோ, இல்லாட்டால் எங்களை ஒரு நக்கலுக்குக் கேக்கிறீரோ?" எண்டு ஒரு பார்வை பாத்தபடி கேட் டார் ரவியர்.

நான் சொன்னன், "ரவி யண்ணை கோவியாதையுங்கோ, நான் ஒரு பெருங் கனவில நடப்பறியாமல் தூங்கிப் போனன். இப்பதான் ஏதோ தடல் புடலாப் பெரும் மாற்றங்களெல் லாம் நடக்கிறதா அறிஞ்சு ஓடியந்து பாத்தன். நீங்கள் தான் முதல் சந்திச்சியள். என்ன ஏதெண் டொருக்கால் சொல்லுங்கோ" வெண் டன்.

"அது மிஸ்ட்டர் காதில பூ, நாங்க ளெல்லாம் ஒருக்கால் தலைவரைச் சந்திச்சிட்டு வரவெண்டு வன்னிக்குப் போறம்".- ஒரு பெருமிதத்தோட சொன்னார் வெள்ளிமலை.

"நீங்கள் போறியளோ, இல்லை உங்கள வந்து சந்திக்கச் சொன்ன வையோ?"

ரவியர் ஒரு சமாளிப்போடு சொன் னார், "எங்களை வரச் சொன்னவை தான். ஆனால் நாங்கள் அதுபற்றி ஆராய்ஞ்சு போறதா முடிவெடுத்திருக் கிறம். அதால எங்கட முடிவிலதான் போறம். அவை அழைச்சதுக்கு நன்றி தெரிவிக்க வேண்டியது எங்கட பண்பு. இதில என்ன கௌரவக் குறைச்ச லெண்டிறீர்?"

"இல்லையண்ண நான் அப்பிடிச் சொல்லேல்ல, உந்தக் கனேடியத் தமிழ் ரேடியோவில உங்கட கூட்டில இருக்கிற டெலோப் பேச்சாளர் சிறீ காந்தாதான் உங்கள ஏடகூடமாக் குற்றம் சாட்டியிருக்கிறார். ஏதோ நீங்கள் மக்களின்ர அபிலாஷை களைத் தீர்க்கிறதுக்குப் பதிலா உங்கட சொந்த அபிலாஷைகளில நிக்கிறியளாம். ரணிலுக்கும் அமைச்சர் மாருக்கும் பின்னால வழியிறியளாம். முதலாவது பட்ஜெட்டிலேயே ரெண்டு பட்டு நிண்டு கோமாளிக்கூத்தாடிப் போட்டியளாம். உங்கட குளப்படி களுக்குப் பாடம் படிப்பிக்கத்தான் வன்னிக்கு வரச் சொல்லிக்கிடக் காம்?"

சங்கதியாருக்குத் திரும்பவும் பிறஷர் ஏறிட்டுது. "அவன் இப்ப எங் களுக்கு மேல நாட்டாமை காட்டாமை காட்டத் திரியிறான். தங்கட வரி கிரியெல்லாத்தையும் மூச்சுக்காட்டா மல் மறைச்சுக் கொண்டு சுத்தம் பேச வெளிக்கிட்டிட்டான்.

"அவரை விடுங்கோ, ஏன், உங்களுக்குச் சும்மா சொன்னால் விளங்குதில்லையெண்டுதான் வன்னிக்குக் கூப்பிட்டிருக்கெண்டு அர சியல் ஆலோசகர்கூடச் சொல்லியிருக் கிறாரே?"

"அதுக்குத்தான் எங்கட தலை வர் சிவசிதம்பரம் பி.பி.சி.யில பதில் சொல்லியிருக்கிறாரே?" எண்டு ரவியண்ணை சொல்ல, அப்பிடியோ, என்ன சொன்னாரெண்டு கேட்டன்.

தான் அப்பிடி அவர் சொன்னதா கேள்விப ்படயில்லையாம், அப்பிடி யாரும் சொன்னதுக்குத் தான் என்ன சொல்லக் கிடக்காமெண்டு சொன்னா ராம்.

"அட இதையே பதிலெண்டனீங் கள். நான் ஏதோ வீறாப்பாய் பேசியிருக் குது மனிசனெண்டு நினைச்சன். உது பூனை கண்ணை மூடிக்கொண்டு நான் இன்னும் கண்ணத் திறக்கேல்ல, ஆனபடியால் இன்னும் இருட்டுத்தான் எண்டு சொல்லுறமாதிரியிருக்குது" எண்டன்.

"இங்க, அந்தாள் வயசுபோயும் தொண்டு செய்ய வந்திருக்குது, நீர் நக்கலடிக்காதயும்" எண்டு ஒரு முறைப்போட சொன்னார் ரவி யண்ணை.

"அதுசரிதான், வயசுபோன வைக்கு நாங்கள் தொண்டு செய்ய வேண்டிய காலம்போய் வயசானவை எங்களுக்குத் தொண்டு செய்யிற காலம்தான் இப்ப நடக்குது, எங்க, அவர் ஏன் வரேல்லை" யெண்டு கேட்டன்.

ரவியண்ணை பொக்கெற்றால ஒரு கடுதாசிய எடுத்துக் காட்டி, அவர் மெடிக்கல் அனுப்பியிருக்கிறாரெண் டார்.


அப்பசரி, எனக்கு நேரம் போட் டுது, நல்லபடியாப் போய் வாங்கோ, வந்தப் பிறகு சந்திக்கிறன். வெறுங் கையோட போறியள், இந்தப் பூவைப் பிடியுங்கோ சமயத்துக்கு உதவியா யிருக்குமெண்டு காதால உருவிக் கையில குடுத்துப்போட்டு விடை பெற்றுக்கொண்டன்.

யாவும் கலப்படமற்ற கற்பனை

ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
32?657




# காருண்யம்



→ கனடாவில் வாகன நெரிசல் மிக்க வீதி ஒன்றை தனது குஞ்சுகளுடன் கடக்கும் தாரா ஒன்று. இந்த தாராக் கூட்டத்திற்கு வீதியை கடந்து செல்ல வாகனங்களை தடை செய்தபடி நிற்பதும் ஒரு பறவை அனுதாபி! இயல்பாக நடைபெற்ற இந்தக் காட்சியை வீதியில் நின்ற மற்றொரு வாகனக்காரர் தனது கமராவுக்குள் தந்திரமாக அடக்கியிருக்கிறார்.

அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
105, காலி வீதி, வெள்ளவத்தையில் அமைந்திருக்கும் கிளை ...
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.hpll.com.au
436331



# வேகம்



வசீம் அக்ரமிற்கும் வகார் யூனிஸிற்கும் இடையில் முரண்பாடு நிலவுவதாகக் கூறுவதை இருவரும் மறுக்கின்றனர்.

→ வசீம் அக்ரம் சிறிய இடைவெளியின் பின்னர் பாகிஸ்தான் அணியில் மீண்டும் விளையாடத் தொடங்கியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் 400 விக்கெட்டுக்களை கைப்பற்றியவர் என்ற கிரிக்கெட் உலகின் மகத்தான ஒரு சாதனைக்குச் சொந்தக்காரரான அக்ரம் அண்மைக்காலமாக அணியில் நிலவிய உட்பூசல்கள், உடல்நலக் குறைபாடுகள் காரணமாக சில போட்டிகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். இப்போது மீண்டும் களத்தில் குதித்திருக்கும் அக்ரம் நான் பழைய வசீம் அக்ரமாக தொடர்ந்தும் துடுப்பாட்ட வீரர்களை பந்து வீச்சால் அச்சுறுத்துவேன் என்பதை சார்ஜா போட்டியில் நிரூபித்தார்.

# பச்சை ஓவியம்



← விந்தியாசமான தம்பதிகள் இவர்கள். படத்தில் இருக்கும் இந்த சுவிடிஷ் பெண்ணின் உடலில் விதம் விதமான சித்திரங்களை "பச்சை குத்தி" அழகு பார்ப்பதுதான் அவரது கணவரின் பொழுது போக்கு. திருமணமான புதிதில் "உன் மேனியை கொஞ்சம் பச்சையாகத் தொட்டுக்கொள்கிறேன்" என்று ஆரம்பித்த இந்த பொழுது போக்கு காலப் போக்கில் சீரியஸாக வளர்ந்து கின்னஸ் புத்தகம்வரை சென்று விட்டது. கடந்த 20 வருடங்களாக வரையப்பட்ட 2500 வகையான "பச்சை ஓவியங்கள்" இந்தப் பெண்ணின் உடலில் காணப்படுகின்றன.

# இயற்கை வளம்



← உலகிலேயே மிகப் பெரிய கடலடி எண்ணெய் அகழ்வு நிலையத்தைத்தான் படத்தில் காண்கிறீர்கள். வடகடலில் காணப்படும் இந்த பெற்றோலிய அகழ்வு நிலையம் நோர்வே நாட்டுக்குச் சொந்தமானது. 110 கோடி ஸ்டேலிங் பவுன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த நிலையத்தில் 8 லட்சத்து 16 ஆயிரம் தொன் எடையுள்ள பெற்றோலியத்தைச் சேமித்து வைக்க முடியும். ஒவ்வொன்றும் 204 மீற்றர் சுற்றளவு கொண்ட 4 தூண்கள் இந்த எண்ணெய் குதத்தை தாங்கி நிற்கின்றன. செப்டம்பர் 11ல் அமெரிக்காவில் தரைமட்டமான உலக வர்த்தக நிலையத்தைப் போன்று மூன்று கட்டடங்களை தாங்கும் சக்தி இந்தத் தூண்களுக்கு இருக்கிறதாம்.

## 1வது பிறந்ததின வாழ்த்து



**செல்வி விதுஷிகா** 24.04.2002

யாழ் பாண்டியூரைப் பிறப்பிடமாகக் கொண்ட விஸ்வன்-ரெஜினா தம்பதிகளின் செல்வப் புதல்வி விதுஷிகா தனது முதலாவது பிறந்தநாளை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். விதுஷி குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், அக்காமார், அத்தான்மார், அண்ணாமார், மச்சான்மார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.